உ

கடவுள் துணை.

மகாமகுத்துவம்பொருந்திய கும்பமகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# ஈஸ்வரநாடிசோதிடம்.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்.

29MAR
MADR

இஃது,

ஏளூர். பெரும்பாளிப்பட்டி

இராமசாமிபிள்ளையவர்கள் குமாரர்

பாலக்கோடு ஜோசியம்

## ஆர். அப்புசாமிபிள்ளையால்

தம்மிடமிருந்த ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு

எழுதிமுடிவுபெற்றதை,

---

சிங்களாந்தபுரம்.

ரிஜல்ட்டுஸ்கூல் மானேஜரும்

நெடுங்காலம் சோதிடப்பண்டிதருமாகிய

வெ. வாசுதேவம்பிள்ளையவர்களால்

பார்வையிடுவித்து

இரத்தினமங்கலம்

## ஷ. கோவிந்தராஜமுதலியாரால்

சென்னை:

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1927

---

இதன் விலை] ரிஜிஸ்டர்காப்பிரைட். [ரூபா 1 8

178298

ஆவணக்காப்பக

சென்னை-600 008.

கடவுள் துணை.

உமாமஹேஸ்வர சம்பாஷணையாகிய

# ஈஸ்வர நாடி சோதிடம்

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 MAR 1928
MADRAS

மேடசனி ஆயுள்பலன்.

மேட லக்கினம்.




(1) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி நீச்சம்பெற்று ஏகனாய்த் தனித்து சப்தமகேந்திரம் பெற்ற பஞ்சம பாக்கிய விரையாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால்சனி திசைபுக்தி பத்தொன்பது வயதில் ஜாதகன் மரணமாவனென்பர்.

மேடலக்கினத்தில் சனி-ச. 7-ல் சூ-பு.

(2) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி சதுர்த்தகேந்திராதிபதியுடன்கூடி ஏழாமிடமேறிய ரவி புதனிருவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நாற்பதிற்குமேல் மரணம் சனிபுக்தி விவாகம் களத்திரரோகம் பிதுர்கர்மமுண்டென்பர்.

மேடலக்கினத்தில் சனி. 7-ல்சூ.

(3) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து சப்தமகேந்திரமேறிய நீச்ச பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பதுவரையில்தீர்க்கம் சனிதிசையில் பிதுர்மாதுர் கர்மம் ஸ்தானப்ரஷ்டம் களத்திரரோகமென்பர்.

மேடலக்கினத்தில் சனி 8-ல் குரு-சு.

(4) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் த்விதிய சப்தம பாக்கிய விரையாதிபதிகள் கூடியிருந்தால் சனிதிசை வருங்காலம் நாற்பத்தைந்திற்கு மேல் ஜாதகன் மரணத்தை யடைவனென்பர்.

மேடலக்கினத்தில் சனி-கே 10-செ.

(5) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனிநீசனால் கேதுவுடன் கூடி தசமகேந்திரம் பெற்ற லக்கின அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் நாற்பதிற்குமேல் ஜாதகன்மரணம் ரோகதேகி சனிதிசை சமயோகம் சகோதரதுக்கம் பாகப்பிரிதல் ஜாதகனுக்கு விவகாரமுதலிய பலனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | ல | சனி கே | |
| | | | |
| | | | |
| | | செ சு | |

(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி கேதுவுடன்கூடி சுகாதிபதியுடன் சப்தம கேந்திரமேறியலக்கின அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் அருபத்துமூன்றுவயதில் ஜாதகன் அயலூரில்றிணத்தினால் மரணமாவனென்பர்.

மேடலக்கினம் 2-ல் சனி-பு-சு. 8-ல் ரா.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிதனதிருதியரோகசப்தமாதிபதிகளுடன்கூடி ஆயுள்ஸ்தானமேறிய ஞானகாரகனால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஐம்பத்தொன்பதில் ஜாதகன்மரணம் சனிபுக்தி முப்பத்திரண்டில் களத்திரகண்டம் நிவர்த்தியென்பர்.

மேடலக்கினம் 2-ல் சனி-செ 8-ல் சு.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின அஷ்டமாதிபதியுடன்கூடி சதுர்த்த கேந்திராதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் எழுபத்திரண்டிற்குமேல் ஜாதகன்மரணம் சனிதிசையில் சகோதரகண்டம் களத்திரமரணம் கிரகவிர்த்தி மறுவிவாகமுண்டென்பர்.

மேடலக்கினம் 2-ல் சனி-கே. 7-ல் செ. 8-ல் குரு.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதிபதி சப்தம கேந்திர மேறியிருந்தால் ஜாதகன் பத்தொன்பது வயதில் கொலையுண்டு மரணமாவனென்பர்.

மேடலக்கினம் 2-ல் சனி. 5-ல் செ. 8-ல் குரு.

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிஏகனாய்தனித்து பாக்கிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதிபஞ்சம திரிகோணமேறியிருந்தால் எண்பத்தொன்பது வயதில்ஜாதகன் புண்ணியஸ்தலத்தில் ஜலரோகத்தினால் மரணமாவனென்பர்.




(11) (மூன்றுமிடம்)

மூன்றுமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஏகனாய்தனித்து நவதிரிகோண மேறிய த்விதிய பஞ்சம சப்தமாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் உடனே அரிட்டமாவனென்பர்

மேடலக்கினம் 3-ல் சனி. 11-ல் செ-சூ.

(12) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி சூரியனுடன்கூடி லாபஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் நாற்பது வயதுவரையில் தீர்க்கமென்பர்.

மேடலக்கினம் 3-ல் சனி-ரா 4-ல் செ.

(13) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன் கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி நீச்சனாய் சதுர்த்தகேந்திரமேறி சனிதிசை பிற்பாகத்தில் ஜெனனமானால் பதினேழுவயதில் ஜாதகன் மரணம் அதற்குமுன் சகோதரி கர்ப்பமென்பர்.

மேடலக்கினத்தில் செ. 3-ல் சனி-ச 7-ல் சூ.

(14) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகியசனிநான்காமாதியுடன் கூடி ஒருவரும்பாராமல் ஸ்வக்ஷேத்திர அஷ்டமஸ்தானாதிபதியை நீச்சரவியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபத்திரண்டு வயதுவரையில் தீர்க்கமென்பர்.

மேடலக்கினம் 3-ல் சனி-செ. 7-ல் குரு.

(15) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின அஷ்டமாதிபதியுடன்கூடி சப்தமகேந்திரமேறிய பாக்கிய விரயாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் எழுபதுவரையில் தீர்க்கம் சனிதிசையில் புத்திரவிவாகம் உத்தியோக லாபம் பிதுர்கர்மமென்பர்




### (16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும் பாராமல் அதற்செட்டில் எட்டாமாதி கேதுவுடன் கூடியிருந்தால் சனிதிசை எழுபத்துமுன்றில் ஜாதகன் துர்தேவதையால் மரணம் அதற்குமுந்தி சகோதரன் மரணமாவனென்பர்.

மேடலக்கினம் 2-ல் சூ-பு 4-ல் சனி.

**(17)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் த்விதியஸ்தானமேறிய ரவி புதனிருவரால் அஷ்டமஸ்தானத்தை நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நாற்பது வரையில் தீர்க்கமென்பர்.

மேடலக்கினம் 2-ல் பு 4-ல் சனி.

**(18)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று ஒருவரும்பாராமல் திருதியரோகாதிபதியால் ஆயுள் ஸ்தானத்தை நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை முப்பத்தொன்பதில் ஜாதகன் ரிணம்கண்டு மரணமாவனென்பர்.

மேடலக்கினம் 4-ல் சனி. 9-ல் செ.

**(19)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து நவதிரிகோணமேறிய லக்கின அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அருபத்தைந்திற்கு மேல் பிளவைகண்டு மரணமாவனென்பர்.

மேடலக்கினம் 4-ல் சனி-பு-ரா 8-ல் குரு.

**(20)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிபுதன் ராகுவுடன் கூடி அஷ்டமஸ்தானமேறிய பாக்கிய விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் மாதமொன்றில் மரணமாவனென்பர்.




### (21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து லாபமேறிய திருதிய சுகரோகாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இரண்டுவயதில்நேத்திரத்தில் ரோகமுண்டாகி மரணமடைவனென்பர்.

மேடலக்கினம் 2-ல் ச. 5-ல் சனி-செ.

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் த்விதியஸ்தானத்தில் உச்சம்பெற்ற சதுர்த்தகேந்திராதிபதியால் அஷ்டமஸ்தானத்தை நேரே நோக்கப்பட்டிருந்தால் இரட்டைபெண்ணாக ஜெனித்து மாதமொன்றிலொன்று மரித்துப் போகுமென்பர்.

மேடலக்கினம் 5-ல் சனி-சூ-செ-சு 11-ல் குரு.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரவி குஜன் சுக்கிரன் மூவருடன்கூடி லாபமேறிய பாக்கிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஓராண்டில் மரணமாவனென்பர்

மேடலக்கினம் 5-ல் சனி. 8-ல் செ.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் செவ்வாயிருந்தால் இரட்டையாணாக ஜெனித்து பின்பிறந்தது அடுத்து மரித்துப்போகுமென்பர்

மேடலக்கினம் 5-ல் சனி-செ. 8-ல் பு.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் திருதியரோகாதிபதி ஏறியிருந்தால் அருபத்திரண்டுவரையில் ஜாதகன் தீர்க்கம் சனிதிசை முற்பாகம் சகோதரமரணம் பிதுர்கர்மம் களத்திரரோகமென்பர்.




(26) (ஆறுமிடம்)

ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து விரையமடைந்த லக்கின அஷ்டமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசைபுக்தி அருபத்தைந்தில் ஜாதகன் ஜுரத்தினால் மரணமாவனென்பர்.

மேடலக்கினம் 6-ல் சனி 7-ல் குரு-ரா.

(27) ஆறுமிடத்தில் ஆயுள்காரனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் அதற்கிரண்டிலிருக்கும் பாக்ய விரையாதிபதியுடன் ராகு கூடியிருந்தால் சனிதிசை இருபத்திரண்டு வயதில் ஜாதகன்மரணம் அக்காலம் குடும்பத்தில் கலகமென்பர்.

மேடலக்கினம் 6-ல் சனி-கே. 12-ல் பு.

(28) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி விரையமேறிய திருதியரோகாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஓராண்டிற்குள் ஜாதகனும் சகோதரமரணம்அதற்குமுன்பிதுர் ரோகம் பந்துகலகம் நாற்கால்ஜீவன் நஷ்டமென்பர்.

மேடலக்கினம் 6-ல் சனி. 12ல் சூ.

(29) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து விரையமடைந்த பஞ்சமதிரிகோணாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிபுக்திபில் பிதாவிஷகடி பீடையால் மரணம் சனிதிசையில் ஜாதகனுக்கு வித்தையும் சகலவிதமேன்மையும் விவாகமுண்டாம் கெர்ப்ப கெடுதலென்பர்.

மேடலக்கினம் 2-ல் செ 6-ல் சனி.

(30) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்துஒருவரும்பாராமல் எட்டாமாதி த்விதியஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்தெட்டுவயதில் மரணம் சனிதிசை முற்பாகச்சுகம் பிற்பாகம் கஷ்டபலனென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனியுச்சனாய் ஏகனாகதனித்து லக்கினகேந்திரம்பெற்ற த்விதிய சப்தமாதிபதியால் நேரே நோக்கப் பட்டிருந்தால் ஜாதகன் இருபத்தைந்து வயதில் துர்மரணத்தையடைவனென்பர்.

மேடலக்கினம் 7-ல் சனி-செ.

(32) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் சனிதிசையில்விவாகம் ஜாதகன் களத்திரத்தைவிட்டு அன்னியஸ்திரீயுடன் அலைந்துதிரிவனென்பர்.

மேடலக்கினம் 7-ல் சனி-சு.

(33) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி த்விதிப சப்தமாதிபதியுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் முப்பத்தாறு வரையில் தீர்க்கம் ஜாதகன் பெண்மூலம் கவலையுடையவனா யிருப்பனென்பர்.

மேடலக்கினத்தில் செ. 7-ல் சனி.

(34) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து லக்கினகேந்திரம் பெற்ற ஸ்வக்ஷேத்திர ஜென்ம அஷ்டமாதி பதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் மூன்றுவயதில்ஜலரோகத்தினால் மரணம் அக்காலம் பிதாவுக்கு உத்தியோக முண்டென்பர்.

மேடலக்கினம் 3-ல் செ-சு. 7-ல் சனி.

(35) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி த்விதிய சப்தமாதிபதியுடன்கூடி திருதியஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் அறுபத்தைந்துவரையில் தீர்க்கமென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும் பாராமல் எட்டாமாதிசப்தமகேந்திரமேறியிருந்தால் முப்பதுமுதல் குடும்பத்தில்துன்பம் றுணபாதை முப்பத்துமூன்றில் ஜாதகன் மரணமென்பர்.

மேடலக்கினம் 2-ல் குரு. 8-ல் சனி.

(37) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து த்விதியஸ்தானமேறிய பாக்கிய விரையாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் நாற்பத்தேழுவரையில் ஜாதகன்தீர்க்கம் சனிபுக்தி முப்பத்தொன்றில் பிதுர்காமம் ராஜாக்கள்மூலம் பொருள் நஷ்டமென்பர்.

மேடலக்கினம் 8-ல் சனி-சு.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சதுர்த்த கேந்திராதிபதியுடன்கூடி ஒருவரும நோக்காமலிருந்தால் பிதாவுக்குஉத்தியோக விர்த்தியுண்டாம் ஜாதகனுக்கு வித்தைமேன்மை விவாகம் எத்தினமாகி மாறுபட்டு சகோதரனுக்கு முடியுமென்பர்.

மேடலக்கினத்தில் செ 8-ல் சனி.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து லக்கினகேந்திரம்பெற்ற ஆயுள்ஸ்தானாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜெனனகாலமுதல் கஷ்டம் ஜாதகன் எட்டுவயதில் மரணத்தையடைவனென்பர்.

மேடலக்கினம் 2-ல் சூ 8-ல் சனி. 12-ல் குரு.

**(40)** எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு அதற்குப்பஞ்சமதிரிகோணத்தில் வியாழனிருந்தால் ஜாதகன் முப்பத்தைந்து வரையில் தீர்க்கம் பெண்கள்மூலம் துன்பப்படுவனென்பர்.




**(41)** (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து லக்கினகேந்திரமபெற்ற பாக்கிய விரையாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை ஆதி பின்னும் விவாகம் அன்னியதேசங்கள் சுற்றித் திரிதலென்பர்.

மேடலக்கினம் 3-ல் குரு-ரா. 9-ல் சனி.

**(42)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து திருதியஸ்தானமேறிய வியாழன் ராகுவிருவரால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் முப்பத்தைந்து வரையில் தீர்க்கம் களத்திரமூலம் துன்பபடுவனென்பர்

மேடலக்கினம் 6-ல் ச 9-ல் சனி 12-ல் செ-சூ,

**(43)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி சூரியனுடன்கூடி விரையமடைந்து சதுர்த்த கேந்திராதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் முப்பத்தைந்து வரையில் தீர்க்கமென்பர்.

மேடலக்கினம் 3-ல் குரு 9-ல் சனி-கே.

**(44)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய கேதுவுடன்கூடி திருதியமேறிய பாக்கிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் கர்மலாபாதிபதி புக்தியில் களத்திரமரணம் தொழில்குறைவு ஸ்தானபேதமென்பர்.

மேடலக்கினம் 3-ல் சூ. 6-ல் செ-சு 9-ல் சனி.

**(45)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி சுக்கிரனுடன்கூடி ரோகஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் நாற்பதுவயதில் அனாதியாய் அடவியில் மரணத்தை யடைவனென்பர்.




## (46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய் ஏகனாக தனித்து நான்காமாதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி சப்தமகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் மூன்றுவயதில் ஜலரோகத்தினால் மரணமென்பர்.

மேடலக்கினம் 9-ல் செ. 10-ல் சனி.

**(47)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் அதற்கு விரையஸ்தானத்தில் லக்கின அஷ்டமாதிபதி ஏறியிருந்தால் ஜாதகன் பதினான்கு வயதில் மறைந்துபோவனென்பர்.

மேடலக்கினம் 10-ல் சனி-சூ-பு.

**(48)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதிய பஞ்சம ரோகாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் பதினெட்டு வயதுவரையில் தீர்க்கமென்பர்.

மேடலக்கினம் 6-ல் குரு 10-ல் சனி.

**(49)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ரோகஸ்தானமேறிய பாக்கிய விரையாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் முப்பது வயதுவரையில தீர்க்கமென்பர்.

மேடலக்கினம் 10-ல் சனி. 11ல் சு-செ-கே.

**(50)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாக நின்று ஒருவரும்பாராமல் எட்டாமாதி சுக்கிரன் கேதுவுடன்கூடி லாபஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் ஐம்பதுவரையில் தீர்க்கம் சனிபுத்தி விவாகமென்பர்,




## (51) (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில ஆயுள்காரகனாகிய சனி ரவி சுக்கிரன் ராகு மூவருடன் கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் ஜாதகனுக்கு இருபத்தாறுவரையில சுகமில்லை ஜாதகனல பிதாவுக்குந்துன்பம் கஷ்டம் ரோகம் சனிதிசை ஆதி அபசாரால் துன்பம் குடும்பங் குலைவு கர்மாதிபுக்தியில் பிதூர்மரணமென்பர்,

மேடலக்கினம் 3-ல் குரு 4-ல் சனி.

(52) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து திருதியமேறிய பாக்கிய விரயாதிபதியால் நோக்கப்பட்டு சனி திசையில் பிறந்தால் அருபதிற்குமேல் மரணம் ஜாதகன் இனிமையான வியாபாரம் செய்வனென்பர்.

மேடலக்கினம் 4-ல் செ. 11-ல் சனி.

(53) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து சதுர்த்தகேந்திரமேறிய லக்கின அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இராஜாங்கமுடையவனாய் அருபதிற்குமேல் மரணத்தை யடைவனென்பர்.

மேடலக்கினம் 11-ல் சனி-பு

(54) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதியரோகாதிபதியுடன் கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் இளமையில் ஜாதகன் பெண்மூலம் சொத்தால் விர்த்தியடைவன் முப்பதுவரையில் தீர்க்கமென்பர்.

மேடலக்கினம் 5-ல் பு 8-ல் கே. 11-ல் சனி-ச.

(55) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சுகாதிபதியுடன்கூடி திருதியரோகாதிபதியால் நேரே நோக்கப்பட்டு அஷ்டமஸ்தானத்தில் கேதுஇருந்தால் அருபத்தேழுவயதில் விஷகடியால் ஜாதகன் மரணமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ரோகஸ்தானமேறிய பாக்கிய விரயாதிபதியால்நேரே நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் சனிகாரகங்களைக்கொண்டு விர்த்தியடைந்து அருபதிற்குமேல் மரணமாவனெனபர்.

மேடலக்கினம் 7-ல் ச. 12-ல் சனி.

(57) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து ஒருவரும்பாராமல் அதற்கெட்டில் சந்திரனிருந்தால் சனிதிசை விவாகம் களத்திரமரணம் விவகாரம் அடிக்கடிரோகம் ஐம்பத்துநான்கிற்குமேல் மரணமென்பர்.

மேடலக்கினம் 6-ல் சூ-பு 12-ல் சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய்தனித்து ரோகஸ்தானமேறியநிருதிய பஞ்சமரோகாதிபதிகளாலநேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசைகடைசி, தாய்மரணம் ஜாதகன் ஐம்பதிற்குமேல் மரணமென்பர்.

மேடலக்கினம் 6-ல் செ. 12-ல் சனி-சு

(59) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி த்விதிய சப்தமாதிபதியுடன்கூடி ரோகஸ்தானமேறிய லக்கின அஷ்டமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால ஜாதகன் நாற்பதகேழில் மரணம் அடுத்து ஜேஷ்டபுத்திரனு மாணமென்பர்.

மேடலக்கினம் 6-ல் சூ 8-ல் செ. 12-ல் சனி-ச.

(60) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி நான்காமாதியுடனகூடி பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானதில் குஜனிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லே சனிபுக்தி திங்களொன்பதில் அக்கினிமூலம் மரணம் பிதுர்ரோகம் தாய் கர்மமென்பர்.

மேடலக்கினம் சக்கரம் - 12,

முற்றிற்று.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்

ரிடபசனி ஆயுள்பலன்.

ரிடப  லக்கினம்.


(1) உதையத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து ஒருவரும் பாராமல் அஷ்டமஸ்தானத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் வெகுதேசங்கள் சுற்றி அனேககர்மங்களை செய்து நாற்பத்தெட்டு வயதில் மரணமாவனென்பர்.

ரிடபலக்கினத்தில் சனி. 3-ல் ச 9-ல் குரு.

(2) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து நவதிரிகோணமேறிய. அஷ்டமலாபாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமாதியை ஸ்வக்ஷேத்திர சந்திரனால் பார்க்கப்பட்டு மிருந்தால் ஜாதகன் ஐம்பதுவயதில் முகவாத ஜன்னியால் மரணமாவனென்பர்

ரிடபலக்கினத்தில் சனி. 4-ல் ச. 10-ல் குரு-பு.

(3) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் த்விதிய பஞ்சமாதிபதியுடன் தசமகேந்திரமேறியஎட்டாமாதியை சந்திரனால் நேரே நோக்கப்பட்டிருந்தால ஐம்பதிற்குமேல் ஜாதகன் மரணம ஜாதகனிறந்தபின்பு ருணத்தினால சகலமுமழிந்து களத்திரமு மரணமென்பர்.

ரிடபலக்கினத்தில் சனி

(4) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடமும் சுக்கமாயிருந்தால் ஜாதகன் ஐம்பதிற்குமேல் மரணம் சனிதிசை பிதுர்மரணம் புத்திரன்மரணம் அடிக்கடி தொழில்கெடுதல் களத்திரரோகமென்பர்.

ரிடபலக்கினத்தில் சனி-பு 2-ல் குரு.

(5) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி த்விதிய பஞ்சமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை எட்டாமாதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தவபுத்திரன் வெகுதீர்க்கம் செல்வனா யிருப்பனென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஜென்மரோகாதிபதியுடன்கூடி ஒருவரும் நோக்காமல் எட்டாமாதி வுச்சம் பெற்று சனிதிசையும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமெனபர்.

ரிடபலக்கினம் 2-ல் சனி. 5-ல் குரு.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி பஞ்சமதிரிகோணமேறியிருந்தால் சனிபுக்திகடைசி ஏழுவயதில் ஜாதகன்மரணம் அதற்குமுந்தி சிறிய பிதா மரணமென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் சனி-சூ. 8-ல் செ.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி சதுர்த்தகேந்திராதிபதியுடன்கூடி சப்தம விரயாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் எழுபதிற்குமேல் மரணம் சனிதிசை சௌக்கியம் மேலானபலன் களத்திர சுகமுண்டென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் சனி-பு-குரு-சு.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி புதன் குரு சுக்கிரன் மூவருடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் ஜாதகனுக்கு மத்தியவயதில நேத்திரபின்னமுண்டாம் ஐம்பதிற்குமேல் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் சனி-சு-சூ-பு, 7-ல் செ.

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி லக்கின த்விதிய சுக பஞ்சமரோகாதிபதிகளுடன்கூடி சப்தம கேந்திரமேறிய அங்காரகனுல் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபத்திரண்டுவயதில் மரணமாவனென்பர்.




(11) (மூன்றுமிடம்)

மூன்றுமிடத்தில் ஆயுள் காரகனுகிய சனி ராகுவுடன்கூடி ஒருவரும் பாராமல் எட்டாமிடத்தை பஞ்சமதிரிகோணமேறிய பௌமனுல் பார்க்கப்பட்டிருந்தால் தாய்க்கு உதிரரோகம் ஜாதகன்பத்து நாளில் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 3-ல் சனி-குரு. 5-ல் செ.

(12) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி அஷ்டம லாபாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை பூமகனுல் நாலகாம்பார்வை பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன்எழுபதுவயதில் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 3-ல் சனி. 7-ல் குரு-சூ.

(13) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து சதுர்த்தகேந்திராதிபதியுடன் சப்தமகேந்திரமேறிய எட்டாமாதியால் நோக்கப்பட்டிருந்தால் சனிதிசையில் சோரால் மித்திராள்கலகம் விவகாரம் பொருள்நஷ்டம் கண்டாதி கண்டங்களுண்டென்பர்.

ரிடபலக்கினத்தில் ச. 3-ல் சனி. 7-ல் குரு.

**(14)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று எட்டாமாதிபதியால் ஒன்பதாம்பார்வையும் எட்டாமாதியை மூன்றுமாதியால் ஏழாம்பார்வையுமாக நோக்கப்பட்டிருந்தால் எழுபத்துநான்கில் ஜாதகன்மரணம் சனிதிசையில் சோரர்பயம் விவகாரம் ஸ்தலயாத்திரை யுண்டென்பர்.

ரிடபலக்கினம் 8-ல் சனி-ரா. 7-ல் குரு. 8 ல் சூ.

**(15)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்கூடி பிரகஸ்பதியால ஒன்பதாம்பார்வை பார்க்கப்பட்டு எட்டாமிடத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் சீசஸ்ரீ பால்குடித்து மூன்றுமாதத்தில் மரணம் அதற்கு முந்திதாய் மரணமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | |
| | | | சனி ரா |
| | | | |
| குரு | | | |

**(16)** (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ராகுவுடன்கூடி ஆயுள்ஸ்தான மேறிய ஸ்வக்ஷேத்திர அஷ்டம லாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால சனிதிசையில விவகாரம் பொருள் விரையமுண்டாம் ஜாதகன் அருபத்தைந்தில் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 4-ல் சனி-குரு 10-ல் பு.

**(17)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி அஷ்டமலாபாதிபதியுடன்கூடி கர்மஸ்தானமேறிய தன பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அனேகதேசங்கள் சுற்றிவருவன் நாற்பத்துநான்குவயதில தீர்க்கமென்பர்.

ரிடபலக்கினம் 4-ல் சனி. 10-ல் குரு.

**(18)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து தசமகேந்திரமேறிய அஷ்டம லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் எட்டுவயதிற்குள் தாய்தந்தையர்களிறந்து ஜாதகன் அன்னியரிடம் வளர்வவனென்பர்.

ரிடபலக்கினம் 3-ல் குரு-கே-ச 4-ல் சனி.

**(19)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று ஒருவரும் நோக்காமல் எட்டாமாதி சந்திரன் கேதுவுடன்கூடி திருதியஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் வளரவளர மனைபூமி பொருள்களெல்லா மழிந்து போகுமென்பர்.

ரிடபலக்கினம் 4-ல் சனி-குரு 8-ல் ரா.

(20) நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி அஷ்டமலாபாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் நாற்பத்தேழுவயதில் மரணமாவனென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி மூன்ருமாதியுடன்கூடி ஒருவரும் நோக்காமல் எட்டாமிடத்தை ஜென்மரோகாதிபதியால் நேரே பார்க்கப் பட்டிருந்தால் சனிபுக்தி எண்பதாவது வயதில் ஜாதகன் மரணம் அன்னியரால் கர்மமென்பர்.

ரிடபலக்கினம் 5-ல் சனி-பு-குரு

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி த்விதிய பஞ்சமாஷ்டமலாபாதிபதிகளுடன் கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் ஜாதகன் நான்குவயதில் வயிற்றுக்கடுப்பால் மரணமாவனென்பர்.

ரிடபலக்கினம் 5-ல் சனி. 11-ல் ச-குரு-சு.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து லாபமேறிய சந்திரன் குரு சுக்கிரன் மூவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிபுக்தி இருபத்தொன்றில் புதையலுண்டாம் அவையெல்லாமழிந்து ஐம்பத்தொருவயதில் சனிபுக்தியில் ஜாதகன்மரணமென்பர்.

ரிடபலக்கினம் 5-ல் சனி-சு. 11-ல் குரு.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஜென்மரோகாதிபதியுடன் கூடி அஷ்டமலாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜெனனமுதல் ஜாதகன்ரோகத்தால் மெலிந்து ஐந்துமாதத்தில் மரணமடைவனென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் செ. 5-ல் சனி.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து த்விதியஸ்தானமேறிவ சப்தம விரையாதிபதியால் நோக்கப்பட்டு சனிதிசையும் சேர்ந்தால் குடும்பமிகவும் கஷடப்படும்தரித்திரமுண்டென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | செ | ல | சு |
| | | | |
| | | | |
| | | சனி | |

## (26) (ஆருமிடம்)

ஆருமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி உச்சம்பெற்று சப்தம விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டு அஷ்டமஸ்தானத்தில் சுக்கிரதிருஷ்டியு மிருக்குமானால் ஜாதகன் நான்குவயதில் மரணம் பிதாபின்னால் கஷ்டப்படுவனென்பர்.

ரிடபலக்கினம் 3-ல் குரு 6-ல் சனி 9-ல் செ.

**(27)** ஆருமிடத்தில் ஆயுள்காரனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் உச்சம்பெற்ற எட்டாமாதிபதியை சப்தம விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகனுக்கு முகததில் மச்சமுண்டாம், றிணம்கண்டு மாதமொன்றில் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் குரு-சூ-பு. 6-ல் சனி.

**(28)** ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து த்விதியசுக பஞ்சமாதிபதிகளுடன்கூடி தனஸ்தானமேறிய அஷ்டம பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் மூன்றுவயதில்ஜாதகன் வைசூரியால் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 3-ல் குரு-சூ-பு-சு 6-ல் சனி-கே.

**(29)** ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி ரவி புதன் சுக்கிரன் மூவருடன்சேர்ந்து திருதியஸ்தான மேறியிருந்தால் சனிபுக்தி பத்துவயதில் ஜாதகன் ரோகத்தால் வாதை படுவனென்பர்

ரிடபலக்கினம் 3-ல் ச. 6-ல் சனி-சூ 9-ல் ரா.

**(30)** ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி சதுர்த்தகேந்திராதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் பிதுர்ஸ்தானத்தில ராகுமிருந்து சந்திரனால் நேரே நோக்கப்பட்டிருந்தால் தந்தை தீவாந்திரம் போவனென்பர்.

| | | | |
|---|---|---|---|
| சூ-ச குரு | | ல | |
| | | | |
| | | | |
| | சனி | | |

## (31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி ஏகனாய்தனித்து திருதிய சுகாதிபதிகளுடன்கூடி எட்டா மாதியால் ஒன்பதாம் பார்வை பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் மூன்றுவயதில் மரணமாவனென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் சு. 7-ல் சனி. 11-ல் செ-குரு.

(32) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்துசப்தம விரயாதிபதிகளுடன்கூடிய பிரகஸ்பதியால் ஒன்பதாம் பார்வை நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சுக்கிரதிருஷ்டியு மிருக்குமாகில் ஜாதகன் பதினேழுமாதத்தில மரணமாவனெனபர்.

ரிடபலக்கினம் 4-ல் செ. 7-ல் சனி-சூ-பு. 11-ல் குரு.

(33) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி த்விதிய சுகபஞ்சமாதிபதிகளுடன்கூடி பூமகனால் நான்காம்பார்வை பார்க்கப்பட்டு எட்டாமாதி லாபமேறியிருந்தால் ஜாதகன் பத்தொன்பது வயதில் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 7-ல் சனி-பு-சு 8-ல் ரா.

(34) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின த்விதிய பஞ்சம ரோகாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை வாரத்தில் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் செ. 4-ல் குரு. 7-ல் சனி-ச.

(35) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதியாதிபதியுடன் கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை நிலமகனால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி நான்காமிடமேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமுண்டாம் தாய் மாதமொன்றில் மரணமடைவளென்பர்.

| | | | |
|---|---|---|---|
| | | ல | ச |
| | | | குரு |
| | | | |
| சனி | | | |

(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து திருதியாதி பதியால் நேரே நோக்கப்பட்டு அஷ்டம ஸ்தானாதிபதி உச்சம்பெற்றிருந்தால் ஜாதகன் ஜெனித்த மூன்றும்நாள் மரணமாவனென்பர்.

ரிடபலக்கினத்தில் செ 4-ல் குரு 8-ல் சனி.

(37) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து லக்கினகேந்திரம்பெற்ற சப்தம விரயாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமாதி சுகஸ்தானமேறியிருந்தால் சனிதிசை அருபத்தாறில் ஜாதகனுக்குப் பிள்ளைவகனாடு நிவர்த்தியாகி திசைகடைசியில் மரணமாவனென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் சூ. 8-ல் சனி-ரா.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன் கூடி த்விதியஸ்தானமேறிய சதுர்த்த கேந்திராதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் போகவானாய் நாற்பதித்திரண்டு வயதில் மரணமாவனென்பர்.

ரிடபலக்கினம் 4-ல் குரு. 5-ல் செ. 8-ல் சனி-சு.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஜென்ம ரோகாதிபதியுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறிய அங்காரகனால் நோக்கப்பட்டு எட்டாமாதி சுகஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் இருபத்தைந்துவரையில் தீர்க்கமென்பர்.

ரிடபலக்கினம் 3-ல் குரு 8-ல் சனி.

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும் பாராமல் அதற்கெட்டாமிடத்தில் அஷ்டமலாபாதிபதி வுச்சம்பெற்றிருந்தால் ஜாதகன் முப்பத்திரண்டு வயதுவரையில் தீர்க்கமென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரம்பெற்று ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் சுக்கிரனிருந்து சனிதிசையில்பிறந்தால் முதல் தாய்க்கும் பின்பு ஜாதகனுக்கும்மரணமென்பர்.

ரிடபலக்கினம் 4-ல் குரு 6-ல்- செ 9-ல் சனி.

(42) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து சப்தம விரையாதிபதியால் நானகாம்பார்வை பார்க்கப்பட்டு எட்டாமாதி நான்காமிடமேறியிருந்தால் ஜாதகன் முப்பது வரையில் தீர்க்கமென்பர்.

ரிடபலக்கினம் 8-ல் சு-செ 9-ல் சனி.

(43) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சந்திரன் செவ்வாய்கூடியிருந்தால் ஜாதகன் முப்பத்துநான்குவயதுவரையில் தீர்க்கம் சனிபுத்தி பிதுர்ரேகம் உத்தியோகலாபம் கெர்ப்பம் நஷ்டமென்பர்.

ரிடபலக்கினம் 9-ல் சனி.-செ

(44) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சப்தம விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடமும் சுத்தமாயிருந்து சனிதிசையிற்பிறந்தால் ஜாதகன் ஒருபக்ஷத்தில் மரணத்தையடைவனென்பர்.

ரிடபலக்கினம் 3-ல் ச. 9-ல் சனி-பு-சூ.

(45) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி த்விதியசுக பஞ்சமாதிபதிகளுடன்கூடி மூன்றுமாதியால் நேரே நோக்கப்பட்டு சனிதிசையில் பிறந்தால் ஆறுமாதத்திற்குள் பிதுர்வர்க்ககர்மம் இரண்டு வயதிற்குள் தாய்வர்க்கத்தில் சுபமென்பர்.

(46) (பத்தாமிடம்)




பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய பிரகஸ்பதியை மதிகுஜனிருவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசையில் தானிய வியாபாரதினால் மேன்மை பூமிலாபம் எழுபத்திரண்டில் ஜாதகன் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் குரு. 10-ல் சனி-சு.

(47) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஜென்ம ரோகாதிபதியுடன்கூடி த்விதியஸ்தானமேறிய அஷ்டமலாபாதிபதியால்நோக்கப்பட்டிருந்தால் சனிபுக்தி பதிமூன்றில் விவாகம் ஜாதகன் அதிசாரரோகத்தினால் கண்ணிழந்து மரணமாவனென்பர்.

ரிடபலக்கினம் 3-ல் குரு. 10-ல் சனி-கே.

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி யுச்சம்பெற்று அஷ்டமஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பதுவயதில் மரணம் அடுத்துபிதுர்வர்க்கத்தில் கர்மம் புத்திரனுக்கு ஜலரோககண்டம் நிவர்த்தியென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் குரு. 8-ல் சூ 10-ல் சனி-ச.

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதியாதிபதியுடன்கூடி த்விதியஸ்தானமேறிய அஷ்டமலாபாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சூரியனிருந்தால் சனிதிசைஆதி இரண்டுமாதம் தனிசிறை பிதுர்மரணம் பிரபுதரிசனம் கொஞ்சம்சுகம் அப்பால் கஷ்டஜீவனம் ஜாதகன் அருபதிற்குமேல் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் குரு-செ. 10-ல் சனி.

**(50)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிஏகனாய் தனித்து சப்தம விரையாதிபதியுடன்கூடிய அஷ்டம லாபாதிபதியால் ஒன்பதாம்பார்வை பார்க்கப்பட்டிருந்தால் மத்தியில்சுகமும் கடைசியில் கஷ்டமும் உண்டாம் ஜாதகன் ஐம்பதிற்குமேல் மரணமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| சனி | | ல | |
| குரு | | | |
| | | | |
| | | | |

**(51)** (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் எட்டாமாதி தசமகேந்திரம் பெற்று சனி திசையில்பிறந்தால் ஜாதகன் இருபத்தேழு வயதில் விஷத்தினால் மரணத்தை யடைவனென்பர்.

ரிடபலக்கினம் 5-ல் குரு 8-ல் செ. 11-ல் சனி-ச.

**(52)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதியாதிபதியுடன்கூடி நான்காமாதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சப்தமவிரையாதிபதி ஏறியிருந்தால் சனிபுக்தி முப்பத்தொன்பதில் ஜலரோகத்தினால் ஜாதகன் மரணமென்பர்.

ரிடபலக்கினம் 5-ல் பு. 11-ல் சனி-குரு.

**(53)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திர அஷ்டம லாபாதிபதியுடன்கூடி பஞ்சமதிரிகோண மேறிய தேர்ப்பாகனால் நேரே நோக்கப்பட்டு சனிதிசையில் பிறந்தால் ஜாதகன் எழுபத்தெட்டு வரையில் தீர்க்கமென்பர்.

ரிடபலக்கினம் 8-ல் ச. 11-ல் சனி-கே.

**(54)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் கூடி ஒருவரும்பாராமல் மூன்றாமாதி ஆயுள்ஸ்தானமேறியிருந்தால் நாற்பதில் ஜாதகன் விஷரோகத்தினால் மரணம் அதற்குமுன் களத்திரம் புத்திராரிஷ்டமென்பர்

ரிடபலக்கினம் 7-ல் குரு, 8-ல் சு. 11-ல் சனி பு

**(55)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி த்விதிய பஞ்சமாதிபதியுடன்கூடி சப்தமகேந்திரம்பெற்ற அஷ்டமலாபாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சுக்கிரனிருந்தால் சனிபுக்தி பனிரெண்டுவயதில் ஜாதகன் ஜலரோகத்தினால் மரணமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டா மிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி நீசனாய் ரவி, மதி, குஜன்புதன் சுக்கிரன் இவரைவருடன் கூடி ஒருவரும் பாராமலிருந்தால் ஜாதகன் முப்பத்தாறு வயதில் மூலரோகத்தினால் மரணமாவனென்பர்.

ரிடபலக்கினம் 8-ல் சூ-செ-கே. 12-ல் சனி.

(57) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில சூரியன் செவ்வாய் கேது மூவர்கூடியிருந்தால் ஜாதகன் இருபத்து நான்குவயதில மரணம் அக்காலம் கெர்ப்போற்பத்தியுண்டென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் குரு. 6-ல் சூ. 12-ல் சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து ரோகஸ்தானமேறிய நான்காமாதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி த்விதியஸ்தானமேறியிருந்தால் சனிதிசை ஆதிபனிரெண்டிற்குள் பிதுர்மரணம் ஜாதகன்எழுபத்திரண்டில் மரணமென்பர்,

ரிடபலக்கினம் 2-ல் பு 12-ல் சனி.

(59) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை ஸ்வக்ஷேத்திர தனபஞ்சமாதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் பிதுர்மாதுர் சகோதரங்களெல்லாம் ஆறுவயதிற்குள் மரணம் ஜாதகன் பிதுர்வர்க்கத்தை சேருவனென்பர்.

ரிடபலக்கினம் 2-ல் சு-ரா. 12-ல் சனி-பு.

(60) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்சாரகனாகியசனி த்விதியபஞ்சமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை, சுக்கிரன் ராகுவிருவரால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பதுவயதிற்குமேல் மரணமாவனென்பர்.

மேடலக்கினம் சக்கரம் - 12,

முற்றிற்று.

——

உ

கடவுள் துணை.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்

## மிதுனசனி ஆயுள்பலன்.

**மிதுன** **லக்கினம்.**




**(1)** உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை சுகஸ்தானமேறிய சப்தம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஆறுவயதில் ஜலத்தினால் மரணமென்பர்.

மிதுனலக்கினத்தில் சனி. 2-ல் சூ-பு. 4-ல் குரு-

**(2)** உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று ஒருவரும்பாராமல் த்விதியஸ்தானமேறிய ரவிபுதனிருவரால் ஆயுள்ஸ்தானத்தை நேரே நோக்கப்பட்டு பிரகஸ்பதியின் ஐந்தாம் பார்வையுமிருக்குமாகில் ஜாதகன் பதினேழுமாதத்தில் மாணமென்பர்.

மிதுனலக்கினத்தில் சனி 7-ல் ச

**(3)** உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து சப்தம கேந்திரமேறிய த்விதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கம் ஐம்பதில் மரணமென்பர்.

மிதுனலக்கினத்தில் சனி. 4-ல் ரா.

**(4)** உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் அதற்கு நான்காமிடத்தில் ராகுயிருந்து சனிதிசையும் நேர்ந்தால் திசைகடைசி தாய்மரணம் ஜாதகன் நாற்பத்தெட்டுவரையில் தீர்க்கமென்பர்.

மிதுனலக்கினத்தில் சனி. 7-ல் செ 8-ல் சு.

**(5)** உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ரோகலாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் திருதியாதிபனேறியிருந்தால் சனிபுக்தி பத்தொன்பதில் களத்திரமரணம் சகோதரக்கர்மம் ஜாதகன் ஐம்பத்திரண்டுவரையில் தீர்க்கமென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து அஷ்டமஸ்தானமேறிய திருதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் முப்பத்திரண்டுவயதில் மரணமாவனென்பர்.

மிதுனலக்கினம் 2-ல் சனி-ரா.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்கூடி ஒருவரும்நோக்காமலிருந்தால் ஜாதகன் பனிரெண்டுவயதில் திரேகத்தில் வீக்கம்கண்டு ஒருவருடகாலம் துன்பப்பட்டு மரணத்தையடைவனென்பர்.

மிதுனலக்கினம் 2-ல் சனி-சு-சூ-பு.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின திருதிய சுகபஞ்சம விரயாதிபதிகளுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் ஜாதகன் அருபத்திரண்டுவயதில் மரணமாவனென்பர்.

மிதுனலக்கினத்தில் சூ-பு 2-ல் சனி. 7-ல் குரு.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் அதற்காறாமிடமேறிய பிரகஸ்பதியை லக்கின கேந்திரம்பெற்ற ரவி புதனிருவரால் ஜாதகன் முப்பதிற்கு மேல் க்ஷயரோகத்தினால் துன்பப்படுவனென்பர்.

மிதுனலக்கினம் 2-ல் சனி-சு-சூ-ரா.

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனிரவிசுக்கிரன்ராகு மூவருடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால்சனிபுக்தி மாதமூன்றில் ஜாதகன்மரணம அக்காலம் தாய்க்குரோகம் பிதுர்வர்க்கத்தில் பாகப்பிரிவினையென்பர்.




(11) (மூன்றாமிடம்)

மூன்றாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி சூரியன் ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தைபஞ்சம விரயாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை ஆதிபிதுர்மரணம்கஷ்டத்திற்கு ஆரம்பமுண்டாம் ஜாதகன் இருபத்தொன்பதில் க்ஷயரோகத்தினால் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 2-ல் சூ 3-ல் சனி-பு 8-ல் குரு.

(12) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஜென்மசுகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய பிரகஸ்பதியை திருதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை சனிதிசையும் நேர்ந்தால் ஜாதகன் மூன்றும்நாள் மரணமென்பர்.

மிதுனலக்கினத்தில் செ 3-ல் சனி-ச-கே.

(13) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சந்திரன் கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை லக்கினகேந்திரம் பெற்ற ரோகலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால்ஜாதகன் அருபத்தாறுவயதில் மரணமென்பர்.

மிதுனலக்கினத்தில் செ. 3-ல் சனி-கே 4-ல் குரு, 8-ல் சு.

(14) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சுக்கிரனிருந்து உதையமேறிய பூமகனால் நோக்கப்பட்டு எட்டாமதி சதுர்த்தகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் எழுபத்திரண்டுவயதில் மரணமாவனென்பர்.

மிதுனலக்கினம் 3-ல் சனி 9-ல் சூ-குரு.

(15) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிஏகனாய் தனித்து நவதிரிகோணமேறிய ரவி குரு இருவரால் நேரே நோக்கப்பட்டு அஷ்டமஸ்தானம் சுத்தமாயிருந்தால் சனிதிசை ஆதிதாய்மரணம் ஜாதகனுக்கு கல்வியுண்டாகி தேசமாரலாவனென்பர்.




(16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஏகனாய் தனித்து தசமகேந்திரம் பெற்ற குஜன் மதி ராகுமூவரால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் சனிதிசை ஆதிவாசனநஷ்டம் உத்தியோகலாபம் ஐம்பத்தேழில்ஜாதகன் அயலூரில் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 4-ல் சனி-சு.

(17) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி பஞ்சமவிரையாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் அஷ்டமஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பதுவயதுவரையில் தீர்க்கம் சனிபுத்தி மாதுர்கர்மம் பொருள்சோரமென்பர்

மிதுனலக்கினம் 4-ல் சனி. 8-ல் சூ 12-ல் குரு.

(18) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து விரையமடைந்த சப்தம கர்மாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் எழுபத்திரண்டுவயதில் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 4-ல் சனி. 10-ல் சூ.

(19) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து தசமகேந்திரம்பெற்ற திருதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பத்தொருவயதில் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 4-ல் சனி-ச-கே 8-ல் செ. 10-ல் பு.

(20) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி சந்திரன் கேதுவுடன்கூடி கர்மஸ்தானமேறிய ஜென்ம சுகாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடத்தில செவ்வாயிருந்தால் ஜாதகன் ஊமையாயும் புத்திபேதமுடையவனாயு மிருப்பனென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சந்திரன் கேதுவுடன்கூடி ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பத்துநான்கு வயதில் ரோகத்தால் மரணமாவனென்பர்.

மிதுனலக்கினத்தில் ச. 5-ல் சனி-பு.

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஜென்மசுகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்து இரண்டாமாதி லக்கினகேந்திரமேறியிருந்தால் ஜாதகன் இரண்டு வயதில் மரணமாவனென்பர்.

மிதுனலக்கினம் 5-ல் சனி-ச. 9-ல் ரா.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி த்விதியாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடமும் சுத்தமாகி நவதிரிகோணத்தில் ராகுவிருந்து திசையும்நேர்ந்தால் ஜாதகனிரண்டு வயதில் மரணத்தை யடைவனென்பர்.

மிதுனலக்கினம் 5-ல் சனி-சு. 7-ல் குரு-சூ.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி இரண்டாமாதியுடன்கூடி ஒருவரும்பாராமல் திருதியசப்தம கர்மாதிபதிகள் சப்தம கேந்திரமேறியிருந்தால் ஜாதகன் யோகமார்க்கத்தை அனுசரிப்பனென்பர்.

மிதுனலக்கினத்தில் செ. 5-ல் சனி 8-ல் சு 9-ல் குரு.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பாக்கியஸ்தானமேறிய சப்தம கர்மாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானமேறிய சுக்கிரனை ஆரலால் எட்டாம்பார்வையும் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் எழுபதுவயதிற்குமேல் மரணமாவனென்பர்.




(26) (ஆறுமிடம்)

ஆறுமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி திருதியபஞ்சமவிரையாதிபதிகளுடன் கூடி ரோக லாபாதிபதியால் நான்காம் பார்வை பார்க்கப்பட்டு லக்கினாதிபதி சப்தமகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்துநான்கு வயதிற்குமேல் மரணமாவனென்பர்.

மிதுனலக்கினம் 6-ல் சனி. 8-ல் பு-ரா. 12-ல் செ.

(27) ஆறுமிடத்தில் ஆயுள்காரனாகியசனி ஏகனாய்தனித்துவிரையமடைந்த ரோகலாபாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடத்தில் புதன் ராகு கூடியிருந்தால் ஜாதகன் ஓராண்டில் காத்துசேஷ்டையால் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 4-ல் செ 6-ல்- சனி-குரு 7-ல் பு-சூ.

(28) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சப்தம கர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் அதற்கிரண்டிலிருக்கும் லக்கின திருதிய சுகாதிபதிகளை ரோகலாபாதிபதியால் நான்காம்பார்வை பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் நாற்பத்தெட்டுவயதில் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 6-ல் சனி-சு. 7-ல் ரா.

(29) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி பஞ்சம விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் சப்தமகேந்திரத்தில் ராகுவிருந்தால் ஜாதகன் ஜெனித்த பத்தாம்நாள்மரணம் பிதுர்மாதுர்கண்டம் நிவர்த்தியென்பர்.

மிதுனலக்கினம் 6-ல் சனி. 10-ல் குரு.

(30) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து தசமகேந்திரமேறிய சப்தம கர்மாதிபதியால் நோக்கப் பட்டிருந்தால் சனிதிசை பிற்பாகம் பிதுர்மாதுர்கர்மம் பூமிமூலம் விவகாரம் ஸ்தானப்ரஸ்டம் திசைமுழுதும் கஷ்டபலனென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்நின்று லக்கினகேந்திரம் பெற்ற திருதியாதிபதியால் நேரே நோக்கப் பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அறுபத்துநான்கு வரையில் தீர்க்கம் சனிதிசையில் பிச்சைஎடுத்து அலைந்து திரிவனென்பர்.

மிதுனலக்கினம் 7-ல் சனி-ரா., 8-ல் குரு-செ.

(32) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் உச்சநீசர்கள் சேர்ந்திருந்தால்சனி புக்தி இருபத்திரண்டில் கனிட்டபிதாமரணம் ஜாதகன் நாற்பத்து மூன்றில் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 7-ல் சனி-கே.

(33) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் சனிதிசை ஆதி இரண்டுவயதில் ஜாதகன் வைசூரியால்மரணம் அதற்குமுன் மாதுர்வர்க்க கர்மமென்பர்.

மிதுனலக்கினத்தில் ச. 7-ல் சனி.

(34) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து லக்கினகேந்திரம் பெற்ற த்விதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் வெகுதீர்க்கம் சனிதிசை வெகுசௌக்கியம் கெர்ப்பமில்லையென்பர்.

மிதுனலக்கினம் 7-ல் சனி-ச. 10-ல் பு-சூ.

(35) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி குடும்பாதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் அதற்கு௸ நான்கில் ஜென்ம சுகாதிபதியுடன் கூடிய சூரியன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் மூன்றுவயதில் மரணமாவனென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி ஸ்வக்ஷேத்திரம்பெற்று ஏகனாய் தனித்து த்விதியஸ்தானமேறிய ரவி குஜன் சுக்கிரன் மூவரால நேரேநோக்கப் பட்டிருந்தால் சனிதிசைஆதி ஐம்பத்தொருவயதில் ஜாதகன் மரணமெனபர்.

மிதுனலக்கினம் 7-ல் சு. 8-ல் சனி-ச.

(37) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி இரண்டாமாதியுடனகூடி ஒருவரும்பாராமல் அதற்குவிரையத்தில் பஞ்சம விரையாதிபதி யேறியிருந்தால் சனிதிசைஆதி ஐம்பத்துமூன்றில் தொழில்மாறல் அதிகாரக்குறைவுண்டாம்திசை பிற்பாதியில் மாரகமென்பர்

மிதுனலக்கினத்தில ச. 8-ல் சனி.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் அதற்காறுமிடததில் சந்திரனிருந்தால் சனிதிசை ஆதிவிவாகம் பிற்பாதியில் புத்திரசோகம் அதுமுதல் திசைகடைசிவரையிலும் களத்திரம் பிரிவுபடுமென்பர்.

மிதுனலக்கினம் 4-ல் குரு 8-ல் சனி-சூ-பு-சு.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின திருதிய சுகபஞ்சம விரையாதிபதிகளுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய சப்தம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் பதினேழு வயதில் மரணமாவனெனன்பர்.

மிதுனலக்கினம் 2-ல் சூ. 5-ல் செ. 8-ல் சனி.

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று த்விதியஸ்தானமேறிய திருதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு அதற்குப் பத்தாமிடத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன்எட்டுநாளில் மரணமென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய் ரவி சுக்கிரனுடன் கூடி திருதியமேறிய சப்தம கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் எழுபத்தேழு வரையில் தீர்க்கமென்பர்.

மிதுனலக்கினத்தில் குரு 7-ல் சு 9-ல் சனி-கு-பு.

**(42)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி லக்கின திருதிய சகாதிபதிகளுடன் கூடி பிரகஸ்பதியால் ஒன்பதாம்பார்வை பார்க்கப்பட்டிருந்தால் அதற்குலாபத்தில் சுக்கிரனிருந்தால் சனி திசை முற்பாகம் தலைச்சன் உடனே மரணமென்பர்.

மிதுனலக்கினம் 8-ல் குரு 9-ல் சனி-ச-செ-ரா.

**(43)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி மதி குஜன் ராகு மூவருடன்கூடி ஒருவரும்பாராமல் அதற்குப் பனிரெண்டாமிடத்தில் பிரகஸ்பதி நீச்சமடைந்திருந்தால் சனிதிசை முற்பாகம் பிதுர் மரணம் குடும்பம் குலைவுபடுமென்பர்.

மிதுனலக்கினத்தில் 8-ல் குரு. செ. 9-ல் சனி.

**(44)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய பிரகஸ்பதியை லக்கினகேந்திரம்பெற்ற பூமகனால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நாற்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 5-ல் கு-பு 9-ல் சனி-ரா

**(45)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்கூடி திருதியஸ்தானமேறியபுதனிருவரால்நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இருபத்தேழுவயதில் கிராணிபால்மரணம் அதற்குமுந்தி பிதாவரிஷ்டம் புத்திரமரணமென்பர்.




**(46)** (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து சதுர்த்தகேந்திரமேறிய திருதியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகனுக்கு வயிற்றில் ரோகமுண்டாம் இரட்டைப்பெண் ஜெனனகாலம்ஜாதகன் ஐம்பத்துமூன்றில் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 2-ல் குரு. 10-ல் சனி-கே.

**(47)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் கூடி த்விதியஸ்தானமேறிய சப்தம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அறுபதில்மரணம் சனிதிசைபிற்பாகம்பிதுர்மரணம் அடிக்கடி இடமாறல் மேகரோகத் தொடர்ச்சியென்பர்.

மிதுனலக்கினம் 4-ல் சூ. 10-ல் சனி-செ.

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரோகலாபாதிபதியுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய திருதியாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்து சனிதிசையில் பிறந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.

மிதுனலக்கினம் 8-ல் சூ-ச. 10-ல் சனி.

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் த்விதியதிருதியாதிபதிகள்கூடியிருந்தால் சனிதிசை அருபத்தெட்டில் ஜாதகன்மரணம் பின்பு புத்திரர்களால் குடும்பகலகம் பாகப்பிரிவினையென்பர்.

மிதுனலக்கினம் 4-ல் ச. 8-ல் ரா. 10-ல் சனி.

(50) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிஏகனாய் தனித்து சுகஸ்தானமேறிய இரண்டாமாதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் ராகுயிருந்தால் ராகுதிசையில் சனிபுக்தி வருங்காலம் உத்தியோகத்தில் விவகாரம் புத்திரவுற்பத்தி அரிட்டமுண்டாம் அன்னியதேசம்போதல் மனசஞ்சல பலனென்பர்.




(51) (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி நீசனாய் ஸ்வக்ஷேத்திர ரோகலாபாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் வியாழன் கேது சேர்ந்திருந்தால் ஜாதகன் எழுபத்துநான்குவயதில்மரணமாவனென்பர்.

மிதுனலக்கினத்தில் செ. 11-ல் சனி-சு.

(52) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பஞ்சமவிரையாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை லக்கினகேந்திரம்பெற்ற ரோக லாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஐந்துவயதிற்குள் பிதாவும் ஜாதகனு மரணமென்பர்.

மிதுனலக்கினம் 5-ல் செ-பு-சு, 11-ல் சனி.

(53) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சமதிரிகோணமேறிய குஜன் புதன் சுக்கிரன் மூவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமுண்டாம்சனிதிசை முற்பாகம் பிதுர்மெரியாணம் களத்திரரோகம் கஷ்டபல னென்பர்.

மிதுனலக்கினம் 5-ல் பு-சு, 11-ல் சனி.

(54) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து புத்திரஸ்தானமேறிய ஜென்மசுக பஞ்சமவிரையாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பத்தேழுவரையில் தீர்க்கம் சனிபுக்தி கெர்ப்பநஷ்டம் ஜேஷ்டபுத்திரன் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 2-ல் செ. 11-ல் சனி-சூ-பு.

(55) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி நீசனாய் லக்கினதிருதிய சுகாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை நீச்சகுஜனால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை சஞ்சலம் ஜாதகன் ஐம்பத்தைந்திற்குமேல் மரணமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சூரியன் கேதுவுடன் கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பதிற்குமேல் மரணம் சனிபுக்தி முப்பத்திரண்டில் மாதுர்கர்ம்சளத்திரமரணமென்பர்.

மிதுனலக்கினம் 8-ல் குரு. 12-ல் சனி-ரா.

(57) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிராகுவுடன் கூடி அஷ்டமஸ்தானமேறிய சப்தம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பதுவயதிற்குமேல்வியாழன்திசையில்மரணமாவனென்பர்.

மிதுனலக்கினம் 2-ல் குரு-செ 8-ல் சூ-பு. 12-ல் சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுஸ்தானமேறிய லக்கின திருதியசுகாதிபதிகளை உச்ச நீசர்களால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் பத்துவயதில் மரணமடைவனென்பர்.

மிதுனலக்கினம் 5-ல் செ. 6-ல் ச. 12-ல் சனி.

(59) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ரோகஸ்தானமேறிய நீச்சசந்திரனால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடத்தில் அங்காரகன் நான்காம்பார்வையுமிருக்குமானால் முப்பத்தெட்டில் களத்திரமரணம் ஜாதகன் அருபதிற்குமேல் மரணமென்பர்.

மிதுனலக்கினம் 6-ல் செ. 8-ல் ச. 12-ல் சனி-சூ.

(60) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதியாதிபதியுடன்கூடி ஸ்வக்ஷேத்திர ரோகலாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுஸ்தானத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் எழுபத்தொன்பதுவரையில் தீர்க்கமென்பர்.

மிதுனலக்கினம் சக்கரம் -12,

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்

## கடகசனி ஆயுள்பலன்.

கடக  லக்கினம்.


(1) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை விரையமேறிய ரோகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபதுவயதிற்கு மேல் ஜலரோகத்தினால் மரணமாவனென்பர்.

கடகலக்கினத்தில் சனி-ரா. 6-ல் செ. 7-ல் ச.

(2) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்கூடி லக்கினாதிபதியால் நேரேநோக்கபட்டு அதற்காறுமிடத்தில் பஞ்சமகர்மாதிபதி ஏறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஜெனித்த எட்டாம் நாள் மரணமென்பர்.

கடகலக்கினத்தில் சனி. 7-ல் செ-சு.

(3) உதையத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து சப்தம கேந்திரமேறிய சுகபஞ்சம கர்மலாபாதிபதிகளால் நேரேநோக்கப் பட்டிருந்தால் திர்க்கம் ரோகம் சனிதிசைமுற்பாகம் விவாகம் பூமி சேர்க்கையுண்டாய பிற்பாகம் களத்திரமரணம் குடும்பபேதமென் பர்.

கடகலக்கினத்தில் சனி 7-ல் சு. 8-ல் குரு.

(4) உதையத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய்தனித்து சப்தம கேந்திரம் பெற்ற தனியாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டா மிடத்தில் ரோகபாக்கியாதிப னேறியிருந்தால் ஜாதகன் எழுபத் ட்டுவரையில் திர்க்கமென்பார்.

சடகலக்கினத்தில் சனி-ரா 8-ல் செ.

(5) உதையத்தில் ஆயுள்காரகனுகிய சனி ராகுவுடன்கூடி ஒருவ ரும்நோக்காமல் ஆயுள்ஸ்தானத்தில் பஞ்சம கர்மாதிபனேறியிருந் தால் சனிதிசையில் குஜபுக்தி முப்பத்தேழில் ஜாதகன் பிதுர்சகோ தரர்களால் அடிபட்டு மரிப்பனென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனுகிய சனி ஏகனுய்தனித்து சத்துருஸ்தான மேறிய ஸ்வக்ஷேத்திர ரோகபாக்கியாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமிலலை ஜெனித்த மூன்றும்நாள் மரண மென்பர்.

சடகலக்கினம் 2-ல் சனி. 8-ல் குரு-பு.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து அஷ்டமஸ்தான மேறிய திருதியரோக பாக்கிய விரையாதிபதிக ளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஜெனி த்த வருடத்தில்மரணம்.

சடசலக்கினம் 2-ல் சனி-குரு 11-ல் செ.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ரோகபாக்கியா திபதியுடன்கூடி வாபமேறிய பஞ்சம கர்மாதிபதியால் நோக்கப்ப ட்டிருந்தால் சனிபுக்தி வீவாகம் ஜாதகன்மூன்று கெர்ப்பத்திற்குப் பிறகு ஸ்ரீகலகத்திஞல் அன்னியதேசம்போய் மரணமாவனென்பர்.

கடகலக்கினம் 2-ல் சனி-பு.

**(9)** இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி திருதியவிரையாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமலிருந்தால் ஜாதகன் அருபதி முதல் புத்திபேதகமாய் புத்திரனிடம் துன்பப்பட்டு அருபத்தேழுக்குமேல் மரணமாவனென்பர்.

கடகலக்கினம் 2-ல் சனி-சு-குரு.

**(10)** இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சுகரோக பாக்கிய லாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால் ஜாதகன் நாற்பத்தைந்துவரையில் தீர்க்கம் ரோகமுண்டாம் செல்வவானாய் வாழ்வனென்பர்.




**(11)** (மூன்றுமிடம்)

மூன்றுமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும் பாராமல் எட்டாமிடமும் சுத்தமா யிருந்தால் ஜாதகன் வெகுதீர்க்கம் சனிதிசையில்சகோதர மரணம் குடும்பகலகம்பிரிவு புத்திராள்மரணம் சுகபேதமென்பர்.

கடகலக்கினம் 3-ல் சனி. 9ல் சூ-பு.

**(12)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து நவதிரிகோணமேறிய ரவிபுதனிருவரால்நேரேநோக்கபட்டிருந்தால் சனிதிசையில் துர்சேர்க்கை விவாகம் குடும்பபேதம் பிதுர்விரோதம் புத்திரசித்தியென்பர்.

கடகலக்கினம் 2-ல் சனி. 9-ல்செ.

**(13)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து யாக்கியஸ்தானமேறிய பஞ்சமகர்மாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபதிற்குமேல் மரணம் சனிதிசைமுற்பாகம் பிதுர்க்கிலேசட் சகோதரமரணம் புத்திபேதமுண்டென்பர்.

கடகலக்கினம் 3-ல் சனி-கே 9-ல் செ-ச.

**(14)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி நவதிரிகோணமேறிய லக்கினபஞ்சம கர்மாதிபதிகளால்நேரேநோக்கப்பட்டிருந்தால் சனிதிசை ஆதிமுதல் பிதுர்வர்க்கத்தில்அக்கினி தொழில்மூலம் விர்த்தி கட்டடங்கள்விர்த்தி சௌக்கியபலனென்பர்

கடகலக்கினம் 3-ல் சனி-ச. 8-ல் சூ. 9-ல் செ.

**(15)** மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கினாதிபதியுடன்கூடி பஞ்சமகர்மாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் விவாசமில்லை சனிதிசையானால் உடனே மரணமென்பர்.




**(16)** (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி உச்சப்பெற்று ஏகனாய்சனித்து கர்மஸ்தானமேறிய இரண்டாமாதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் முற்பாகப்கஷ்டம் பிற்பாகம்சுகம் ஜாதகன் ஆயுள் விர்த்தியுடையவனென்பர்.

கடகலக்கினம் 4-ல் சனி-சு-கே.

**(17)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சுக்கிரன் கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல்ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் ஐம்பத்தேழுவயதிற்குமேல் மரணமாவனென்பர்.

கடகலக்கினம் 4-ல் சனி. 10-ல் குரு.

**(18)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று தசமகேந்திரம்பெற்ற ரோக பாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஓராண்டில் சகோதரிமுன்னும் பின்பு ஜாதகனு மரணமென்பர்,

கடகலக்கினம் 4-ல் சனி. 11-ல் ச.

**(19)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் அதற்செட்டாமிடத்தில் சந்திரனிருந்து ஆயுள் ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை சந்திரன் திசையும்வந்தால் எழுவயதில் ஜாதகன் உஷ்ணரோகத்தினால் மரணமென்பர்.

கடகலக்கினம் 4-ல் சனி-சூ-செ-சு-ச.

**(20)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரவி மதி குஜன் சுக்கிரன் நால்வருடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால் சனிதிசை ஆதி முப்பதுவயதில் ஜாதகன்மரணம் அக்காலம் குடும்பத்தில் கலகமுண்டென்பர்.




## (21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரக ளுகிய சனி தவிதியாதிபதியுடனகூடி ஜயமேறிய லக்கின ரோகபாக்கியாதிபதிகளால்நேரே நோக்கப்பட்டிருந்தால் முப்பத்துநான்கு வயதில் ஜாதகன தூர்மரணத்தை யடைவ னென்பர்

கடகலக்கினத்தில் ரா. 5-ல் சனி-சூ-பு. 9-ல் குரு.

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகளுகிய சனி சூரியன் புதனுடன்கூடி நவதிரிகோணமேறிய ஸ்வக்ஷேத்திர பிரகஸ்பதியால் நோக்கப்பட்டு லக்கினகேந்திரம்பெற்ற ராகுதிசையும்வந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.

சடசலச்கினம் 5-ல் சனி. 8-ல் ரா.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகளுகிய சனி ஏகளுய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் நாற்பதுவயதில் மரணம் சனிபுக்தி பத்தொன்பதில் தாய்மரணம் பந்துகலகம் வாகனநஷ்டமென்பர்.

சடசலக்கினப் 2-ல்ச 5-ல் சனி.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகளுகிய சனி ஏகளுய் நின்று ஒருவரும்பாராமல ஆயுள்ஸ்தானத்தை லக்கினுதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால ஜாதகன் ஐந்துவயதில் மரணம் அக்காலம் பிதாவுக்கு ரோகமென்பர்.

கடகலக்கினம் 5-ல் சனி

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகளுகிய சனி ஏகளுய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும சுத்தமாயிருந்து சனிதிசையில் பிறந்தால ஜாதகன அருபத்தொருவயதில் மரணம் சனிபுக்தி களத்திரரோகம் தொழில்குறைவு மானபங்கமுண்டென்பர்.




## (26) (ஆருமிடம்)

ஆருமிடத்தில் ஆயுள்காரக ளுகிய சனி சுக்கிரன ராகுவுடன் கூடி ஒருவரும் பாராமல் எட்டாமிடமும் சுத்தமா யிருந்தால் ஜாதகன் நான்குவயதில்மரணம் அதற்குமுன் மாதுர்வர்க்கத்தில் கர்மம் பிதாவுக்கு ரோகமென்பர்.

கடகலக்கினம் 6-ல் சனி. 12-ல் செ-ச.

(27) ஆறாமிடத்தில ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்துவிரையமேறிய லக்கினபஞ்சமகர்மாதிபதிகளால்நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதன் ஒன்பதாவது கெர்ப்பகாலத்தில் ஜலரோகத்தினால்மரணமாவனென்பர்.

கடகலக்கினம் 6-ல் சனி-கே. 12-ல் குரு

(28) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் கூடி விரையமடைந்த ரோக பாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இருபத்தைந்துவயதில் ஜலரோகத்தினால் மரணமாவனென்பர்.

கடகலக்கினம் 3-ல் செ 6-ல்- சனி 8-ல் ச.

(29) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து திருதியமெறிய பஞ்சம கர்மாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுஸ்ஸ்தானத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் அறுபதிற்குமேல்மரணம் சனிதிசை உத்தியோகவிர்த்தி மேகரோகம் கடைசி விவாகமென்பர்.

கடகலக்கினம் 6 -ல் சனி-ரா. 11-ல் பு.

(30) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன் கூடி ஒருவரும்பாராமல் அதற்காறாமிடமேறிய திருதிய விரையாதிபதி திசையும்வந்தால் ஜாதகன் ஐம்பத்தைந்துவயதில் மரணம் அதற்கு முன் புத்திரகளத்திர மரணமென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதிய சுகலாப விரையாதிபதிகளுடன்கூடி ஸ்வக்ஷேத்திரலக்கினாதிபதியால நேரேநோக்கப் பட்டிருந்தால் சனிதிசையில் விவாகம்களத்திரவர்க்கத்தில் கண்டம் பின்பு ஜாதகனுக்கு நாலைந்துவருட காலம் ரோகம் அன்னத்துவேஷம் அதிகண்டம் நிவர்த்தியென்பர்.

கடகலக்கினம் 4-ல் பு-சு. 7-ல் சனி.

(32) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் அதற்கு கர்மஸ்தானத்தில் த்விதியாதிபதியுடன் கூடிய திருதிய விரையாதிபதிதிசையும் நேர்ந்தால் ஜாதகன் பத்து நாளில் மரணமென்பர்.

கடகலக்கினம் 3-ல் குரு. 4-ல் சு. 7-ல் சனி

**(33)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து திருதியஸ்தானமேறிய ரோக பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டு நான்காமிடமேறிய சுக்கிரன் திசையும் நேர்ந்தால் ஜாதகன் வயதொன்றில் மரணமாவனென்பர்.

கடகலக்கினம் 7-ல் சனி-சு. 8-ல் சூ-செ-பு

**(34)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சுகலாபாதி பதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சூரியன் குஜன் புதன் மூவர் சேர்ந்திருந்தால் ஜாதகன் நாற்பத்தெட்டுவயதில் மரணமாவனென்பர்.

மிதுனலக்கினம் 7-ல் சனி-செ. 8-ல் குரு.

**(35)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி பஞ்சமகர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் ரோகபாக்கியாதிபதி ஏறியிருந்தால் ஜாதகன் மூன்றுவயதில் மரணம் அதற்குமுன் அம்மான் மரணமென்பர்




**(36)** (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய் ஏகனாக தனித்து ஒருவரும்பாராமல் அதற்குப்பனிரெண்டாமிடத்திலிருக்கும் பிரகஸ்பதிதிசையும்நேர்ந்தால் ஜாதகன் ஐந்துவயதில் மரணமாவனென்பர்.

கடகலக்கினம் 3-ல் சு. 8-ல் சனி-செ.

**(37)** எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஸ்வக்ஷேத்திரனாய் பஞ்சம கர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் அதற்கெட்டாமிடத்தில் சுகலாபாதிபதி நீச்சம்பெற்றிருந்தால்ஜாதகன் அங்காரகன் திசை புக்தியில் மாரகத்தை யடைவனென்பர்.

மிதுனலக்கினம் 2-ல் ச. 8-ல் சனி

**(38)** எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த் தனித்து த்விதிய ஸ்தானமேறிய லக்கின கேந்திராதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஆறுமாதத்தில் மரணமென்பர்.

கடகலக்கினம் 2-ல் சு-பு. 8-ல் சனி-குரு.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ரோகலாபாதிபதியுடன்கூடி குடும்பஸ்தானமேறிய திருதியசுக லாப விரையாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தொண்ணூற்றைந்து வரையில் தீர்க்கமென்பர்.

கடகலக்கினத்தில் செ. 7-ல் கு 8-ல் சனி.

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று லக்கினகேந்திரமேறிய பஞ்சம கர்மாதிபதியால் நோக்கப்பட்டு அதற்குப் பனிரெண்டாமிடத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பதினொருவயதில் மரணமென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிலக்கினாதிபதியுடன்கூடி உதையமேறிய ரோக பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நான்குமாதத்தில் றிணங்கண்டு மரிப்பனென்பர்.

கடகலக்கினம் 2-ல் சு. 9-ல் சனி-ச. 12-ல் செ.

(42) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஜென்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் அதற்குநான்கிலிருக்கிற குஜன்திசையாவது ஆறிலிருக்கிற சுக்கிரபுக்தியாவது நேர்ந்தால் ஜாதகன் அருபத்தாறு வயதில் மரணமென்பர்.

கடகலக்கினம் 3-ல் செ. 9-ல் சனி-கே.

(43) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி கேதுவுடன்கூடி திருதியமேறிய பஞ்சம கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் சனிதிசைபுக்தி அருபத்தாறில் ஜாதகன் மரணமென்பர்.

கடகலக்கினம் 2-ல் செ. 9-ல் சனி.

(44) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து த்விதிய ஸ்தானமேறிய பஞ்சம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் வெகுதீர்க்கமுண்டாம் இருபதுவயதில் குடும்பம் விட்டு பிரிந்து வடதிக்குநாடி சுகப்படுவனென்பர்.

கடகலக்கினத்தில் குரு. 9-ல் சனி-செ.

(45) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பஞ்சமகர்மாதிபதியுடன்கூடி லக்கினகேந்திரம் பெற்ற ரோகபாக்கியாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பதுவயதிற்குமேல் மரணமென்பர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி லக்கினாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் அதற்குச் சர்மஸ்தானத்திலிருக்கும் ஞானகாரகன் திசையும்வந்தால் ஜாதகன் நாற்பத்தெட்டுவயதில் மரணமாவனென்பர்.

கடகலக்கினம் 10-ல் சனி-பு-கே.

(47) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி புதன் கேதுவுடன் கூடி ஒருவரும்நோக்காமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் ஐம்பதிற்குமேல் மரணம் சனிபுக்தி முப்பத்தொன்றில் களத்திரகர்மம் பொருள் சோரம் அன்னியதேச சவனமென்பர்.

கடகலக்கினம் 10-ல் சனி-பு-ச. 12-ல் சு

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிநீசனாய்லக்கினதிருதியவிரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடமும் சுத்தமாயிருந்து சனிபுக்தியாவது அதற்கு மூன்றிலிருக்கிற சுக்கிரபுக்தியாவது வந்தால் ஜாதகனுக்கும் தாய்க்கும்ரோகம் ஜாதகன் மாதமொன்றில் மரணமென்பர்.

கடகலக்கினம் 2-ல் பு. 4-ல் குரு 10-ல் சனி.

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து சதுர்த்தகேந்திரமேறிய ரோகபாக்கியாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் மாவலன் திருஷ்டியுமிருக்குமானால் ஐம்பத்தாறுவரையில ரோகம் சஞ்சலம் றுணம் தேசசஞ்சாரம் சுகமில்லை நிலையில்லையென்பர்.

கடகலக்கினம் 8-ல் செ 10-ல் சனி-சூ-கே

(50) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி நீசனாய் ரவிகேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் பஞ்சம கர்மாதிபனேறியிருந்தால் சனிபுக்தி இரண்டுவயதில் பிதுர்மரணம் தாய்க்கு ரோகம் ஜாதகனு மரணமென்பர்.




(51) (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய ஜென்மாதி பதியை ரவிபுதனிருவரால் நேரேநோக்கப்பட்டிருந்தால் நான்குமாதத்தில்ஜாதகன் அக்கினியால் மரணமென்பர்.

கடகலக்கினம் 2-ல் பு 11-ல் சனி.

(52) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிஏகனாய்நின்று ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை த்விதியஸ்தான மேறிய திருதிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன முப்பதுவயதிற்குமேல் அக்கினிமூல மரணமடையனென்பர்.

கடகலக்கினம் 4-ல் செ. 5-ல் ச-சு. 11-ல்சனி-கே.

(53) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதவுடன் கூடி பஞ்சம திரிகோணமேறிய மதி புகரிருவரால் நேரேநோக்கப் பட்டு அதற்காரில் செவ்வாயிருந்தால் ஜாதகனுக்கு இருபதுமுதல் ரோகவிர்த்தியென்பர்

கடகலக்கினம் 5-ல் சு 11-ல் சனி-குரு.

(54) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரோக பாக்கியாதிபதியுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறிய சுகலாபாதி பதியால் நேர்நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் எழுபத்தொன்பதுவரையில் தீர்க்கம் சனிபுக்தி முப்பத்தைந்தில் உத்தியோகவிர்த்தி பொருள் சேர்க்கையென்பர்.

கடகலக்கினம் 11-ல் சனி-பு-சு.

(55) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதிய சுக லாப விரையாதிபதிகளுடன் கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் ஜாதகன் வெகுதீர்க்கமுண்டாம் சனிதிசை முழுதும் தேசாதிகாரம் புத்திரவிர்த்தி பெருந்தனை சேர்க்கை சுகபலனென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டா மிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ரோகஸ்தானமேறிய த்விதிய சுகலாபாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டு சனிதிசையும்சேர்ந்தால் ஜாதகன் வாரமொன்றில் மரணமாவனென்பர்.

கடகலக்கினம் 9-ல்செ. 12-ல் சனி.

(57) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று நவதிரிகோணமேறிய பஞ்சம கர்மாதிபதியால் நோக்கப் பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகனுக்கு நான்குவயதில் மரணகண்டம் தப்பினால் முப்பத்துநான்கில் மரணமென்பர்.

கடகலக்கினம் 8-ல் குரு. 12-ல் சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஆயுள்ஸ்தானமேறிய ரோகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் பத்துவயதிற்குமேல் பிதுர்வர்க்கத்தில் சுவீகாரமாகிஜாதகன் சிலநாள் சுகப்படுவன் அப்பால் விவகாரங்களுண்டாய் மாரிப் போகுமென்பர்.

கடகலக்கினம் 12-ல் சனி.

(59) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனிஏகனாய்தனித்து ஒருவரும்பாராமலிருந்தால் சனிதிசைமுழுதும் கெடுதல் ஆதிகளத்திரமரணம்பின்பு மருவிவாகம் அடிக்கடி நிலைமாறல் வறுமையுண்டென்பர்.

கடகலக்கினம் 6ல் ச. 12-ல் சனி-பு.

(60) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஸ்வக்ஷேத்திர திருதிய விரையாதிபதியுடன் கூடி ரோகஸ்தானமேறிய லக்கினாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிபுக்தி ஐம்பத்தொருவயதில் ஜாதகன் ரோகத்தால் மரணமென்பர்.

கடகலக்கினம் சக்கரம் -12,

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்

## சிம்மசனி ஆயுள்பலன்.

சிம்ம 

லக்கினம்.

(1) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி பஞ்சம அஷ்டமாதிபதியுடன்கூடி விரையாதிபதியால் நேரே நோக்கபபட்டு ஆயுள்ஸ்தானத்தில் சுகபாக்கியாதிப னேறியிருந்தால் முப்பத்தொருவயதில் ஜாதகன் தலைவலியால் மரணமென்பர்.

சிம்மலக்கினத்தில் சனி. 8-ல் ச.

(2) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டரமிடத்தில் விரையாதிபதியேறியிருந்தால் ஜாதகன் நாற்பத்துமூன்றுவரையில் தீர்க்கம் சனிபுக்தி பத்தொன்பதில் களத்திர லாபமென்பர்.

சிம்மலக்கினத்தில் சனி-சூ-பு.

(3) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கினத்விதிய லாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால் சனிபுக்தி இருபத்துநான்குவயதில் விவாகம் பிதாமரணம் அடுத்தபுக்தியில் களத்திரமரணம் உடனேமருவிவாகம் சமயோகம் வருமையில்லையென்பர்.

சிம்மலக்கினத்தில் சனி, 7-ல் சூ. 8-ல் சு.

(4) உதையத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து லக்கினாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ள்தானத்தில் சுக்கிரன் உச்சம்பெற்றிருந்தால் ஜாதகன்வெகுதீர்க்கம் சனிதிசைசமயோகம் பொருள்சேர்க்கை களத்திரமரணம் ரோகவிர்த்தி பின்னும் விவாகமென்பர்.

சிம்மலக்கினத்தில் சனி. 8-ல் சூ-பு சு-ச.

(5) உதையத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் ரவி மதி யுதன் சுக்கிரன் நால்வர் கூடியிருந்தால் அருபதிற்குமேல் மரணம் சனிபுக்தி இருபத்திரண்டில் பிதுர்கர்மம் களத்திரலாபம் கெர்ப்ப நஷ்டமென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனுகிய சனி திருதிய கர்ம விரையாதி பதியுடன் கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் ஐம்பத்து நான்கிற்குமேல் யோகம் தாழ்வு சனிதிசை எழுபத்திரண்டுவயதில் ஜாதகன் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் சனி.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து ஒருவரும்பாராமலிருந்தால் ஜாதகன் தீர்க்கமுண்டாம் நாற்பதிற்குமேல் சனிதிசையில் பூமிவிர்த்தி பொருள்சேர்க்கை மிகுந்தசுகமுண்டென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் சனி-பு-சு.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி த்விதிய திருதிய கர்மலாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் முப்பதிற்குமேல் வாயுவுரோகமுண்டாம் அருபதிற்குமேல் மரணம் சனிபுக்தி முப்பத்தொன்பதில் களத்திரமரணம் பொருள்நஷ்டம் செள்க்கியகுறைவுண்டென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் சனி. 11-ல் செ.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் நின்று லாபமேறிய சுகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பத்துமாதத்தில் மரணம் அதற்குமுன் ஜேஷ்டசகோதரி கெர்ப்பத்துடன் மரணமென்பர்.

சிம்பலக்கினம் 2-ல் சனி-செ 8-ல் ச.

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி சுகபாக்கியாதிபதியுடன்கூடி ஆயுள்ஸ்தானமேறிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை பிற்பாதி மண்மனைநாசம் குடும்பபேதம் பிதாவரிட்டமென்பர்.




## (11) (மூன்றுமிடம்)

மூன்றுமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி உச்சனாய் ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய கேதுவை விரயாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் முப்பத்தெட்டு வயதில் மரணமென்பர்.

சிமமலக்கினம் 3-ல் சனி-பு 9-ல் செ. 11-ல் குரு.

**(12)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி த்விதிய லாபாதிபதியுடன்கூடி ஸ்வக்ஷேத்திர சுகபாககியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி லாபஸ்தானபேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பிறந்த பதினைந்தாம்நாள் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 2 ல் சூ-செ-பு-ரா. 3-ல் சனி.

**(13)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை த்விதியமேறிய ரவி குஜன் புதன் ராகு நால்வரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இருபத்தொருவயதில் மேகரோகத்தினால் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 3-ல் சனி. 9-ல் சு. 11-ல் சூ 12-ல் செ.

**(14)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து சுக்கிரன்நேராயும் விரயமடைந்தபூமகன் நான்காம்பார்வையுமாக பார்க்கப்பட்டு லாபஸ்தானமேறிய லக்கினாதிபதி திசையும் நேர்ந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை வாரமொன்றில் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 3-ல் சனி-சுகே-. 9-ல் சூ-பு

**(15)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி நவதிரிகோணமேறிய ரவி சுக்கிரனிருவரால் நேரே நோக்கப்பட்டு ரோகசப்தமாதிபதி திசையில் பிறந்தால் ஜாதகன் நாற்பத்தெட்டு வயதிற்குமேல் மரணமென்பர்.




## (16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சுக்கிரன்ராகு கூடியிருந்தால் ஜாதகன் ஐம்பத்திரண்டு வரையில் தீர்க்கம் சனிபுக்தி பதினொன்றில் தாய்க்கு ரோகம் பந்துஜன கலகமென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் சனி-ச. 8-ல் செ-பு.

**(17)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி விரயாதி பதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் த்விதியசுகபாக்கிய லாபாதிபதிகள் சேர்ந்திருந்தால் ஐம்பதிற்குமேல் குடும்பபிரிவுண்டாம் அறுபதிற்குமேல் ஜாதகன் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் சனி.

**(18)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் முப்பதுவயதில் அன்னியஸ்திரீயுடன் தீவாந்திரம்போவன் சனிபுக்தி பனிரெண்டில் பிதுர்மாதுர் வர்க்கத்தில் கர்மமென்பர்.

சிம்மலக்கினத்தில் செ. 4-ல் சனி.

**(19)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து லக்கினகேந்திரம பெற்ற சுகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நான்குவயதில் மரணம் அக்காலம் பிதாவுக்குத் தொழில் முடக்கமென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் சனி. 8-ல் சு. 10-ல் செ.

**(20)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து தசமகேந்திரம்பெற்ற சுகபாக்கியாதிபதியால் நேரேநோக்கப்பட்டு அஷ்டமஸ்தானத்தில் சுக்கிரனிருந்தால் நான்குவயதில் ஜாதகன்மரணம் ஜெனனகாலம் பிதாவுக்கு ரோகமென்பர்.




**(21)** (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து லக்கினகேந்திரம்பெற்ற பஞ்சம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் ரவிபுதன் சுக்கிரனிவர்கள் நேர்பார்வையுமிருக்குமானால் ஜாதகன் எண்பத்துமூன்று வரையில் தீர்க்கமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் குரு. 5-ல் சனி. 11-ல் சு.

**(22)** ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து லாபமேறிய திருதியகர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி த்விதியஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் வெகுதீர்க்க முண்டாம் சனிதிசை பிதுர்மரணம் புத்திரகவலையென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் சனி-குரு-ரா. 11-ல் செ-பு.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி வியாழன்ராகுவுடன்கூடி லாபமேறிய குஜன் புதனிருவரால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அருபதிற்குமேல் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் குரு-சனி. 11-ல் சூ-பு-சு.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஸ்வக்ஷேத்திரபஞ்சம அஷ்டமாதிபதியுடன்கூடி லாபஸ்தானமேறிய ரவி புதன் சுக்கிரன் மூவரால் நேரேநோக்கப்பட்டு சனிதிசையும் நேர்ந்தால் ஜாதகன் மூன்றுவயதில் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 2 ல் சூ. 4-ல் செ. 5-ல் சனி-குரு.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஸ்வக்ஷேத்திரபஞ்சம அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை லக்கினதிபதியால் நேரேநோக்கப்பட்டு நான்காமிடமேறிய செவ்வாய்திசையும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.




(26) (ஆருமிடம்)

ஆருமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி ஸ்வக்ஷேத்திரனுய் ஏகனுக தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானததில்பஞ்சமாஷ்டம விரையாதிபதிகள் கூடி யிருந்தால் ஜாதகன் ஐம்பத்தைந்து வயதிற்குமேல் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் சூ-பு 6-ல் சனி.

(27) ஆருமிடத்தில் ஆயுள்காரனுகியசனி ஏகனுய் நின்று ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை த்விதியஸ்தானமேறிய ரவி புதனிருவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிபுக்தியில் பிதாவுக்கும் ஜாதகனுக்கும் யோகம் தாய்க்கு நேத்திரபீடை காணுமென்பர்.

சிம்மலக்கினம் 6-ல் சனி. 8-ல் சு. 12-ல் பு-ச.

(28) ஆருமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து விரையமடைந்த மதிபுதனிருவரால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சுக்கிரனிருந்தால் ஜாதகன் ஐம்பத்தைந்திற்குமேல்மரணம் சனிபுக்தி இருபத்திரண்டில் களத்திரரோகம் அதன்மூலம்பொருள் விரையமென்பர்.

சிம்மலக்கினத்தில் செ 2-ல் சூ-பு. 6-ல் சனி.

**(29)** ஆறுமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் அதற்கெட்டாமிடத்தில் குஜனிருந்து ஆயுள்ஸ்தானத்தை ரவி புதனிருவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இருபத்தாறுவயதில் வைசூரியால் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் குரு. 6-ல் சனி.

**(30)** ஆறுமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனாய்த்தனித்துதனஸ்தானமேறிய பஞ்சம அஷ்டமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் சனிபுக்தியில் மிகுந்த சௌக்கியம் குடும்பத்தில் சுபசோபனம் நாற்கால் சேர்க்கையுண்டாம்ஜாதகன் முப்பத்துமூன்று வயதுவரையில் தீர்க்கமென்பர்.




**(31)** (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனாய்த்தனித்து சுக்கிரனல்நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் மதி குஜன் கேது மூவர்கூடி எட்டாமாதி லாபஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்தாறில் அன்னியதேசத்தில் மரணமாவனென்பர்.

சிம்மலக்கினம் 7-ல் சனி-ச. 8-ல் பு.

**(32)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய் விரையாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் த்விதிய லாபாதிபனேறியிருந்தால் ஜாதகனுக்கு முப்பத்தாறில்சனி திசை ஆதி இடபாரல் புத்திரகளத்திரமரணம் ரொணத்தினல் பூமிமாரல் கஷ்டபலனென்பர்.

சிம்மலக்கினத்தில் சூ. 2-ல் சு-ரா. 7-ல் சனி.

**(33)** ஏழாமிடத்தில்; ஆயுள்காரகனுகிய சனி ஏகனாய் தனித்து ஸ்வக்ஷேத்திர லக்கினுதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் சுக்கிரன் ராகு இவர்கள் நேர்பார்வையு மிருக்குமானல் ஜாதகன் அருபத்திரண்டு வயதிற்குமேல் மரணமென்பர்.

சிம்மலக்கினத்தில் சூ-பு. 2-ல் ரா-சு. 7-ல் சனி

**(34)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனாய் தனித்து லக்கினகேந்திரம்பெற்ற ரவி புதனிருவரால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சுக்கிரன் ராகு நோக்கமுமிருக்குமானல் இரண்டு விவாகமானபிறகு ஜாதகன் நாற்பத்தாறில் ரேழிவால் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் செ. 7-ல் சனி-ரா.

(35) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை த்விதியஸ்தானமேறிய சுக பாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் இருபத்துநான்கு வயதில் ஜாதகன் அன்னியதேசத்தில் ஜலத்தினுல் மாணமாவனென்பர்




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி ஏகனுய்தனித்து குடும்பஸ்தானமேறிய திருதிய தசமகேந்திராதிபதியால்நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நாற்பத்தைந்துவயதில் சனி காரக ரோகத்தினுல் மரணமென்பர்.

சிம்மலக்கினத்தில் செ 8-ல் சனி-குரு

(37) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஸ்வக்ஷேத்திரபஞ்சப அஷ்டமாதிபதியுடன்கூடி லக்சினகேந்திரம் பெற்ற சுகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பது வயதில் வயிற்றுக்கடுப்பால் மரணம் சகோதரனுல் கர்மமென்பர்.

சிம்மலக்கினம் 8-ல் சனி-சு.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி திருதிய தசமகேந்திராதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமலிருந்தால் ஜாதகன் ஜெனித்த இருபத்தைந்து வயதிற்குள் சொத்துகளெல்லாமழிவுண்டாய் குடும்பம் வேறுபடுமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் கு 8-ல் சனி.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய் தனித்து த்விதியஸ்தானமேறிய லக்கினுதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால ஜாதகன் ஐம்பத்தைந்து வயதிற்குமேல் மரணம் சனிபுக்தி முப்பத்தொன்பதில் அன்னியஸ்ரீமூலம் பொருள்விரயம்அவமானமுண்டென்பர்.

சிம்மலக்கினம், 5-ல் சு-கே. 8-ல் சனி.

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து ஒருவரும்பாராமல் அதற்கு தசமகேந்திரத்தில் சுக்கிரன் கேதுகூடி ரோகசப்தமாதிபதிதிசையில் பிறந்தால மாமன் குடும்பத்தில்றுணப்பிணை தேசசஞ்சாரம் புண்ணியநதி ஸ்நானம் சொத்துகளெல்லாம் கைமாருமென்பர்.




**(41)** (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி நீசனாய் ஏகனாகதனித்து திருதியஸ்தானமேறிய புதன் சுக்கிரனிருவரால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடத்தைசெவ்வாய் நேரே பார்க்கப்பட்டு மிருந்தால் ஜாதகன் ஜுரத்தினால் எட்டுவயதில் மரணமென்பர்

சிம்மலக்கினம் 6ல் செ. 9 ல் சனி-கே.

**(42)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிகேதுவுடன்கூடி ரோகஸ்தானமேறிய சுகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் இரண்டுவயதில் ஜன்னியால் மரணம் பின்னும் சகோதரமுண்டென்பர்.

சிம்மலக்கினம் 9-ல் சனி-குரு.

**(43)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி நீசனாய் பஞ்சம அஷ்டமாதிபதியுடன கூடி ஒருவரும்பாராமல்; ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஆறுவயதில் ஜலரோகத்தினால் மரணம்.ஜெனனகாலம் தாய்க்குரோகம் பிதாவுக்கு யோகமென்பர்.

சிம்மலக்கினம் 8-ல் குரு-ச. 9-ல் சனி.

**(44)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சந்திரன்குரு கூடியிருந்தால இருபத்துமூன்றுவயதில் விவாகமாய பின்பு ஜலரோகத்தினால் ஜாதகன்மரணம் விர்த்தியில்லையென்பர்.

சிம்மலக்கினம் 8-ல் ச. 9-ல் சனி.

**(45)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானத்தில் விரையாதிபதி யேறியிருந்தால் ஜாதகன் முப்பத்திரண்டுவயதில் மரணம் சனிபுத்தி இருபத்தேழில் ஜாதகனுக்குரோகம் பிதாவுக்குக்கர்மம் பூமிபொருள் நஷ்டம் விவகாரம் சோரர்பயமென்பர்.




**(46)** (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி ராகுவுடன்கூடி சதுர்த்தகேந்திர மேறிய பஞ்சமாஷ்டம விரையாதிபதிகளால் நேரே நோக்கபட்டு சனிதிசையில் பிறந்தால் மூன்றுமாதத்தில் தாய்மரணம் அன்னியர்பாலுண்பன் ஜாதகன் ஐம்பத்திரண்டிற்குமேல் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் சூ. 10-ல் சனி-கே.

(47) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் சுகஸ்தானமேறிய லக்கினாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் சனிதிசை ஆதி ஜாதகனுக்கு விவாகம் பின்பு சகோதரவர்க்கத்தில் விவாகம் தாய்மரணம் கடைசி அரசர் கலகம் ஜாதகன் எழுபத்தைந்தில் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 3-ல் செ. 10-ல் சனி.

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து திருதியஸ்தானமேறிய சுகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டு சனிதிசையில்பிறந்தால் ஜாதகன் ஐம்பத்தாறு வயதிற்குமேல் மரணம் சனிபுக்தி இருபத்தைந்தில் விவாகம் உத்தியோக லாபமென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் ச. 10-ல் சனி.

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து சதுர்த்தகேந்திரமேறிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் ஐம்பது வயதிற்குமேல் மரணம் சனிதிசை சமயோகமென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் சூ-பு. 10-ல் சனி.

(50) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்நின்று சுக கேந்திரம்பெற்ற லக்கினத்வித்திய லாபாதிபதிகளால்நேரேபார்க்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பதுவயதிற்குமேல் மரணமென்பர்.




(51) (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கினசுக பாக்கியாதிபதிகளுடன் கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி த்வி தியஸ்தான மேறியிருந்தால் ஜாதக னிரட்டைகப் பிறந்தவன் சகோதரன் ஐம்பதிலும் ஜாதகன் ஐம்பத்துமூன்றிலும் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 5-ல் சூ. 8-ல் குரு-ரா-ச. 11-ல் சனி.

(52) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து லக்கினாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் சந்திரன் குரு ராகுகூடியிருந்தால் ஜாதகன் பத்தொன்பதுவயதில் கெர்ப்பகாலத்தில் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 4-ல் செ 11-ல் சனி.

(53) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து சதுர்த்தகேந்திரமேறிய ஸ்வக்ஷேத்திரசுகபாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை முப்பத்தைந்தில் பிதாவுக்கு ரோகம் மாதாவுக்குக் கர்மம் நாற்பத்தேழுக்குமேல் ஜாதகன் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 8-ல் கே. 11-ல் சனி.

(54) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் கேதுயிருந்தால் இரட்டைஜெனனம, முன்பிறந்தது ஐந்துமாதத்திலும் ஜாதகன் திருதிய வயதிலு மரணமென்பர்.

சிம்மலக்கினம் 8-ல் குரு. 11-ல் சனி.

(55) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்'தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் பிரகஸ்பதி யிருந்தால் ஜாதகன் எழுபத்தொன்றில் மரணம்சனிபுக்தி முப்பத்தொன்பதில் களத்திரலாபம் தொழில்விர்த்தி புத்திரவிர்த்தி சௌக்கியபலனென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டா மிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சமதிரிகோணமேறிய சுகபாக்கியாதிபதியால்நோக்கப்பட்டு சனிதிசையில் பிறந்தால்நான்கு வயதில் தாய்க்குரோகம் ஜன்னிநோயால் ஜாதகன் மரணமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் சு-ரா. 4-ல் குரு. 12-ல் சனி-ச.

(57) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திர விரையாதிபதியுடன் கூடி சுகஸ்தானமேறிய பிரகஸ்பதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் சுக்கிரன் ராகு திருஷ்டியுமிருக்குமானால் சனிதிசையில் பிதுர்மரணம் ஜாதகன் நாற்பத்து நான்கு வரையில் தீர்க்கமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் சு. 12-ல் சனி-செ-ரா.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி குஜன் ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை திருதிய கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஜெனித்தவுடனே மரணமென்பர்.

சிம்மலக்கினம் 2-ல்செ. 8-ல் பு-சு. 12-ல் சனி.

**(59)** பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ராகுவுடன் கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய புதன்சுக்கிரனிவரை அங்காரகனால் நேரே நோக்கப்பட்டிருந்தால் பதினைந்து வயதிற்கு மேல் விவகாரம் பொருளழிவென்பர்.

சிம்மலக்கினம் 2-ல் பு 8-ல் குரு 12-ல் சனி.

**(60)** பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனிஏகனாய்தனித்து ஆயுள்ஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திர பஞ்சம அஷ்டமாதி பதியால் நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் ஸ்வக்ஷேத்திர வுச்ச குடும்பாதிபதி பார்வையுமிருக்குமானால் ஜாதகன் வெகுதீர்க்கம்தொண்ணூற்றிரண்டு வயதிற்குமேல் மரணமென்பர்.

சிம்மலக்கினம் சக்கரம் -12,

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்

## கன்னியாசனி ஆயுள்பலன்.

கன்னியா லக்கினம்.

| | | | |
|---|---|---|---|
| செ | | | |
| ச | | | |
| | | | |
| | | | குரு லசனி |

**(1)** உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து சப்தம கேந்திரமேறிய லாபாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்து சனிதிசையில் பிறந்தால் ஒன்பதில் பிதாமரணம் பதினைந்தில் தமையன்மரணம் அருபதிற்குமேல் ஜாதகன் மரணமென்பர்.

கன்னியாலக்கினத்தில் சனி, 2-ல் குரு.

(2) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை பிரகஸ்பதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபத்தெட்டில் மரணம் சனிதிசையில் சகோதரன் பிள்ளையை சுவீகாரமெடுப்பனென்பர்.

கன்னியாலக்கினத்தில் சனி-சூ. 7-ல் செ.

(3) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனிவிரையாதிபதியுடன்கூடி ஏழாமிடமேறிய திருதிய அஷ்டமாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஏழுவயதில் பிதாமரணம் ஜாதகன் பத்தொன்பது வயதில் சுரத்தினால் மரணமென்பர்.

கன்னியாலக்கினத்தில் சனி-சு 9-ல் குரு.

(4) உதையத்தில் ஆயுள்காரகனாகியசனி த்விதிய பாக்கியாதிபதியுடன்கூடி நவதிரிகோணமேறிய சுகசப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் முப்பத்திரண்டுவயதில் மரணமென்பர்.

கன்னியாலக்கினத்தில் சனி-குரு-பு 8-ல் செ.

(5) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின சுகசப்தம கர்மாதிபதிகளுடன்கூடி ஒருவரும் நோககாமல் ஆயுள் ஸ்தானத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் முப்பத்தாறு வயதுவரையில் தீர்க்கமென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி உச்சனாய் லக்கின திருதியாஷ்டம கர்மாதிபதிகளுடன்கூடி ஒருவரும் பாராமல் விரையமடைந்த த்விதியபாக்கியாதிபதிபுக்தியும் நேர்ந்தால் ஜாதகன் மூன்றுமாதத்தில் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 2-ல் சனி. 6-ல் குரு. 12-ல் கே.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ரோகஸ்தானமேறிய சுகசப்தமாதிபதியால் நோக்கப்பட்டு விரையமடைந்த கேதுதிசையும் நேர்ந்தால் ஜாதகன் பால்குடியாமல் மாதமொன்றில் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 2-ல் சனி. 6-ல் ரா.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் ரோகஸ்தானமேறிய ராகுதிசையும் நேர்ந்தால் வாரத்தில் தாய்மரணம் ஜாதகன் பிதாவீடுசேர்ந்துமூன்றுமாதத்தில் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 2-ல் சனி. 10-ல் சூ-பு.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் ஜென்மாதிபதி சூரியனுடன்கூடி கர்மஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் ஆயுதமூலம் ஊனாபட்டு ஜெனிப்பன் உடனே மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 2-ல் சனி. 5-ல் ச. 8-ல் சு.

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து அஷ்டமஸ்தானமேறிய தனபாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு பஞ்சம திரிகோணமமர்ந்த சந்திரன் திசையும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.




(11) (மூன்றுமிடம்)

மூன்றுமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஏகனாய்தனித்து கர்பஸ்தான மேறிய லக்கினாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதிபதி உதையமேறி யிருந்தால் இருபத்தொருவயது வரையில் சுகம் அப்பால்துக்கம் விர்த்தியில்லை சோகமென்பர்.

கன்னியாலக்கினத்தில் ச. 3-ல் சனி.

(12) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் லக்கினகேந்திரம்பெற்ற லாபாதிபதி திசையும் நேர்ந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஜெனித்த நான்காம்நாள் மரணமென்பர்,

கன்னியாலக்கினம் 3-ல் சனி, 7-ல் செ-பு.

(13) மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி லக்கின கர்மாதிபதியுடன்கூடி சப்தமகேந்திர மேறியிருந்தால் நாற்பதிற்குமேல் ஜாதகன்மரணம்சனி புக்தி சகோதர கர்மமென்பர்,

கன்னியாலக்கினம் 3-ல் சனி. 7-ல் குரு.

**(14)** மூன்ருமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து சப்தமகேந்திரம்பெற்ற ஸ்வக்ஷேத்திர பிரகஸ்பதியால் பார்க்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் முப்பத்துமுன்று வரையில் சுகம் அப்பால்சோகம் ஜாதகன் நாற்பதிற்குமேல் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 3-ல சனி. 8-ல் குரு-ச.

**(15)** மூன்ருமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் சந்திரன்குருகூடி யிருந்தால் லாபாதிபன்திசை கர்மாதிபன்புக்தி நாற்பதுவயதில் ஜாதகன்மரணமென்பர்.




**(16)** (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனுகிய சனி ஏகனுய்தனித்துதசமகேந்திரம்பெற்ற த்விதிய பாக்கியாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அறுபதுவயதிற்குமேல் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 4-ல் சனி. 10-ல் சு-சூ

**(17)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து கர்மஸ்தானமேறிய தனபாக்கிய விரையாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டு சுக்கிரன்திசையில் பிறந்தால் ஜாதகன் ஜெனனமுதல் றிணத்திஞல் துன்பப்பட்டு மூன்றுவயதிற்குள் மரணமாவனென்பர்.

கன்னியாலக்கினத்தில் சு 4-ல் சனி-ச.

**(18)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகியசனிலாபாதிபதியுடன் கூடி ஒருவரும்பாராமல் லக்கினகேந்திரமேறிய த்விதியபாக்கியாதிபதி திசையிம்நேர்ந்தால் ஜாதகன் ஜெனித்தவுடனேமரணம் தாயுமடுத்து மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 4-ல் சனி-ச. 12-ல் சு.

**(19)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி சந்திரனுடன்கூடி ஒருவரும்நோககாமல் அதற்கு ஒன்பதாமிடத்திலிருக்கும் தனபாக்கியாதிபதி திசையும்நேர்ந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஓராண்டில் மரணமென்பர்.

கன்னியாலக்கினத்தில் ச. 4-ல் சனி.

(20) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் அதற்குக் கர்மஸ்தானத்திலிருக்கும்லாபாதிபதி புக்தியும்நேர்ந்தால் ஜாதகன் வாரத்தில்மரணம் பின்விர்த்தியுண்டென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் ஸ்வக்ஷேத்திரம்பெற்று லாபாதிபதியால் நேரேநோக்கப்பட்டுஎட்டுக்கெட்டாமிடத்தில் வியாழனதிருஷ்டியுமிருக்குமானால் ஜாதகன் முப்பத்தைந்தில் மரணமென்பர்.

கன்னிபாலக்கினம் 5-ல் சனி. 8-ல் ச-குரு-கே.

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் மதி குரு கேது மூவர்கூடியிருந்தால் ஜாதகன் ஐம்பத்துமூன்று வயதிற்குமேல் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 2-ல் பு 5-ல் சனி 8-ல் ரா.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்நின்று ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய ராகுவை ஜென்மகர்மாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இருபத்தைந்துவயதிற்குமேல் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 5-ல் சனி-ச. 8-ல் குரு.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி லாபாதிபதியுடன் கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் சுகசப்தமாதிபனேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஓராண்டில் மரணமாவனென்பர்.

கன்னியாலக்கினம் 5-ல் சனி. 8-ல் குரு. 12-ல் ரா.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்நின்று ஒருவருமநோக்காமல் ஆயுள்ஸ்தானத்தில் வியாழனிருந்து விரையமடைந்த ராகுதிசைகடைசியில் பிறந்தால் ஜாதகன் ஐந்துவயதில் மரணத்தை யடைவனென்பர்.




(26) (ஆருமிடம்)

ஆருமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய் விரயாதி பதியுடன்கூடி ஒருவரும்பாராமல் சப்தமகேந்திரமேறிய ராகுதிசையுமநேர்ந்தால் ஜாதகன் பதினெழுவயதில் ஜலத்தில் மரணமாவனென்பர்.

கன்னிபாலக்கினம் 6-ல் சனி-கே.

(27) ஆருமிடத்தில் ஆயுள்காரனாகிய சனி கேதுவுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் சனிதிசை அருபதிற்குமேல் ஜாதகன் மரணம் சனிபுக்தி முப்பத்திரண்டில் புத்திரன்மரணம்ரோகவிர்த்தி சத்துருக்களால் பொருள் நாசமென்பர்.

கன்னியாலக்கினம் 6-ல் சனி-ரா.

(28) ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ராகுதிசையும் நேர்ந்தால் ஜாதகன் இருபத்துநான்கில்மரணம் அதற்குமுன் களத்திரரோகம் பிதுர்கர்மம் விவகாரம் குடும்பகலகமென்பர்.

கன்னிபாலக்கினம் 6-ல் சனி 10-ல் குரு.

(29) ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்துதசம கேந்திரமேறிய சுகசப்தமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால்பஞ்சம ரோகாதிபன்திசை ஐம்பதுவயதிற்குமேல் ஜாதகன் மரணமாவனென்பர்.

கன்னியாலக்கினம்6-ல் சனி. 8-ல் ச-ரா.

(30) ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்துஒருவரும் நோக்காமல் ஆயுள்ஸ்தானத்தில் சந்திரன் ராகு கூடியிருந்தால் ஜாதகன் அருபதிற்குமேல் மரணம் சனிபுக்தி நாற்பத்திரண்டில் களத்திரம் பிரிவுபடுமென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி ஸ்வக்ஷேத்திர சுகசப்தமாதிபதியுடன் கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்து சனிதிசையில் பிறந்தால் ஜாதகன் ஐம்பதுவயதில் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 7-ல் சனி-ரா.

(32) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுகூடி ஒருவரும் நோக்காமல் எட்டாமிடமும் சுத்தமாயிருந்தால் ஐம்பத்திரண்டில் சனிதிசை ராகுபுக்தியில் ஜாதகன் மரணத்தை யடைவனென்பர்.

கன்னியாலக்கினம் 7-ல் சனி-சு-ரா.

(33) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஒருவரும் நோக்காமல் அஷ்டமஸ்தானமும் சுத்தமாயிருந்தால் சனிபுக்தி நாற்பதில் பிதாமரணம் ஐம்பதில் தாய்மரணம் ஜாதகன் அருபதிற்குமேல் மரணமென்பர்.

கன்னியாலக்கினத்தில் குரு. 7-ல் சனி.

(34) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து லக்கினகேந்திரம்பெற்ற சுகசப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அருபத்துநான்கு வயதில் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 7-ல் சனி-சு.

(35) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி த்விதிய பாக்கியாதிபதியுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் சனிதிசையில் சௌக்கியமும் அன்னியகுடும்பத்தைச் சேர்ந்து சுகமும் திசைகடைசி விவாகமு முண்டென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி நீச்சம்பெற்று ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் நவதிரிகோணமேறியஎட்டாமாதிபை லக்கினகேந்திரபெற்ற பிரகஸ்பதியால்நோக்கப்பட்டிருந்தால்ஜாதகன்இருபத்தொருவயதில் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 2-ல் குரு 8-ல் சனி.

(37) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து த்விதியஸ்தானமேறிய சுகசப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பதிற்குமேல் மரணம் முப்பதுமுதல் ருணத்தினால் அனேகதேசங்கள் சுற்றிவருவனென்பர்.

கன்னிபாலக்கினம் 2ல் சூ-ச-பு-ரா. 8-ல் சனி-கே.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி கேதுவுடன்கூடி த்விதியஸ்தானமேறிய ரவி மதி புதன் ராகுநால்வரால் நேரேநோக்கப்பட்டிருந்தால் சனிதிசை ஆதிதாய்மரணம் அப்பால் ஜாதகன் மாமனுல் வளர்க்கப் படுவனென்பர்.

கன்னிபாலக்கினம் 2 -ல் செ. 8-ல் சனி-சூ.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி விரையாதிபதியுடன்கூடி தனஸ்தானமேறிய திருதிய அஷ்டமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு சனிதிசையில்பிறந்தால் ஜாதகன் நான்குவயதில் மரணமென்பர்.

கன்னிபாலக்கினம் 2-ல் சூ. 8-ல் சனி-செ.

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஸ்வக்ஷேத்திரதிருதிய அஷ்டமாதிபதியுடன்கூடி விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஏழுமாதத்தில றிணத்தினுல் மரணமென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஜென்ம கர்ம விரையாதிபதிகளுடன் கூடிலாபாதிபதியால் நேரேநோக்கப்பட்டு சனிதிசையில் பிறந்தால் எட்டுவயதில்பிதா மரணம் தாய்க்குரோகம் ஜாதகன் அருபத்தைந்தில் மரணமென்பர்.

கன்னிபாலக்கினம் 2-ல் ரா 9-ல் சனி-செ-சு.

(42) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி தனதிருதியாஷ்டம பாக்கியாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் அதற்கெட்டாமிடமேறிய ராகுதிசையும் சேர்ந்தால் ஜாதகன் ரோகத்தினுல் இருபத்தைந்துவயதில் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 3-ல் குரு 9-ல் சனி-செ-சு-ரா.

(43) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி செவ்வாய் சுக்கிரன் ராகு மூவருடன்கூடி திருதியஸ்தானமேறிய சுகசப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் முப்பத்தாறுவயதில் மரணமென்பர்.

கன்னியாலக்கினத்தில் செ 4 ல் குரு 9-ல் சனி-ரா

(44) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை பிரகஸ்பதியால் ஐந்தாம் பார்வை பார்க்கப்பட்டு எட்டாமாதி லக்கினகேந்திரமேறி யிருந்தால் ஜாதகன் நாற்பத்திரண்டுவரையில் தீர்க்கமென்பர்.

கன்னியாலக்கினம் 3-ல் சு 9-ல் சனி-கே.

(45) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி கேதுவுடன்கூடி த்விதிய பாக்கியாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்து சனிதிசையில் பிறந்தால் ஜாதகன்எழுபத்துநான்கு வயதில் மரணமென்பர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி ஏகனுய்தனித்து ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் சனி திசை சௌக்கியம் கடைசியில் விவாகம் சகோதரமரணம் ஐப்பதிற்குமேல்ஜாதகன் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 2-ல் செ. 10-ல் சனி-சூ.

(47) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை ஆயுள்ஸ்தானுதி பதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இருபது வயதிற்குள் மரணமென்பர்.

கன்னியாலக்கினத்தில் குரு 4-ல் சூ-பு. 10-ல் சனி.

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து சதுர்த்தகேந்திரமேறிய ஜென்மகர்ம விரையாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டு லக்கினகேந்திரம் பெற்ற வியாழன்திசையும் நேர்ந்தால் ஜாதகன் எட்டுநாளில் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 3-ல் செ. 10-ல் சனி.

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து ஸ்வக்ஷேத்திர திருதிய அஷ்டமாதிபதியால் எட்டாம்பார்வை பார்க்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் ஐம்பதுவயதிற்குமேல் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 4-ல் சூ-பு. 10-ல் சனி.

(50) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து சதுர்த்தகேந்திரமேறிய ரவி புதனிருவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை சௌக்கியம் உத்தியோகம் தேசமாறல் திசை ஆதிவிவாகம் ஐம்பத்தாறிற்குமேல் ஜாதகன் மரணமென்பர்.




(51) (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்கூடி திருதியஸ்தானமேறிய சுகசப்தமாதிபதியால் நோக்கப்பட்டுவிரையமடைந்த சூரியன் திசையும் சேர்ந்தால்ஜாதகன் பிறந்தவாரத்தில் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 4-ல் செ. 11-ல் சனி-பு-குரு-சு-கே.

(52) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி புதன் குருசுக்கிரன் கேது நால்வருடன்கூடி சுகஸ்தானமேறிய எட்டாமாதியால் நோக்கப்பட்டு சனிதிசையில் பிறந்தால் ஜாதகன் நாற்பத்திரண்டு வரையில் தீர்க்கமென்பர்.

கன்னியாலக்கினம் 11-ல் சனி-செ-ரா.

(53) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி செவ்வாய்ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் சனிதிசையில் பிறந்தால் ஜாதகன்பதினாறுவயதில் அக்கினிமூலமரணம் அடுத்த ஜேஷ்ட சகோதரியும் கெர்ப்பவேதனையால் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 5-ல் சூ-பு 11-ல் சனி-ரா.

(54) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன் கூடி பஞ்சம திரிகோணமேறிய ஜென்மகர்ம விரையாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இருபதுவயதில் ஜலரோகத்தினால் மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 11-ல் சனி-செ-பு-கே

(55) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி செவ்வாய்புதன் கேது மூவருடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் ஜாதகன் நாற்பத்து மூன்றுவயதில் மரணம் சனிபுக்தி இருபத்தேழில் தாய் மரணம் களத்திரவர்க்க கர்மமென்பர்.




## (56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டா மிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி திருதிய*அஷ்டமாதிபதியுடன் கூடி சுக சப்தமாதிபதியால் நேரேநோக்கப்பட்டு லாபமேறிய ஜென்ம கர்மாதிபதி திசையும் நேர்ந்தால் ஜாதகன் ஓராண்டில் மரணமென்பர்.

* கன்னியாலக்கினம் 6ல் சூ-பு. 12-ல் சனிகுரு-.

(57) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி சுகசப்தமாதிபதியுடன்கூடி ரோகஸ்தானமேறிய ஜென்ம கர்ம விரையாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் நாற்பத்துநான்குவரையில் தீர்க்கமென்பர்.

கன்னியாலக்கினம் 12-ல் சனி-செ.சு.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி தனதிருதிய அஷ்டமபாக்கியாதிபதிகளுடன்கூடி ஒருவரும்நோக்காமல் எட்டாமிடமும் சுத்தமாயிருந்தால் ஐம்பத்தொன்பதுவரையில்தீர்க்கப்சனி திசை அடிக்கடி இடமாரல் பிதாவுக்குப் பொருள் சேர்க்கையென்பர்.

கன்னியாலக்கினம் 6-ல் சூ. 12-ல் சனி-ச.

(59) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி லாபாதிபதியுடன்கூடி ரோகஸ்தானமேறிய விரையாதிபதியால் நேரேநோக்கப்பட்டு சனிதிசை பிற்பாகத்தில் பிறந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.

கன்னியாலக்கினம் 5-ல் செ. 6-ல் ச. 12-ல் சனி.

(60) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனிஏகனுய்தனித்து சப்தமகேந்திரமேறிய லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி உச்சம்பெற்றிருந்தால் ஜாதகன் எழுபத்தொன்பது வரையில் தீர்க்கமென்பர்.

கன்னியாலக்கினம் சக்கரம் -12.

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்

## துலாசனி ஆயுள்பலன்.

துலா  லக்கினம்.


(1) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி தசமகேந்திராதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை த்விதியஸ்தானமேறிய பாக்கிய லாபவிரையாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபதுவயதில் மரணமென்பர்.

துலாலக்கினத்தில் சனி-ரா. 8-ல் செ.

(2) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் த்விதிய சப்தமாதிபதியேறியிருந்தால் சனிதிசை பதினைந்துவயதில் ஜாதகன்மரணம் அடுத்து பிதுர்வர்க்கத்தில் கர்மம் குடும்ப கலகமென்பர்.

துலாலக்கினத்தில் சனி. 8-ல் குரு.

(3) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும் நோக்காமல் எட்டாமிடத்தில் திருதிய ரோகாதிபனேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஓராண்டில் அரிட்டமாவனென்பர்.

துலாலக்கினத்தில் சனி-ச 4-ல் குரு. 8-ல் சு.

(4) உதையத்தில் ஆயுள்காரகனாகியசனி கர்மாதிபதியுடன் கூடி ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானமேறிய லக்கின அஷ்டமாதிபனை நீச்சகுருவால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் முப்பதுவயதுக்குமேல் துர்மரண மடைவனென்பர்.

துலாலக்கினத்தில் சனி-பு-சு. 2-ல் ச.

(5) உதையத்தில் ஆயுள்காரகனுகிய சனி லக்கினஷ்டம பாக்கிய விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமி ல்லே பிறந்தவாரத்தில் மரணமென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனுகிய சனி திருதியரோக பாக்கிய விரையாதிபதி களுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந் தால் ஜாதகன் அருபதிற்குமேல் மரணம் சனிதிசையில் தேசம்சுற்றி அலேவன் சுகமி ல்லே யென்பர்.

துலாலக்கித்தில் செ 2-ல் சனி. 4-ல் குரு. 8-ல் சூ.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து பூமகன் எட்டாம்பார்வையை யடைந்த லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டுக்கு யெட்டாமாதி நீச்சம்பெற்றிருந்தால் ஜாத கன் ஆறுமாதத்தில் கழுத்தில் பிணமுண்டாகி பால்குடியாமல் மரிப் பனென்பர்.

துலாலக்கினம் 2-ல் சனி. 10- செ-சு.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து ஒருவருப்பாராமல் எட்டாமாதி த்விதிய சப்தமாதிபதியுடன் கூடி தசமகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லே மாதமொன்றில் மரணமென்பர்.

துலாலக்கினம் 2-ல் சனி. 8-ல் சூ. 9 -ல் சு.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து அஷ்டமஸ்தானமேறிய லாபாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட் டாமாதி நவதிரிகோண மேறியிருந்தால் ஜாதகன் அருபத்திரண்டு வரையில் தீர்க்கமென்பர்.

துலாலக்கினம் 2-ல் சனி. 6-ல் சு-ச-ரா.

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் நின்று ஒருவரும்பாராமல் எட்டாமாதி சந்திரன் ராகுவுடன்கூடி ரோகஸ் தான மேறியிருந்தால் ஜாதகன் முப்பத்திரண்டு வயதில் மரணமாவ னென்பர்.




## (11) (மூன்றாமிடம்)

மூன்றாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய கர்மாதிபதியை பாக்கிய லாப விரையாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் முப்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

துலாலக்கினம் 2-ல் பு-ரா. 3-ல் சனி-செ.

**(12)** மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி த்விதிய சப்தமாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் எட்டாமிடத்தை தனஸ்தானமேறிய புதன் ராகுவிருவரால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இருபத்தெட்டுவரையில் தீர்க்கமென்பர்.

துலாலக்கினம் 3-ல் சனி-கே. 12-ல் செ.

**(13)** மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் கூடி விரையமேறிய தன சப்தமாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் சனிதிசை புக்தி ஐந்துவயதில் சகோதரனும் பின்பு ஜாதகனு மரணமென்பர்.

துலாலக்கினம் 3-ல் சனி. 9-ல் சு. 11-ல் குரு.

**(14)** மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து லாபமேறிய திருதிய ரோகாதிபதியால் நோக்கப்பட்டெட்டாமாதி நவதிரிகோண மெறியிருந்தால் ஜாதகன் இருபத்துநான்கு வயதில் மரணமென்பர்.

துலாலக்கினம் 3-ல் சனி-சு-பு-குரு.

**(15)** மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதிய ரோக பாக்கிய லாப விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல்ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் யோகபஞ்சம் மேல்திசை பிரயாணம் ரோகமுண்டாம் ஜாதகன் சனிதிசை ஆதி ஐம்பத்தேழில் மரணமென்பர்.




## (16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரம் பெற்று ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் ஐம்பத்திரண்டு வயதிற்குமேல் மரணமென்பர்.

துலாலக்கினம் 4-ல் சனி-செ.

(17) நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி த்விதிய சப்தமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் சனிதிசைபுக்தியில் நல்லயோகமுண்டாய்சங்கீதப்பிரியம் தாசிசேர்க்கை விவாகமுண்டாய் நாற்பத்திரண்டில் சனிபுக்தியில் ஜாதகன் மரணமென்பர்.

துலாலக்கினம் 4-ல் சனி-பு-சூ-சு 5-ல் குரு.

(18) நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி லக்கினஷ்டம பாக்கிய லாபவிரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும்நோக்காமல்பஞ்சம திரிகோணமேறிய வியாழன் திசையும் நேர்ந்தால் ஜாதகன் றிணத்தால் மரணம் பின்னும் ஆண்மரணமென்பர்.

துலலக்கினத்தில் குரு. 4 ல் சனி

(19) நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்து எட்டுக்குயெட்டாமாதி லக்கினகேந்திரம் பெற்றிருந்தால் ஜாதகன் முப்பது வயதிற்குமேல் மரணமாவனென்பர்.

துலாலக்கினம் 4-ல் சனி-ரா. 8-ல் குரு.

(20) நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஸ்வக்ஷேத்திரம் பெற்று ராகுவுடன்கூடி ஆயுள்ஸ்தானமேறிய திருதியரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் எழுபதிற்குமேல்மரணம்சனிபுக்தி இருபத்திரண்டில் தாய்மரணம் க்ஷேத்திரம் நாசமென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி ஏகனுய்தனித்துநவதிரிகோணமேறிய பிரகஸ்பதியால்நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பத்தெட்டில் மரணம் சனிதிசையில் புத்தி நீசமும் ராஜதண்டனையும் சகோதரன் இடமாறலுமுண்டென்பர்.

துலாலக்கினம் 2-ல்-சு. 5-ல் சனிசெ-ரா.

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி செவ்வாய் ராகுவுடன்டி ஒருவரும்பாராமல் எட்டாமாதி த்விதியஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஒன்பதுமாதத்தில் மரணமென்பர்.

துலாலக்கினம் 5-ல் சனி-கே.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் சனிதிசையில் தாய்க்குமூன்றுமாதம் ரோகம் ஜாதகன் நாற்பத்தொன்பது வரையில் தீர்க்கமென்பர்.

துலாலக்கினம் 5-ல் சனி, 9-ல் சூ-பு-சு.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி பாக்யலாப விரையாதிபதிகளுடன் கூடி நவதிரிகோணமேறியிருந்தால் ஐம்பத்தேழுமுதல் ரோகமுண்டாகிஜாதகன் ஐம்பத்தெட்டில் மரிப்பனென்பர்.

துலாலக்கினத்தில் சு 5-ல் சனி-ச. 8-ல் செ.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கர்மாதிபதியுடன் கூடி ஒருவரும்நோக்காமல் ஆயுள்ஸ்தானத்தில் குஜனிருந்தஎட்டாமாதி லக்கினகேந்திரம் பெற்றிருந்தால் ஜாதகன் எழுபத்தொன்பதில் மரணம் சனிபுக்தி முப்பத்தேழில் தாய்மரணம் பூமிலாபம்பொருள் சேர்க்கையென்பர்.




(26) (ஆறாமிடம்)

ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து விரையமடைந்ததிருதிய ரோகாதிபதியால்நேரேநோக்கப்பட்டு ஆயுள் ஸ்தானத்தில் த்விதிய சப்தமாதிபனேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்திரண்டு வயதுவரையில் தீர்க்கமென்பர்.

துலாலக்கினம் 6-ல் சனி. 8-ல் ச.

(27) ஆறாமிடத்தில் ஆயுள்காரனாகியசனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் தசமகேந்திராதிபதி யேறியிருந்தால் ஜாதகன் ஒன்பதுவயதில் ஜுரத்தினால் மரணம் அக்காலம் பிதாவுக்கு ரோகம் உத்தியோகநஷ்டம் பந்துகலகமென்பர்.

துலாலக்கினம் 2-ல் செ-பு 6-ல் சனி-குரு.

(28) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனிஸ்வக்ஷேத்திரதிருதிய ரோகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை குஜன் புதனிருவரால்நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை நான்குவயதில் மரணமென்பர்.

துலாலக்கினம் 6-ல் சனி.

(29) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய்தனித்து ஒருவரும் பாராமலிருந்தால் சுகபஞ்சமாதிபன் திசையில் களத்திரலாபம் புத்திரவுற்பத்தியுண்டாம் ஜாதகன் அற்பாயுசு இருபது வயதிற்குள் மரணமென்பர்.

துலாலக்கினம் 6-ல் சனி-செ. 8-ல் சூ-பு.

(30) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி த்விதிய சப்தமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் பாக்கியலாபவிரையாதிபதிக ளேறியிருந்தால் ஜாதகன் மத்திமாயுசு முப்பதுவயதிற்குமேல் மரணமென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி நீசனுய் கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை சனிதிசையும் நேர்ந்தால் பதினெட்டு மாதத்தில் மரணமென்பர்.

துலாலக்கினத்தில் சு 7-ல் சனி-சூ. 8-ல் செ.

(32) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி லாபாதிபதியுடன் கூடிஉதையமேறியஸ்வக்ஷேத்திரலக்கின அஷ்டமாதிபதியால்நேரே நோக்கப்பட்டு எட்டாமிடத்தில்செவ்வாயிருந்தால் ஜாதகன் முப்பதுவயதில் ஆயுதமூலம் வெட்டுண்டு மரிப்பனென்பர்.

துலாலக்கினம் 7-ல் சனி-குரு. 8-ல் பு 12-ல் செ.

(33) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி திருதிய ரோகாதிபதியுடன்கூடி விரையமடைந்த த்விதிய சப்தமாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் புதனிருந்தால் ஜாதகன்சனிபுக்திஅருபத்தைந்தில் மரணமென்பர்.

துலாலக்கினத்தில் ச. 4-ல் செ. 7-ல் சனி-சு.

(34) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி லக்கின அஷ்டமாதிபதியுடன்கூடி சுகஸ்தானமேறிய த்விதிய சப்தமாதிபதியால் நோக்கப்பட்டு லக்கினகேந்திரம்பெற்ற கர்மாதிபதி திசையும்நேர்ந்தால் ஜாதகன் ஐந்தாம்நாள் மரணமென்பர்.

துலாலக்கினத்தில் பு-ச. 7-ல் சனி-செ. 8-ல் குரு-சு.

(35) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஸ்வக்ஷேத்திர த்விதிய சப்தமாதிபதியுடன்கூடி லக்கினகேந்திரம் பெற்ற மதிபுகனிருவரால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் வியாழன் சுக்கிரன் சேர்ந்திருந்தால் ஜாதகன் வெகுதீர்க்கம் சனிதிசை முற்பாகம் கஷ்டம் பிற்பாகம் சுகமென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி ராகுவுடன்கூடி தனஸ்தானமேறியபாக்கிய விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நாற்பத்தைந்திற்கு மேல் மரணம் சனிதிசை முற்பாதி உத்தியோகவிர்த்தி குடும்பத்தில்பர்கம் பிரிதல் புத்திரசந்தானம் புத்திரவிவாகம் பின்பு புத்திரசோகமென்பர்.

துலாலக்கினம் 8-ல் சனி.

(37) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து ஒருவரும்பாராமலிருந்தால் சனிபுக்தி இருபத்தாறில் முற்பாகம் உத்தியோகலாபம் சுகமுண்டாம் பிற்பாகம உத்தியோகநஷ்டம் விவகாரம் பொருள்விரையம் மனதுன்பம் ஜேஷ்டபிதாமரணம் கஷ்டபலனென்பர்,

துலாலக்கினம் 7-ல் செ. 8-ல் சனி-ச.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி தசமகேந்திராதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் அதற்கு விரையஸ்தான மேறிய ஸ்வக்ஷேத்திர த்விதிய சப்தமாதிபதி திசையும்நேர்ந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பதினொருமாதத்தில் மரணமென்பர்.

துலாலக்கினம் 2-ல் சூ. 8-ல் சனி-சு. 10-ல் குரு.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனிஸ்வக்ஷேத்திர லக்கின அஷ்டமாதிபதியுடன் கூடி த்விதியஸ்தானமேறியலாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டுக்கு யெட்டாமாதி உச்சம் பெற்றிருந்தால் ஜாதகன் எண்பத்தைந்துவரையில் தீர்க்கமென்பர்.

துலாலக்கினம் 2-ல் ச. 8-ல் சனி-செ. 11-ல் சு-பு.

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி த்விதிய சப்தமாதிபதியுடன்கூடி கர்மாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமாதி பாக்கிய விரையாதிபதியுடன் சேர்ந்து லாபஸ்தானமேறி யிருந்தால் ஜாதகன் சனிதிசைபுக்தி ஐம்பத்தொன்பதில் ஜன்னிமூல மரணமாவனென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து திருதியமேறியரவி புதனிருவரால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி செவ்வாயுடன்கூடி சுககேந்திரம் பெற்றிருந்தால் ஜாதகன் நாற்பத்திரண்டு வயதில் மரணமென்பர்.

துலாலக்கினம் 3-ல் செ-சு. 9-ல் சனி.

(42) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று வீரியஸ்தானமேறிய லக்கின த்விதியசப்தம அஷ்டமாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்து சனிதிசையும் நேர்ந்தால்ஜாதகன் இருபத்தொருவயதில் மரணமென்பர்.

துலாலக்கினம் 9-ல் சனி. 10-ல் சு.

(43) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானமும் சுத்தமாயிருந்து எட்டாமாதி தசமகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை இரண்டு வயதில் மரணமென்பர்.

துலாலக்கினம் 2-ல் சூ-பு 3-ல் சு 9-ல் சனி.

(44) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி லக்கின அஷ்டமாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் பாக்கியலாப விரையாதிபதிகளின் பார்வையுமிருக்கு மானால் சனிதிசைக்கடைசி பிதாமரணம் நாற்பத்துமூன்று வயதிற்குமேல் ஜாதகன் மரணமென்பர்.

துலாலக்கினம் 9-ல் சனி.

(45) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானமும் சுத்தமாயிருந்தால் சனிதிசையிற் பாதியில் ஜாதகனுக்குக் களத்திரமரணம் மருவிவாகம் அதுமுதல் ஆறுவருடகாலம் விவகாரம் பொருள்செலவு பலவிததுன்பம் பின்னால் ஜெயமுண்டெனபர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்கூடித்விதிய சப்தமாதிபதியுடன் சேர்ந்து தனஸ்தானமேறிய திருதியரோகாதிபதியால் நோக்கபட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை வயதொன்றில்மரணமென்பர்.

துலாலக்கினம் 2-ல் குரு 10-ல் சனி-ரா.

(47) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன் கூடி குடும்பஸ்தானமமர்ந்த திருதிய ரோகாதிபதியால் நோக்கப்பட்டு சுக பஞ்சமாதிபதி புக்தியும்நேர்ந்தால் ஜாதகன் தீர்க்கமில்லைபிறந்த வாரத்தில் மரணமென்பர்.

துலாலக்கினம் 8-ல் செ 10-ல் சனி-ச.

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஸ்வக்ஷேத்திரசம கேந்திராதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் ஆயுள்ஸ்தானத்தில் த்விதிய சப்தமாதிபதி ஏறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்திரண்டுவரையில் தீர்க்கமென்பர்.

துலாலக்கினத்தில் சு. 10-ல் சனி.

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்து எட்டாமாதி லக்கினகேந்திரம் பெற்றிருந்தால் ஜாதகன் நாற்பத்திரண்டு வயதிற்குமேல் மரணமென்பர்.

துலாலக்கினம் 3-ல் செ. 10-ல் சனி-ச

(50) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திர கர்மாதிபதியுடன்கூடி த்விதிய சப்தமாதிபதியால் எட்டாம் பார்வை பார்க்கப்பட்டிருந்தால் சனிதிசைபுக்தி நாற்பதிற்குமேல் பலமான சத்துருவால் விவகாரம் பொருள்செலவு மனம்புண்ணாகு மென்பர்.




(51) (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சமதிரிகோண மேறிய பிரகஸ்பதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்தானத்தில் பூமகன் எட்டாம் பார்வையுமிருக்குமானால் ஜாதகன்நாற்பத்தைந்துவயதில் மரணமென்பர்.

துலாலக்கினம் 11 ல் சனி-குரு.

(52) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதிய ரோகாதிபதியுடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் சனிதிசை கடைசிவிவாகம் பிதர்மரணம் பந்து கலகமுண்டாம் ஜாதகன் நாற்பதிற்குமேல் மரணமென்பர்.

துலாலக்கினம் 4-ல் குரு. 8-ல் செ. 11-ல் சனி-ரா.

(53) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனிராகுவுடன்கூடி அஷ்டமஸ்தானமேறிய த்விதிய சப்தமாதிபதியால் நோக்கப்பட்டு எட்டுக்கு யெட்டாமாதி நீச்சப்பெற்றிருந்தால் ஜாதகன் ஐம்பதிற்கு மேல்-மரணமென்பர்.

துலாலக்கினம் 8-ல் ரா. 11-ல் சனி.

(54) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில ராகுயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஐந்துவபதிற்குள் மரணம் ஜெனனகாலம் தாய்க்கு ரோகம்பிதாவுக்குத் தொழில்விர்த்தி ராஜகிஸ்டேமென்பர்.

துலாலக்கினம் 4-ல் சு-ச-ரா. 5-ல் சூ 11-ல் சனி.

(55) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சமஸ்தானமேறிய லாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி சந்திரன் ராகுவுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறி யிருந்தால் ஜாதகன் நாற்பத்தொன்பதுவரையில் தீர்க்கமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டா மிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் பாக்கிய லாப வுரையாதிபதிக ளேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்து மூன்றுவயதில் மரணமென்பர்.

துலாலக்கினம் 12-ல் சனி-சூ-பு.

(57) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பாக்கிய லாப விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானமும் சுத்தமாயிருந்தால் சனிதிசை எழுபத்தைந்தில அரசாகலகம் பொருள்நஷ்டம் காராக்கிரகம் புத்திரன்மூலம் துன்பமென்பர்.

துலாலக்கினம் 2-ல் சூ 6-ல் குரு 12-ல் சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஸ்வக்ஷேத்திர திருதியரோகாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சூரியன் திருஷ்டியுமிருக்குமானால் இரட்டையாக ஜெனனம் மாதமிரண்டில் மரணமென்பர்.

துலாலக்கினம் 6-ல் ச. 12-ல் சனி.

(59) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனிஏகனாய்தனித்து ரோகஸ்தானமேறிய சசமகேந்திராதிபதியால் நேரே பார்க்கப்பட்டிருந்தால் சனிதிசையில் பிதுர்மரணம் அப்பால் சகோதரன் சிறியபிதாவை அடுத்து குடும்பத்தில்கலகம் செய்வனென்பர்.

துலாலக்கினம் 6-ல் செ. 8-ல் ரா. 12-ல் சனி-குரு-ச.

(60) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதிய ரோக கர்மாதிபதிகளுடன்கூடி த்விதிய சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் ராகுவிருந்தால் ஜாதகன் நாற்பது வயதுவரையில் தீர்க்கமென்பர்.

துலாலக்கினம் சக்கரம் -12,

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்.

விருக்ஷிகசனி ஆயுள்பலன்

விருக்ஷிக  லக்கினம்.



(1) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் ஸ்வக்ஷேத்திர அஷ்டம லாபாதிபதியேறியிருந்தால் ஜாதகன் வெகுதிர்க்கம் எண்பதுவயதிற்குமேல் மரணத்தையடைவனென்பர்.

விருச்சிகலக்கினத்தில் சனி-ச.

(2) உதையத்தில் ஆயுள்காரகனுகிய சனி நவதிரிகோணுதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடமும் சுத்தமாகி திருதிய சுகாதிபதிதிசையில் பிறந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை மூன்றுவயதில் மரணமென்பர்.

விருச்சிகலக்கினத்தில் சனி 8-ல் சு.

(3) உதையத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய்நின்று ஒருவரும் நோக்காமல் அஷ்டமஸ்தானத்தில் தசமகேந்திராதிபதி யேறியிருந்தால் ஜாதகன் பூமி செல்வமுடையவனுய் நாற்பதுவயதில் மரணத்தை யடைவனென்பர்.

விருச்சிகலக்கினத்தில் சனி. 10-ல் பு-சு-கே.

(4) உதையத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து ஒருவரும்நோக்காமல் எட்டாமாதி சுக்கிரன் கேதுவுடன்கூடி தசமகேந்திரமேறி ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் மத்திமாயுசு முப்பதுவயதுவரையில் தீர்க்கம் சனிபுக்தி பத்தொன்பதில் களத்திரலாபம் பொருள் சேர்க்கையென்பர்.

விருச்சிலெக்கினத்தில் சனி 7-ல் செ

(5) உதையத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து சப்தமகேந்திரமேறிய ஜென்ம ரோகாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் சனிதிசை ஆதி பிதுர்மரணம் அன்னிய தீவு பிரயாணம் பிதுர்வர்க்கரோகம் துன்பமென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனுகிய சனி கேதுவுடன்கூடி ஒருவரும் பாராமல் எட்டாமாதி லக்கின கேந்திரமேறி யிருந்தால் ஜாதகன் நாற்பத்து நான்குவயதில் மரணம் சனிபுக்தி பதினைந்தில் விஷகண்டம் நிவர்த்தியென்பர்.

விருச்சிகலக்கினம் 2-ல் சனி-ச. 6-ல் பு

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி நவதிரிகோணுதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி ரோகஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் ஐம்பதுவயதிற்குமேல்மரணம் சனிபுக்திபனிரெண்டுவயதில் விவாகம் தாய்க்குரோகம் பிதாவுக்குயோகமென்பர்

விருச்சிகலக்கினம் 2-ல் சனி-சூ-பு-ரா.

**(8)** இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரவிபுதன் ராகு மூவருடன்கூடி ஒருவரும் பாராமலிருந்தால் ஜாதகன் ஐம்பத்தைந்து வயதிற்குமேல் மரணம் சனிதிசையில் பிதுர்மாதுர்மரணம் சத்திரரோகம் புத்திரசர்பம் ஸ்தானப்ரஸ்டம் கஷ்டபலனென்பர்.

விருச்சிகலக்கினம் 2-ல் சனி. 8ல் சூ-பு.

**(9)** இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து அஷ்டமஸ்தானமேறிய ரவி புதனிருவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஜெனித்த எட்டாம்நாள் மரணம் கெர்ப்பகாலம் பிதாவுக்குரோகம் உத்தியோகமென்பர்.

விருச்சிகலக்கினம் 2-ல் சனி. 3-ல் பு -சூ-ரா.

**(10)** இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி சூரியன் ராகுவுடன்கூடி திருதியஸ்தானமேறியிருந்தால் புதன்திசையில் ஜாதகன்மாரி பிதாவிறந்து சகலசொத்துகளும் றுணத்தினால் சிதரிபோகுமென்பர்.




**(11)** (மூன்றுமிடம்)

மூன்றுமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய் கேதுவுடன் கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி தசமகேந்திராதிபதியுடன் சேர்ந்து நீச்சம்பெற்றிருந்தால் சனிதிசை ஐம்பத்தெட்டுவயதில்ஜாதகன் வயிற்போக்கால் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 3-ல் சனி. 8-ல் ச-ரா.

**(12)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் ஒன்பானாதி ராகுவுடன்கூடி அஷ்டமஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் அருபத்தைந்தில் மரணம் சனிதிசையில் றிணத்தால் கண்டம் விவாகம் வெண்குட்டம் புத்திரவுற்பத்தி யுண்டென்பர்.

விருச்சிகலக்கினம் 3-ல் சனி. 8-ல் சூ-செ. 9 -ல் -புசு.

**(13)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து நவதிரிகோணமேறிய புதன் சுக்கிரனிருவரால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் ரவிகுஜன் கூடியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஓராண்டில் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 3-ல் சனி-சு. 8-ல் ச.

**(14)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சப்தமாதி விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் மனவருத்தமுடன் ஐம்பத்தெட்டில் மரணம் சனிதிசை அதிசகஷ்டம் களத்திரமரண சண்டமென்பர்.

விருச்சிகலக்கினம் 3-ல் சனி-சு 4-ல் பு-கு.

**(15)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சப்தம விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் எட்டாமாதி கர்மாதிபதியுடன்சேர்ந்து சதுர்த்தகேந்திரமேறி யிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பதினைந்துநாளில் பிணத்தினால் மரணமென்பர்.




**(16)** (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய் ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தைத்வித்திய பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை பத்துவயதில் ஜாதகன் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் சனி. 10-ல் சு 11-ல் பு-கு-ரா.

**(17)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து சப்தம விரையாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமாதி சூரியன் ராகுவுடன்கூடி லாபஸ்தானமேறி யிருந்தால் ஜாதகன் ஐம்பதுவரையில் தீர்க்கமென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் சனி. 10-ல் பு-சு.

**(18)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து தசமகேந்திரமேறிய சப்தமாஷ்டமலாப விரையாதிபதிகளால்நேரே நோக்கப்பட்டிருந்தால் கெட்டிவீடுண்டாம் சனிதிசை ஐந்துவயதிற்குள் காலூனம் பிதுர்மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் சனி. 8-ல் குரு.

**(19)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று அஷ்டமஸ்தானமேறிய த்விதிய பஞ்சமாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஐம்பத்தைந்தில் சனிதிசை சப்தம விரையாதிபுதி புக்திகாலம் புத்திரசோகம் மேலான யோகமுண்டென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் சனி-சு.

(20) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி நவதிரிகோணாதிபதியுடன்கூடி ஒருவருமபாராமல் அஷ்டமஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பால்குடியாமல் பத்துநாளில் மரணமென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி வியாழன் ராகுவுடன்கூடி ஒருவரும் நோக்காமல் ஆயுள்ஸ்தானத்தில் சூரியனிருந்தால் சனிதிசை முற்பாகம் ஐம்பத்துநான்கில் தாயும் பின்பு ஜாதகனும் வயிற்போக்கால் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 2-ல் சு-ச. 5-ல் சனி. 8-ல் ரா.

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய ராகுவை சப்தம பாக்கிய விரையாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஆறுமாதத்தில் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 2-ல் பு-சு. 5-ல் சனி.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி சப்தம விரையாதிபதியுடன் கூடி த்விதியஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் யோகவான் ஐம்பதிற்கு மேல் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 5-ல் சனி-சூ 11-ல் ச.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி தசமகேந்திராதிபதியுடன்கூடி லாபஸ்தானமேறிய நவதிரிகோணாதிபதியாற் நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பிறந்தவுடனே மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் குரு 5-ல்சனி-ரா. 8-ல் சு.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன கூடி ஒருவரும்நோக்காமல் அஷ்டமஸ்தானமேறிய சப்தம விரையாதிபதியை த்விதிய பஞ்சமாதிபதியால் ஐந்தாம்பார்வை பார்க்கப்பட்டிருந்தால் எழுபதில் களத்திரமரணம் எழுபத்தைந்தில்ஜாதகன்மரணமென்பர்.




(26) (ஆறுமிடம்)

ஆறுமிடத்தில் ஆயுள்காரக ஞகிய சனி நீச்சம்பெற்று ஏகனுய்தனித்து விரையமடைந்த த்விதிய பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் ராகுயிருந்தால்சனிதிசை பிற்பாதிவிவாகம்அது முதல் மேன்மை யென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் பு 6-ல் சனி. 7-ல் குரு.

(27) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய்நின்று ஒருவரும் பாராமல் அசற்கிரண்டில் வியாழனிருந்து எட்டாமாகி சதுர்த்தகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் எழுபத்தெட்டு வயதில் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் பு. 6-ல் சனி.

(28) ஆறுமிடத்தில் ஆயுள்காரசனுகியசனி ஏகனுய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி சுகஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் எழுபத்தெட்டில் மரணம் சனிபுக்தி அருபத்திரண்டில் புத்திரன்புத்திரிமரணம் ரோகவிர்த்தி நாற்கால் ஜீவஹானியென்பர்.

விருச்சிகலக்கினம் 6-ல் சனி-ச-செ.12-ல்ரு

(29) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஜென்மரோக பாக்கியாதிபதிகளுடன்கூடி விரையமடைந்த தசம்கேந்திராதி பதியால் நேரேநோக்கப்பட்டு சனிதிசையும் நேர்ந்தால் ஜாதகனுடனே மரணமென்பர்.

விருக்ஷிகலக்கினம் 5-ல் பு-கு-சு, 6-ல் சனி.

(30) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்நின்று ஒருவரும்பாராமல் எட்டாமாதி ரவி சுக்யிரனுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறியிருந்தால் சனிபுக்தி அருபத்தொன்பதில் ஜாதகன்மரணம் அதற்குமுன் பிதாவரிட்டம் தாய்க்குரோகம்புத்திரனுக்குத்தொழில் நஷ்டமென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரக ஞகிய சனி ஏகனுய்தனித்து ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய ஜென்மரோகாதிபதி திசையும் நேர்ந்தால் ஜாதகன் வாரத்தில் மரணம்கெர்ப்பகாலம் பிதாவுக்குத் தொழில் கேடென்பர்.

விருக்ஷிகலக்கினம் 3-ல் குரு 7-ல் சனி-சூ-பு-ரா.

(32) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரவி புதன் ராகு மூவருடன்கூடி திருதியமேறிய தன பஞ்சமாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் முப்பத்துமூன்றில் ஜாதகன் ரோகத்தால் மரணமென்பர்

விருக்ஷிகலக்கினம் 4-ல் செ. 7-ல் சனி. 8-ல் ச.

(33) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து சதுர்த்தகேந்திரமேறிய ஜென்ம ரோகாதிபதியால் பார்க்கப்பட்டு எட்டாமிடத்தில் பாக்கியாதிபனேறியிருந்தால்ஜாதகன் இருபத்து நான்கு வயதிற்குமேல் பரதேசம் போவனென்பர்.

விருக்ஷிகலக்கினத்தில் சூ-பு. 7-ல் சனி-ச-ரா.

(34) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சந்திரன் ராகுவுடன்கூடி லக்கின கேந்திரமபெற்ற அஷ்டமகர்ம லாபாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால ஜாதகன் அருபததேழுவயதில மரணமென்பர்.

விருக்ஷிகலக்கினம் 7-ல் சனி-ரா 8-ல் ச.

(35) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் நவதிரிகோணாதிபதி ஏறி யிருந்தால் ஐம்பதுவயதிற்குமேல் ஜாதகன்மரணம் சனிபுக்தி இருபத்தேழில் களத்திரம் விஷகடியால்மரணம் தாய்வர்க்கர்மம் பிரதேசகவனமென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும் நோக்காமலிருந்தால் ஜாதகன் எண்பத்துமூன்று வயதில்மரணம் சனிபுக்தி அருபதில் களத்திரமரணம் புத்திரனால் துன்பம் அன்னகஷ்டமுண்டென்பர்.

விருக்ஷிகலக்கினம் 8-ல் சனி-செ-சூ 9-ல் பு-ச.

(37) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஜென்மரோகதசமாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதிசந்திரனுடன் சேர்ந்து பாக்கியஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் நாற்பத்தொன்பது வயதில் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 2-ல் ச. 4-ல் குரு 8-ல்சனி.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று த்விதியஸ்தானமேறிய பாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டுக்குப் பத்தாமாதி காரிக்குப் பாக்கியமேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பதினைந்துநாளில் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 8-ல் சனி. 12-ல் பு

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி விரையமடைந்திருந்தால் ஜாதகன் இருபது வயதுமுதல் விர்த்தி அருபதுவரையில் தீர்க்கம் சனிபுக்தி இருபத்திரண்டில் விவாகம் பிதாவுக்கு ரோகமென்பர்.

விருச்சிகலக்கினம் 5-ல் செ. 6-ல் ச-பு. 8-ல் சனி-கே.

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி பஞ்சம திரிகோணமேறிய ஜென்மரோகாதிபதியால் நோக்கபட்டு எட்டாமாதி சந்திரனுடன் கலந்து ரோகஸ்தானமேறி யிருந்தால் ஜாதகன் நாற்பத்தைந்துநாளில் மரணமென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்கூடி திருதியஸ்தான மேறிய ஜென்மரோகாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லைவாரத்தில்மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 3-ல் சூ-ச. 9-ல் சனி.

(42) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து பாக்கிய கர்மாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டு அஷ்டமஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஜெனித்தமாதத்தில் மரணமென்பர்

விருச்சிகலக்கினம் 8-ல் ச. 9-ல் சனி-ரா

(43) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ராகுவுடன் கூடி ஒருவரும்பாராமல் ஒன்பானாதி அஷ்டமஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் மூன்றுவயதில் மரணம் ஜெனனகாலம் சகோதரி மரணம் தாய்க்கு கண்டமுண்டாகி நிவர்த்தியென்பர்.

விருச்சிகலக்கினத்தில் குரு 9-ல் சனி.-ரா

(44) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ராகுவுடன்கூடி லக்கினகேந்திரமேறிய த்விதிய பஞ்சமாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் பதினேழு வயதிற்குமேல் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 3-ல் செ-சூ 8-ல் கே. 9-ல் சனி-பு.

(45) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி அஷ்டம லாபாதிபதியுடன்கூடி திருகியமேறிய ஜென்ம ரோக கர்மாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் கேதுயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை மாதமொன்றில் மரணமென்பர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும் பாராமல் அஷ்டமஸ்தானமும் சுத்தமாயிருந்து எட்டாமாதி லக்கினகேந்திரமேறி யிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை புதன்திசையும் நேர்ந்தால் ஐந்துவயதில் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் குரு. 8ல் சூ-செ. 10-ல் சனி.

(47) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து சதுர்த்தகேந்திரமேறிய த்விதிய பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் ரவிகுஜன் கூடியிருந்தால் ஜாதகன் மூன்றுவயதில் ஜலரோகத்தால் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் செ-சு. 10-ல் சனி-குரு.

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி தனபஞ்சமாதிபதியுடன்கூடி சதுர்த்த கேந்திரமேறிய ஜென்மரோக சப்தம விரையாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நாற்பதுவயதிற்குமேல் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 4-ல் குரு. 8-ல் சூ. 10-ல் சனி-சு-பு

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சப்தமாஷ்டம லாப விரையாதிபதிகளுடன்கூடி சுகஸ்தானமேறிய தனபஞ்சமாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் எழுபது வயதிற்குமேல் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 7-ல செ-பு. 10-ல் சனி-ச.

**(50)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பாக்கியாதிபதியுடன்கூடி அஷ்டமலாபாதிபதியுடன்சேர்ந்து சப்தமகேந்திரமேறிய ஜென்ம ரோகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் சனிபுக்தி ஐம்பத்தேழு வயதில் மரணமென்பர்.




**(51)** (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி சப்தமகேந்திர மேறிய தன பஞ்சமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி நீச்சமடைந் திருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை நான்குவயதில் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 2-ல் சு.11-ல் சனி.

**(52)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை த்விதியஸ்தானமேறியசப்தம கர்மவிரையாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபத்தேழுக்குமேல்மரணம்கெணிதமூலம்உபாய ஜீவன்மென்பர்.

விருச்சிகலக்கினம் 5-ல் சு-பு. 11-ல் சனி.

**(53)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சம திரிகோணமேறிய அஷ்டம கர்மலாபாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நாற்பதுவயதிற்குள் மரணம் அன்னியரால் கர்மமென்பர்.

விருச்சிகலக்கினம் 11-ல் சனி.

**(54)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமலிருந்தால் ஜாதகனுக்கு நாற்பத்தொரு வயதில் புத்திரபீடை தாய்கர்மம் றுணவாதனை வாகனமுடக்கம் கஷ்டபலனென்பர்.

விருச்சிகலக்கினம் 5-ல் சு. 11-ல் சனி-செ.

**(55)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஜென்ம ரோகாதிபதியுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறிய தசமகேந்திராதி பதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் சனிபுக்தி பதினேழு வயதில் மரணமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரக சனி உச்சம்பெற்று ஏகனாய்த்தனித்து நவதிரிகோணமேறிய ஜென்மரோகாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பத்தேழுவயதில்வயிற்போக்கால் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 8-ல் சு-கே, 12-ல் சனி.

(57) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள் தானத்தில் சுக்கிரன் கேதகூடியிருந்தால் பதினெட்டுவயதில் மகோதரவியாதியால் ஜாதகன் மரணம் சகோதரன் புத்திரனால் கர்மம் அதற்குமுன் தமையன் களத்திர மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் 8-ல் கு-ரா. 12-ல் சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனிஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சூரியன் ராகு கூடியிருந்தால் ஜாதகன் அருபதுவயதில் மரணம் சனிதிசையில் லிவகாரம் பொருள்நஷ்டம் பிதுர்மரணம் பாக்கியம் குறைவுபடுமென்பர்.

விருச்சிகலக்கினம் 11-ல் பு-சூ 12-ல் சனி-ச-கே.

(59) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சந்திரன் கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி தசமகேந்திராதிபதியுடன் சேர்ந்து லாபஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் நாற்பத்தைந்துவயதில் மரணம் உத்தியோகமூலம செல்வமென்பர்.

விருச்சிகலக்கினம் 5-ல் செ. 6-ல் ச. 12-ல் சனி.

(60) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து பாக்கியாதிபதியால் நேரேநோக்கப்பட்டுஎட்டாமிடத்தில் ஜென்மரோகாதிபதியின் நான்காம்பார்வை யிருக்குமானால்ஜாதகன் தீர்க்கமில்லை றிணம்கண்டு வாரத்தில் மரணமென்பர்.

விருச்சிகலக்கினம் சக்கரம் -12,

முற்றிற்று.

——

உ

கடவுள் துணை

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்.

## தனுசுசனி ஆயுள்பலன்




தனுசு லக்கினம்.

(1) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி த்விதியஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் முப்பத்தெட்டுவயதில் ரோகத்தினால்மரணம் அக்காலம், சகோதரன் புத்திரனால் குடும்பசலகம் பொருள் விரையமென்பர்.

தனுசுலக்கினத்தில் சனி-செ. 7-ல் ச

(2) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி சஞ்சம விரையாதிபதியுடன்கூடி சப்தமகேந்திரமேறிய அஷ்டமாதிபதியால் நேரேநோக்கபபட்டிருந்தால் சனிதிசை புக்தி இருபத்துமூன்று வயதில் ஜாதகன் மரணத்தை யடைவனென்பர்.

தனுசுலக்கினத்தில் சனி-கே. 10-ல் செ.

(3) உதையத்தில் ஆயுள்காரகனாகியசனி கேதுவுடன்கூடி தசமகேந்திரமேறிய பஞ்சம விரையாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் இருபத்துமூன்றுவயதில் மரணமென்பர்.

தனுசுலக்கினத்தில் சனி-கே. 7-ல் குரு-ச.

(4) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடிசப்தமகேந்திரம் பெற்ற லக்கின சுக அஷ்டமாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் சனிதிசைபுக்தி முப்பத்தொன்பது வயதில் ஜாதகன் மரணமென்பர்.

தனுசுலக்கினத்தில் சனி. 8-ல் ரா.

(5) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் ராகுயிருந்தால ஜாதகன் மத்திமாயுசு த்விதிய திருதியாதிபதிதிசை ஆதிமரணம் குடும்பகலகம் சகோதரவர்க்கத்தில் ரோகமென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய் பஞ்சம விரயாதிபதியுடன்கூடி தசமகேந்திரமேறிய லக்கின சுகாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை மூன்றாம்நாள் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் சனி-ச. 8 -ல் சு.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி அஷ்டமாதிபதியுடன்கூடி ஆயுள்ஸ்தானமேறிய ரோகலாபாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பத்திரண்டு வயதிற்குமேல் மரணம் சனிபுக்தி விவாகம் பூமிலாபம் கிரகவிர்த்தியென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் சனி-சு-செ.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி பஞ்சமரோகலாப விரயாதிபதிகளுடன்கூடி ஒருவரும்நோக்காமலிருந்தால் ஜாதகன் எழுபத்தைந்து வயதில் மரணம் தத்துபுத்திரனால் கர்மம் சனிபுக்தி விவாகம் தொழில் விர்த்தியென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் சனி-கு-பு. 12-ல் -ச.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சப்தம பாக்கிய தசமகேந்திராதிபதிகளுடன் கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி விரயமடைந்திருந்தால் இரட்டையாணாக ஜெனனம் பதினைந்து நாள்களுக்குள் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் சனி. 5-ல் ச 8-ல் கே. 11-ல் செ.

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து மோக்ஷகாரகனால் பார்க்கப்பட்டு பஞ்சம திரிகோணமேறிய எட்டாமாதி அங்காரகன் நேர்பார்வையையடைந்திருந்தால் ஜாதகன் இரட்டையாக ஜெனித்து வாரத்திற்குள் மரணமென்பர்.




## (11) (மூன்றுமிடம்)

மூன்றுமிடத்தில் ஆயுள் காரகனுகிய ஸ்வக்ஷேத்திரனுய் கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் முப்பத்துமூன்றில் அரசர் கலகம் தண்டம் சுவீகாரம்விவகாரம்பொருள் விரையம் பின்பு ஜாதகனும் சகோதரனும் ஜலரோகத்தால் மரண மடைவனென்பர்.

தனுசுலக்கினம் 3-ல் சனி. 8-ல் செ.

**(12)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து ஆயுள்ஸ்தானமேறிய பஞ்சம விரையாதிபதியால் நோக்கபட்டிருந்தால்ஜாதகன் அறுபதிற்குமேல் மரணம் சனிபுக்தி இருபத்திரண்டில் சகோதரகர்மம் பிதுர்ரோகம் குடும்பம் வேறுபடுமென்பர்.

தனுசுலக்கினம் 3-ல் சனி.-ச-சு-ரா.

**(13)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி மதி சுவி ராகு மூவருடன்கூடி ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஓராண்டில்மரணம் ஜெனனகாலம்பிதுர் மாதுர் வர்க்கங்களில் கர்மமென்பர்.

தனுசுலக்கினம் 3-ல் சனி-பு-சு. 5-ல் ச.

**(14)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ரோகசப்தமகர்மலாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி பஞ்சம திரிகோணமேறியிருந்தால் ஜாதகன்தீர்க்கம் அருபதுவயதிற்குமேல் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 3-ல் சனி-சு.

**(15)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஸ்வக்ஷேத்திரனுய் ரோக லாபாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் வெகுதீர்க்கமுள்ளவன் சனிதிசை துர்பலன்திசை பிற்பாதியில் தாய்மரணமென்பர்.




## (16) (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனுகிய சனி ராகுவுடன்கூடி விரையமடைந்த ஜென்மசுகாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் பஞ்சம விரையாதிபதியேறியிருந்தால் ஜாதகன் அருபதுவயதில் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் சனி. 10-ல் குரு-க.

**(17)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனாய்தனித்து தசமகேந்திரமேறிய லக்கினசுக அஷ்டமாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் ஐம்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் சனி. 8-ல் ச-சு-கே.

**(18)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சந்திரன் சுக்கிரன் கேது மூவர்கூடியிருந்தால் ஜாதகன் இருபத்தேழுவயதில் மரணம் சனிபுக்தி பத்தொன்பதில் களத்திரலாபம பொருள் சேர்க்கையென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் சனி 12-ல் சு.

**(19)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமலிருந்து சனிதிசையும் விரையமடைந்த ரோக லாபாதிபதி புக்தியுமாகவந்து சேர்ந்தால் ஜாதகன் ஜெனித்த ஆறும் நாள் அரிட்டமாவனென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் சனி 6-ல் ச 10-ல் கு.

**(20)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனாய் தனித்து கர்மஸ்தானமேறிய நவதிரிகோணுதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமாதிவுச்சம் பெற்றிருந்தால் ஜாதகன் சனிதிசைபுக்தி எழுபத்திரண்டில் மரணமென்பர்.




**(21)** (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி நீசனாய் சப்தமபாக்கிய கர்மாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய பஞ்சம விரையாதிபதிவை எட்டாமாதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இருபத்தாறுவயதில் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 5-ல் சனி-குரு. 12-ல் ச.

**(22)** ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஜென்ம சுகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி விரையமேறியிருந்தால் ஜாதகன் நாற்பத்தேழுவயதில் ஜலத்தினுல் மரணமென்பர்.

தனுசலக்கினம் 5-ல் சனி-ச 8-ல் செ.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி அஷ்டமஸ்தானாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் பஞ்சமவிரையாதிபதி ஆயுள்ஸ்தானையமேறியிருந்தால் ஜாதகன் முப்பத்தைந்து வயதிற்குமேல் மரணமென்பர்.

தனுசலக்கினம் 5-ல் சனி-ரா. 6-ல் செ-ச.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ராகுவுடனகூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி பஞ்சம விரையாதிபதியுடன் சேர்ந்து உச்சம்பெற்றிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை இளமையில் மரணமென்பர்.

தனுசலக்கினம் 4-ல் ச-பு 5-ல் சனி-ரு-சு. 8-ல் கே.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரவி சுக்கிரனுடன் கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் கேதுயிருந்து எட்டாமாதி புதனுடன்சேர்ந்து சுகஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்தெட்டு வரையில் தீர்க்கமென்பர்.




(26) (ஆறுமிடம்)

ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து விரையமேறிய சப்தமபாக்கிய கர்மாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அற்பாயுசு ஏழு வயதில் மரணமாவனென்பர்.

தனுசலக்கினம் 2-ல் செ. 6-ல் சனி-சு. 8-ல் ச.

(27) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஸ்வக்ஷேத்திர ரோகலாபாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதியை த்விதியஸ்தானத்தி லுச்சம்பெற்ற பஞ்சம விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் பூரணாயிசு தனவானென்பர்.

தனுசலக்கினம் 6-ல் சனி-ச-ரா. 8-ல் செ.12-ல் ரு.

(28) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி சந்திரன் ராகுவுடன கூடி விரையமடைந்த நவதிரிகோணாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் நாற்பத்திரண்டுவரையில் தீர்க்கமென்பர்.

தனுசுலக்கினம் 6-ல் சனி-குரு. 8-ல் ச-ரா. 11-ல் செ.

(29) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி லக்கின சுகாதிபதியுடன்கூடி லாபமேறிய பஞ்சம விரையாதிபதியால் நோக்கப்பட்டு ராகுவுடன்சேர்ந்து அஷ்டமஸ்தானமேறிய எட்டாமாதிபன் திசையும்சேர்ந்தால் ஜாதகன் பிறந்தவுடனே மரணமென்பர்.

தனுசுலக்கினம் 6-ல் சனி. 8-ல் ச-சு-குரு.

(30) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்நின்று ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய ஸ்வக்ஷேத்திர அஷ்டமாதிபதியுடன் உபயமந்திரிகளும்கூடியிருந்தால் ஜாதகன் வெகுதீர்க்கம் தொண்ணூறுவயதிற்குமேல் மரணமென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து லக்கினகேந்திரம் பெற்ற பஞ்சம விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பதிற்குமேல் மரணம் சனிபுக்தி விவாகம் களத்திரமரணம் கடைசி பிதுர்மரணமென்பர்.

தனுசுலக்கினத்தில் செ. 7-ல் சனி.

(32) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனிஏகனுய்தனித்துலக்கினகேந்திரமேறியநவதிரிகோணுதிபதியால் நேரேநோக்கபட்டு அஷ்டமஸ்தானம் சுத்தமாயிருந்தால் அறுபதிற்குமேல் மரணம் சனிதிசை முற்பாகம் களத்திரரோகம் அதில்பெரிய விரையமுண்டென்பர்

தனுசுலக்கினம் 7-ல் சனி-செ. 8-ல் ச.

(33) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி பஞ்சம விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் ஆயுள்ஸ்தானத்தில் ரோகலாபாதிபதியேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்தெட்டில் மரணம் சனிபுக்திவிவாகம் விரைவில்களத்திரமரணம் கடைசிசேர்க்கையென்பர்.

தனுசுலக்கினத்தில்குரு. 7-ல் சனி-சு-பு.

(34) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ரோக சப்தம கர்மலாபாதிபதிகளுடன்கூடி லக்கினகேந்திரம் பெற்ற ஸ்வக்ஷேத்திர ஜென்ம சுகாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் எழுபத்தேழுவயதிற்குமேல் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 5-ல் ச. 7-ல் சனி-கே. 8-ல் செ-பு.

(35) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் செவ்வாய் புதனிருந்து எட்டராமாதி பஞ்சமதிரிகோண மேறியிருந்தால் ஜாதகன்தீர்க்கமில்லைவாராமொன்றில் மரணமென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து த்விதியஸ்தான மேறிய பஞ்சம விரயாதிபதியால் நேரேநோக்கப்பட்டு லக்கினாதிபதி சப்தமகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் எழுபத்துநான்கு வயதில் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 8-ல் சனி-ச-ரா.

(37) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சந்திரன் ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் த்விதிய திருதியாதிபதி திசையும்சேர்ந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஜெனித்த மூன்றும்நாள் மரணமென்பர்

தனுசுலக்கினம் 2-ல் சு. 5-ல் செ. 8-ல் சனி. 12-ல் குரு.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சமதிரிகோணமேறிய ஸ்வக்ஷேத்திர பூமகனால் நான்காம் பார்வை பார்க்கப்பட்டு உதையத்திற்கு முன்பின் சுக்கிரன்வியாழனின்றிருந்தால் ஜாதகன் அருபத்தொட்டில்காலில் றிணமுண்டாகிமரணமென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் ச 8-ல் சனி.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து த்விதியஸ்தானமேறிய அஷ்டமாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் மத்திமாயுசு முப்பத்தொன்பதுவயதில் காலில்மேகரோகத்தால் வாதைபட்டு மரணமாவனென்பர்.

தனுசுலக்கினம் 8-ல் சனி. 10-ல் ச.

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் நின்று ஒருவரும்பாராமல் எட்டாமாதிபதி தசமகேந்திரமேறி யிருந்தால் ஜாதகன் முப்பத்திரண்டு வயதில் ஜலரோகத்தினால் மரணமென்பர்.




## (41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ரோகஸ்தானமேறிய பஞ்சம விரயாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம சுத்தமாயிருந்தால் ஜாதகன் முப்பத்தொருவயதில் ஜலரோகத்தினால் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 9-ல் சனி-சூ.

(42) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திர நவதிரிகோணாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடமும் சுத்தமாயிருந்தால் சாதகன் தீர்க்கமில்லை மூன்றும்நாள் .மரணமென்பர்.

தனுசுலக்கினம் 9-ல் சனி-குரு.

(43) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின சுகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பதினான்குவயதிற்குள் மரணமென்பர்.

தனுசுலக்கினத்தில் குரு. 9-ல் சனி-ரா.

(44) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ராகுவுடன்கூடி லக்கினகேந்திரம் பெற்ற ஸ்வக்ஷேத்திர ஜென்மசுகாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் ஐம்பத்தொருவயதிற்குமேல் மரணமென்பர்.

தனுசலக்கினம் 8-ல்ரா. 9-ல் சனி-ச.

(45) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் எட்டாமிடத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் ஐம்பதுவயதிற்குமேல் மரணம் சனிபுக்தி விவாகம்பொருள்சேர்க்கை மாதர் கர்மமென்பர்.




## (46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி ஏகனாய்த்தனித்துசப்தமகேந்திரமேறிய பஞ்சம விரயாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் ஜென்மசுகாதிபதியேறியிருந்தால் ஜாதகன் இருபத்தாறு வயதில் ஜலரோகத்தினால் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் செ. 10-ல் சனி-கே

**(47)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் கூடி சதிர்த்தகேந்திரமேறிய பஞ்சம விரையாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பதினைந்தாம்நாள் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் குரு 8ல் ச. 10-ல் சனி.

**(48)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து சதுர்த்தகேந்திரமேறியஸ்வக்ஷேத்திர லக்கினசுகாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன்தீர்க்கமில்லை ஆறுவயதில் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் ச. 10-ல் சனி-குரு.

**(49)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி லக்கின சுகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி க்விதியஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் மத்திமாயுசு முப்பதுவயதில் மரணம் சிறந்த வித்தையுடைய னென்பர்.

தனுசுலக்கினம் 4-ல் செ. 7-ல் ச. 10-ல் சனி.

**(50)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து சுகஸ்தானமேறிய பஞ்சம விரையாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமாதி சப்தமகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் நாற்பது வயதிற்குமேல் மரணம் சனிபுத்தி விவாகம் உத்தியோகலாபம் பிதுர் மாதுர் சுகமென்பர்.




**(51)** (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி வுச்சனாய் ஏகனாகதனித்துசப்தமகேந்திரமேறிய வியாழனால் நோக்கப்பட்டுஎட்டாமிடத்தில் பஞ்சம விரையாதிபதியின் நான்காம்பார்வையு மிருக்குமானால்ஜாதகன் மாதமொன்றில் மரணமாவனென்பர்.

தனுசுலக்கினம் 7-ல் குரு 11-ல் சனி-சூ-செ-பு.

**(52)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகியசனிரவிகுஜன்புதன் மூவருடன்கூடி சப்தமகேந்திரமேறிய தெய்வமந்திரியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பிறந்தவாரத்தில் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 8-ல் சூ-பு. 11-ல் சனி.

(53) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சப்தம பாக்கிய கர்மாதிபதிகள் கூடியிருந்தால் ஜாதகன் முப்பத்தெட்டுவயது வரையில் தீர்க்கமென்பர்.

தனுசுலக்கினம் 5-ல் பு-சூ. 8-ல் குரு 11-ல் சனி.

(54) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சமதிரிகோணமேறிய ரவி புதனிருவரால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில்வியாழன் உச்சம்பெற்றிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஐந்துவயதில் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் குரு. 5-ல் பு 11-ல் சனி.

(55) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சமதிரிகோணமேறிய சப்தம கர்மாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் பிரகஸ்பதி நேர்பார்வையு மிருக்குமானால் ஜாதகன் நாற்பதுவரையில் தீர்க்கமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டா மிடத்தில் ஆயுள்காரக சனி சப்தம கர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானத்தை லக்கினகேந்திரம்பெற்ற பூமகனால்நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பத்திரண்டிற்கு மேல்மரணம் சனிதிசைஆதி ஸ்ரீசேர்க்கை அன்னகஷ்டம் தொழில் பங்கம் துர்பலனென்பர்.

தனுசுலக்கினம் 8-ல் சூ 12-ல் சனி.

(57) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில நவதிரிகோணாதிபனேறியிருந்தால ஜாதகன் எழுபதுவயதிற்குமேல்மரணம் சனிபுக்தி பிதுர்மரணம் காராக்ரகம்பொருள் விரையமென்பர்.

தனுசுலக்கினம் 12-ல் சனி-சு.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரோக லாபாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் மத்திமாயுசு சனிதிசை முப்பதுவயதில் மரணமாவனென்பர்.

தனுசுலக்கினம் 2-ல் ச 8-ல் சூ. 12-ல் சனி.

**(59)** பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனாய்த் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் நவதிரிகோணுதிபனிருந்து எட்டாமாதி த்விதியஸ்தான மேறியிருந்தால் ஜாதகன்நாற்பத்தேழுவயதில் மரணமென்பர்.

தனுசுலக்கினம் 6-ல் ச. 12-ல் சனி-சூ-பு

**(60)** பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி சப்தமபாக்கிய கர்மாதிபதியுடன்கூடி ரோகஸ்தானமேறிய அஷ்டமாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அருபத்தொரு வயதிற்குமேல் மரணமென்பர்.

தனுசுலக்கினம் சக்கரம் -**12**,

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்.

மகரசனி ஆயுள்பலன்

**மகர** 

**லக்கினம்.**

**(1)** உதையத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஸ்வக்ஷேத்திரனுய்ஏகனுகநின்று நவதிரிகோணமேறிய திருதிய விரையாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமாதி லாபஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை நான்காமாதம் மரணமென்பர்.

மகரலக்கினத்தில் சனி 9-ல் ரா. 10-ல் செ.

(2) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து தசம கேந்திரமேறிய சுகலாபாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம சுத்தமாகி பிதுர்ஸ்தானத்தில் ராகுயிருந்தால் சனிதிசை முற்பாகம் பிதுர்மரணம் ஜாதகனுக்கு ஜலகண்டமுண்டாகி நிவர்த்தி ஐம்பதிற்குமேல் மரணமென்பர்.

மகரலக்கினத்தில் சனி 5-ல் குரு 7-ல் செ.

(3) உதையத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து சப்தம கேந்திரமேறிய நீச்சகுஜனால் நேரேநோக்கப்பட்டு எட்டுக்குஎட்டாமாதி பஞ்சம திரிகோணமேறியிருந்தால் ஜாதகனுக்கு எபபோதும் நீர்ரோகமுண்டாம் ஐமபதில் மரணமென்பர்.

மகரலக்கினத்தில் சனி-. 4-ல் சூ

(4) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவருமபாராமல் எட்டாமாதி உச்சமபெற்றிருந்தால் நாற்பதிற்குமேல் றுணபாகை நாற்பத்தாறில் ஸ்தானப்ராஸ்டம் நாற்பத்தெட்டில் சனிதிசை ஆதி ஜாதகன் றிணம்கண்டு மரணமென்பர்.

மகரலக்கினத்தில் சனி. 2-ல் சு-குரு.

(5) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை த்விதியஸ்தானமேறிய மதிகுரு இருவரால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை நான்கு மாதத்தில மரணம் முன்னுள்ளசகோதரமெல்லாம் நாசமென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனிஸ்வக்ஷேத்திரனாய்சுக்கிரன் ராகுவுடன் கூடி ஒருவரும்பாராமலிருந்தால் சனிதிசை ஆதிஇருபத்துநான்கு வயதில் ஜாதகன்மரணம் பிதுர்ரோகம் குடும்ப சஞ்சலமென்பர்.

மகரலக்கினம் 2-ல் சனி-சூ. 8-ல் செ.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி அஷ்டமாதிபதியுடன்கூடி ஆயுள்ஸ்தானமேறிய சுகலாபாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஜெனனகாலம சனிதிசையும் நேர்ந்தால் ஜாதகன்தீர்க்கமில்லை உடனே மரணமென்பர்.

மகரலக்கினம் 2-ல் சனி-கே. 4-ல் குரு.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி கேதுவுடன் கூடி ஒருவரும்பாராமல் சதுர்த்தகேந்திரமேறிய திருதிய விரையாதிபதியால் ஆயுள்ஸ்தானத்தை நோக்கப்பட்டிருந்தால்ஜாதகன் தீர்க்கமிலை ஓராண்டில் மரணமென்பர்.

மகரலக்கினம் 2-ல் சனி. 5-ல் கு 8-ல் ச.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து அஷ்டமஸ்தானமேறிய சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி பஞ்சமதிரிகோணமேறியிருந்தால் சனிபுக்திஅருபத்து மூன்றில் ஜாதகன் மரணமென்பர்.

மகரலக்கினம் 2-ல் சனி 6-ல் கு சு-செ

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி சுகபஞ்சமகர்மலாபாதிபதிகளுடன் கூடி ரோகஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் சனிபுக்தி முப்பத்தொன்பதில் ஜலரோகத்தினால் மரணமென்பர்.




(11) (மூன்றாமிடம்)

மூன்றாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ரோக அஷ்டம பாக்கியாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் த்விதியஸ்தானமேறிய சுகலாபாதிபதியால் ஆயுள்ஸ்தானத்தை நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ரிணரோகத்தினால்ஐம்பத்திரண்டுவயதில் மரணமென்பர்.

மகரலக்கினம் 3-ல் சனி-கு. 8-ல் பு-ரா.

(12) மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி அஷ்டமாதி பதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் புதன்ராகுசேர்ந்திருந்தால் ஜாதகன் நாற்பத்தைந்து வயதிற்குமேல் மரணம் சனிபுக்தி பிதுர்கர்மம் தொழில்கஷ்டம் மனதுன்பமென்பர்.

மகரலக்கினம் 2-ல் ச. 3-ல் சனி-குரு.

(13) மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஸ்வக்ஷேத்திரதிருதிய விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை த்விதியஸ்தானமேறிய சப்தமாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் இருபத்தொருவயதில் சகோதரிமரணம் அதுமுதல் ரோகமுண்டாகி ஜாதகனும் அடுத்து மரணமென்பர்.

மகரலக்கினம் 3-ல் சனி -குரு.

**(14)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திராதிருதிய விரையாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை பதினெட்டுவயதில் வைசூரியால் மரணமென்பர்.

மகரலக்கினத்தில் பு-சு 3-ல் சனி-செ. 7-ல் குரு.

**(15)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சுகலாபாதிபதியுடனகூடி சப்தமகேந்திரமேறிய பிரகஸ்பதியால் நோக்கப்பட்டுஎட்டாமாதி ரோகபாக்கியாதிபதியுடன் சேர்ந்து லக்கினகேந்திரமேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை வாரத்தில் மரணமென்பர்.




**(16)** (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனாகிய நீச்சமடைந்து ஏகனாய்தனித்து கர்மஸ்தானமேறிய பிரகஸ்பதியால் நேரேபார்க்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் சந்திரன் சுக்கிரனிவர்கள் நேர்பார்வையுமிருக்குமானால் ஜாதகன் அவயவங்களீனப் பட்டவனும் கடைசி அக்கினிமூல மரணமாவனென்பர்

மகரலக்கினம் 2-ல் ச 4-ல் சனி. 8-ல் சு-செ-சு.

**(17)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய ரவி குஜன் சுக்கிரனிவர்களை சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை சனிபுக்தியும்நேர்ந்தால் இரண்டுவயதில் ஜலத்தில் மரணமென்பர்.

மகரலக்கினம் 4-ல் சனி. 5-ல் செ.

**(18)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் பஞ்சமதிரிகோணமேறிய சுக லாபாதிபதியால் ஆயுள்ஸ்தானத்தை நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பது வயதில் மரணமென்பர்.

மகரலக்கினம் 4-ல் சனி-செ. 8-ல் குரு. 10-ல் சு

**(19)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரசுகலாபாதிபதியுடன்கூடி கர்மஸ்தானமேறிய சுக்கிரனால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் குருவிருந்தால் ஜாதகன் எழுபத்து நான்கு வயதிற்குமேல் மரணமென்பர்.

மகரலக்கினம் 4-ல் சனி. 5-ல் சூ-ச-செ.

(20) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி சுகசப்தவலாபாதிபதிகளுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறி யிருந்தால் ஜாதகன் ஜ்ராபால் மெலிந்து இரண்டுவயதிற்குள் மரணமாவனென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி கேதுவுடன்கூடி ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய பிரகஸ்பதியை எட்டாமாதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் நாற்பத்தெட்டுவயதில் மரணமென்பர்.

மகரலக்கினம் 5-ல் சனி-சூ-பு-சு. 8-ல் ச.

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பஞ்சமரோகாஷ்டம பாக்கிய கர்மாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சந்திரனிருந்தால ஜாதகன்சனிபுக்தி ஐம்பத்திரண்டுவயதில் மரணம் அன்னியரால் கர்மமென்பர்.

மகரலக்கினம் 2-ல்ச 5-ல். சனி-ரா.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடனகூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை த்விதியமேறிய சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசைஆதி தாயும் கடைசி பிதாவுமரணம்ஜாதகன் ஐம்பத்தொருவயதுவரையில்தீர்க்கமென்பர்

மகரலக்கினம் 5-ல் சனி-செ-ச.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி சுகசப்தம லாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும் நோக்காமலிருந்தால் சனிதிசைமுழுதும் விவகாரம் பொருள்விரையம் அலைச்சல் துர்பலனுண்டாம் ஜாதகன் ஐம்பத்திரண்டுவரையில் தீர்க்கமென்பர்.

மகரலக்கினம் 2-ல் சு. 5-ல் சனி.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை த்விதியமேறிய பஞ்சம கர்மாதிபதியால் பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்காயிசு சனிதிசை கடைசியில்பிறந்தால் ஐந்துவயதிற்குள் பிதுமரணம் அடுத்து சகோதரமரணமென்பர்.

178298




## (26) (ஆறாமிடம்)

ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும் பாராமல் எட்டாமாதி திருதிய விரையாதிபதியுடன் கூடி சதுர்த்தகேந்திரமேறி யிருந்தால் ஜாதகன் இருபத்தாறு வயதில் மரணமென்பர்.

மகாலக்கினம் 2-ல் குரு. 6-ல் சனி. 12-ல் சூ-சி.

(27) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து த்விதீடஸ்தானமேறிய திருதிய விரையாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமாதி சந்திரனுடன்கூடி விரையமேறியிருந்தால்ஜாதகன ஐம்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

மகாலக்கினம் 6-ல் சனி. 8 ல் ரா.

(28) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானத்தில ராகுயிருந்தால் ஜாதகன் முப்பத்தைந்துவரையில் தீர்க்கம் சனிபுக்தி களத்திரரோகம்காராக்ரகம் கெட்டு நஷ்டம் செர்ப்பனாசமென்பர்.

மகாலக்கினம் 6-ல் சனி-சூ.

(29) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி அஷ்டமாதி பதியுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால் ஜாதகன் தீர்க்கம் நாற்பதுவயதிற்குமேல் கஷ்டம் சனிபுக்தி பிதுர்மரணம் ரோகம் விவகாரம் அபஜெயம் பாக்கியபிரிவினையென்பர்

மகாலக்கினம் 3-ல் செ. 6-ல் சனி-சு-பு.

(30) ஆறாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பஞ்சமரோக பாக்கிய கர்மாதிபதிகளுடன்கூடி திருதியமேறிய சுகலாபாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் சனிபுக்தி நாற்பத்தொன்பதுவரையில் மரணம் அடுத்து ஜலரோகத்தால் புத்திரனு மரணமென்பர்.




## (31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்கூடி லாபமேறிய திருதிய விரையாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அசுவனி தீர்க்கமில்லை பத்துமாதத்தில் மரணமென்பர்.

மகரலக்கினம் 2-ல் செ. 7-ல் சனி. 8-ல் சு.

**(32)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனிஏகனாய்தனித்துஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானமேறிய பஞ்சம கர்மாதிபதியை சுகலாபாதிபதியால் நேரே நோக்கபட்டிருந்தால் ஜாதகன் எழுபத்துநான்குவயதில் மரணமென்பர்.

மகரலக்கினத்தில் ச. 2-ல் செ. 7-ல் சனி.

**(33)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்துலக்கினகேந்திரம்பெற்ற சுகலாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டுஆயுள்ஸ்தானத்தில் பூமகன் நேர்பார்வையு மிருக்குமானால்ஜாதகன் நாற்பத்தைந்து வயதிற்குமேல் மரணமென்பர்.

மகரலக்கினம் 2-ல்பு. 7-ல் சனி-ரா.

**(34)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ராகுவுடன்கூடி ஒருவருமபாராமல் அஷ்டமஸ்தானத்தைத்விதியமேறிய ரோக பாக்கியாதிபதியால் நேரேநோக்கப்பட்டு புதன்திசையும் சேர்ந்தால்ஜாதகனுடனே மரணமென்பர்.

மகரலக்கினம் 7-ல் சனி-செ. .10-ல் சு.

**(35)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி சுகலாபாதி பதியுடன்கூடி ஒருவருமபாராமல எட்டாமாதி காமஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை சனிதிசையும சேர்ந்தால் நான்கு மாதத்தில் அக்கினிமூல மரணமென்பர்




**(36)** (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி ஏகனாய்தனித்து திருதிய விரையாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ராகுவுடன் கூடி பஞ்சமதிரிகோணமேறிய சுகலாபாதிபதி திசையுஞ்சேர்ந்தால் ஜாதகன் ஜெனனமுதல் ரோகத்தினால் துன்பப்பட்டு இரண்டுவயதில் மரணமடைவனென்பர்.

மகரலக்கினம் 2-ல் குரு. 5-ல்சு. 8-ல் சனி.

**(37)** எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்துத்விதியஸ்தானமேறிய தெய்வமந்திரியால் நேரேநோக்கப்பட்டு பஞ்சம திரிகோணமேறிய எட்டாமாதி திசையும் சேர்ந்தால் ஜாதகன் மூன்றுவயதில் ஜலரோகத்தினால் மரணமென்பர்.

மகரலக்கினம் 2-ல் ச. 8-ல் சனி.

**(38)** எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த் தனித்து த்வீதியஸ்தானமேறிய சப்தம கேந்திராதிபதியால் நேரே நோக்கப் பட்டிருந்தால் ஜாதகன் அருபதுவயதிற்குமேல் மரணம் சனிதிசை முப்பதும் கெர்ப்பமில்லையென்பர்.

மகரலக்கினம் 8-ல் சனி.

**(39)** எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமலிருந்தால் ஏழுபத்திரண்டு வயதுவரையில் ஜாதகன தீர்க்கம் சனிபுக்தி பதினேழில் குடும்பத்தில் கலகப்பட்டு அன்னியமாவனென்பர்.

மகரலக்கினம் 4-ல் ச-சு 8-ல் சனி-செ.

**(40)** எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சுகலாபாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி சந்திரனுடன் சேர்ந்து சதுர்த்தகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் ஒன்பதுவயதில் ஜலத்தில் மரணமென்பர்.




**(41)** (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ஒருவரும் பாராமல் எட்டாமாதி பஞ்சமகர்மாதிபதியுடன்கூடி விரையஸ்தானம் சுத்தமாயிருந்தால் சனிதிசை ஆதிவிவாகம் ஜாதகன் நாற்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

மகரலக்கினம் 3-ல் சு. 7-ல் ரா. 9-ல் சனி.

**(42)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்த்தனித்து திருதியஸ்தானமேறிய பஞ்சம கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஏழில் ராகுயிருந்தால் ஜாதகன் புத்திமாராட்ட முள்ளவனாய் ஐம்பத்தேழுவயதில் மரணத்தை யடைவனென்பர்.

மகரலக்கினம் 3-ல் குரு. 9-ல் சனி.

**(43)** ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஸ்வக்ஷேத்திர திருதிய விரையாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் குருதிசை புக்திகாலம் பதிமூன்றுமாதத்தில் ஜாதகன் வைசூரியால் மரணமாவனென்பர்.

மகரலக்கினம் 5-ல் சூ. 6-ல் செ. 9-ல் சனி.

(44) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய்தனித்து ரோகஸ்தானமேறிய சுகலாபாதிபதியால் நோக்கப்பட்டு பஞ்சம திரிகோணமேறிய அஷ்டமாதிபதிதிசையும் சேர்ந்தால் ஜாதகன்ஜெனித்த எட்டாம்நாள் மரணமென்பர்.

மகரலக்கினம் 8-ல் குரு. 9-ல் சனி-சூ

(45) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி அஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் திருதியவிரையாதிபதி யேறியிருந்தால் ஜாதகன் நாற்பத்தேழுவயதில் ஜலரோகத்தால் புண்ணியஸ்தலத்தில் மரணமாவனென்பர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி உச்சனுய் கேதுவுடன்கூடி சதுர்த்த கேந்திரமேறிய பஞ்சம ரோகாஷ்டமபாக்கிய கர்மாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பதில் ரோகமுண்டாய்ஐம்பத்தைந்தில்மரணமாவனென்பர்.

மகரலக்கினம் 2-ல் சூ. 4-ல்செ. 6-ல் குரு. 10-ல் சனி.

(47) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து செவ்வாய் ஏழாம்பார்வையும வியாழன் ஐந்தாம்பார்வையுமாகபார்க்கப்பட்டு த்விதியஸ்தானமேறிய எட்டாமாதிதிசையும நேர்ந்தால் ஜாதகன் மாதமொன்றில் மரணமாவனென்பர்.

மகரலக்கினம் 4-ல் சு 7-ல் குரு. 10-ல் சனி-செ.

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி சுகலாதிபதியுடன் கூடி சந்திரனுல் நேரேநோக்கப்பட்டு பிரகஸ்பதி சப்தமகேந்திரமேறியிருந்தால் ஜாதகன் அசுபதி ஜெனித்தவுடனே மரணமென்பர்

மகரலக்கினம் 4-ல் செ. 7-ல் குரு. 10-ல் சனி.

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து ஸ்வக்ஷேத்திரசுகலாபாதிபதியாலநேரேநோக்கப்பட்டுஎட்டுக்குஎட்டாமாதி உச்சம்பெற்றிருந்தால் ஜாதகன்பூராடம் பதினைந்துநாளில் மரணமென்பர்.

மகரலக்கினம் 8-ல் குரு-பு 10-ல் சனி.

**(50)** பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் புதன் வியாழன் கூடியிருந்தால் ஜாதகன் அருபத்துநான்கு வயதுவரையில் தீர்க்கமென்பர்.




**(51)** (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும பாராமல் ஆயுள்ஸ்தானத்தில்சந்திரன் சேதுகூடியிருந்தால் ஜாதகன்பூரம் அருபத்தைந்துவரையில் தீர்க்கமென்பர்.

மகரலக்கினம் 8-ல் ரா. .11-ல் சனி-பு.

**(52)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரோகபாக்கியாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் எழுபதுவயதிற்குமேல் மரணம் முப்பதுவயதில் அரசர் தண்டனை அவமானமுண்டென்பர்.

மகரலக்கினம் 8-ல் செ-கே. 11-ல் சனி.

**(53)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து மோக்ஷகாரகனுடன்கூடி ஆயுள்ஸ்தானமேறிய சுகலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பத்தொன்பது வரையில் தீர்க்கம் சனிதிசை சமயோகமென்பர்.

மகரலக்கினம் 10-ல் பு 11-ல் சனி-ச

**(54)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சபதமாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் தசமகேந்திரமேறிய ரோக பாக்கியாதிபதி திசையுமநேர்ந்தால் ஜாதகன் பதிமூன்று நாளில் மரணபாவனென்பர்.

மகரலக்கினம் 5-ல் ச. 11-ல் சனி.

**(55)** பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சமதிரிகோணமேறிய சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமாதி நீச்சம்பெற்றிருந்தால் ஜாதகன்தீர்க்கமில்லைமூன்றும்நாள் மரணமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டா மிடத்தில் ஆயுள்காரக சனி பஞ்சமரோக பாக்கிய கர்மாதிபதிகளுடன்கூடி சுகலாபாதிபதியால் எட்டாம் பார்வை பார்க்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன்பூரம் திருதியவயதில் ஜலததில் மரணமெனபர்.

மகரலக்கினம் 3-ல் குரு 8-ல் சூ-பு. 12-ல் சனி-ரா.

(57) பனிரெண்டாமிடத்தில்ஆயுள்காரகனுகிய சனி ராகுவுடன்கூடி சதுர்த்தகேந்திரமேறிய திருதிய விரையாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் ரவிபுதன் சேர்ந்திருந்தால்ஜாதகன் அருபத்தேழுவயது வரையில் தீர்க்கமெனபர்.

மகரலக்கினம் 6-ல் ச. 8-ல் குரு 12-ல் சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனிஏகனுய்தனித்து ரோகஸ்தானமேறிய சப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் குருவிருந்தால் ஜாதகன் தீர்க்கம் சனிதிசை அரசரால்சுகம் பிற்பாகம் பிதுர்மரணம் பிதுராக்ஷித மாருமென்பர்.

மகரலக்கினம் 8-ல் ச. 12-ல் சனி-செ.

(59) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி சுகலாபாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சந்திரனிருந்தால் ஜாதகன் அற்பாயிசு பதினெட்டுவயதில் மரணமாவனென்பர்.

மகரலக்கினம் 12-ல் சனி-குரு-செ.

(60) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி திருதிய சுகலாப விரையாதிபதிகளுடன்கூடி ஒருவரும் நோக்காமல் த்விதிய லாபாதிபதி திசையும் நேர்ந்தால் இரட்டை ஜெனனம் உடனே மரணமென்பர்.

மகரலக்கினம் சக்கரம் -12,

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்.

கும்பசனி ஆயுள்பலன்

கும்ப




லக்கினம்.

(1) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய்ஏகனாகதனித்து சப்தமகேந்திரமேறிய சுகபாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை ஆதி புத்திரமரணம் ஜாதகன்ஐம்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

கும்பலக்கினத்தில் சனி-செ. 8-ல் ரா.

(2) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதிய கர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை ஜெனித்த ஓராண்டில் மரணமென்பர்.

கும்பலக்கினத்தில் சனி 2-ல் -சூ-பு. 5-ல் செ.

(3) உதையத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய் தனித்து ஒருவருமபாராமல் ஆயுள்ஸ்தானத்தை பஞ்சமதிரிகோண மேறிய பூமகனால் நோக்கப்பட்டு எட்டாமாதி ரவியுடன்கூடி த்விதியஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் நாற்பத்தொன்பது வரையில் திர்க்கமென்பர்

கும்பலக்கினத்தில் சனி-செ-சு. 7-ல் ச.

(4) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதியசுக பாக்கிய கர்மாதிபதிகளுடன்கூடி சப்தமகேந்திரமேறிய ரோகாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பத்திரண்டுவயதில் விஷபீடையால் மரணமென்பர்.

கும்பலக்கினத்தில் சனி, 8-ல் ச-கே.

(5) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சந்திரன் கேதுகூடி யிருந்தால் ஜாதகன் மத்திமாயிசு முப்பத்தொருவயதில் மரணம் சனிபுக்தி விவாகம் கெர்ப்ப நஷ்டமென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திர த்ரிதிய லாபாதிபதியுடன்கூடி அஷ்டமஸ்தானமேறியகுஜன்சுக்கிரனிருவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை ஆதிஜாதகன் மூன்றுவயதில் ஜன்னியால் மரணமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சனி, 8-ல் செ.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து சப்தமகேந்திரம் பெற்ற திருதிய கர்மாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் சனிதிசை சமயோகம் இரண்டு வயதில் கண்டமுண்டாகிநிவர்த்தி அப்பால்ஜாதகன் இருபத்துநான்கில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சனி, 5-ல் குரு, 12-ல் பு.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை பிரகஸ்பதியால் ஐந்தாம்பார்வை பார்க்கப்பட்டு எட்டாமாதி விரையமடைந்திருந்தால் ஜாதகன் ஐம்பதிற்குமேல் மரணமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சனி-கே 8-ல் சூ.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் கூடி அஷ்டமஸ்தானமேறிய சப்தமகேந்திராதிமதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் எழுபத்தேழுவயதில் மரணம் சனிபுக்திகளத்திரமரணம் பாதப்பிரிவினை குடும்பபேதமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சனி, 5-ல் பு.

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி ஸ்வக்ஷேத்திரனாய் பஞ்சம திரிகோணமேறியிருந்தால் ஜாதகன் வெகுதீர்க்கம் யோகவான் வித்தை தேர்ச்சியென்பர்.




(11) (மூன்றாமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி நீசனாய் ரோகாதிபதியுடன் கூடி எட்டாமாதி ராகுவுடன்சேர்ந்து லாபஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் ஐம்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

கும்பலக்கினம் 3-ல் சனி. 9-ல் பு-சூ-குரு-சு.

(12) மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து நவதிரிகோணமேறிய ரவி புதன் குரு சுக்கிரன் நால்வரால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால்ஜாதகன் ஐம்பது வயதில் ஜலரோகத்தினால் சடுதி மரணமென்பர்.

கும்பலக்கினம் 3-ல் சனி-சு-பு. 8-ல் சூ.

(13) மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி சுகபஞ்சமாஷ்டம பாக்கியாதி பதியுடன்கூடி ஒருவரும்பாராமல் சப்தமகேந்திராதிபதி அஷ்டமஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் முப்பத்தெட்டுவரையில் தீர்க்கமென்பர்

கும்பலக்கினம் 3-ல் சனி-சூ. 9-ல் செ.

(14) மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சப்தமாதிபதியுடன்கூடி பாக்கியஸ்தானமேறிய திருதிய கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை சனிதிசையும் நேர்ந்தால் பிறந்தவுடனே மரணமென்பர்.

கும்பலக்கினம் 3-ல் சனி-கே. 12-ல் குரு

(15) மூன்றாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன் கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை ஒன்பதாம் பார்வையாகப் பார்க்கும் நீச்சகுருதிசையும்நேர்ந்தால் ஜாதகன் ஏழாம்நாள் மரணமென்பர்.




(16) (நான்காமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சுகபஞ்சமகர்ம அஷ்டம பாக்கியாதிபதிகளுடன்கூடி ஒருவருமபாராமல்ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அருபத்தைந்து வயதில் வயிற்போக்கால் மரணமென்பர்.

கும்பலக்கினம் 4-ல் சனி. 8-ல் ரா. 10-ல் சு.

(17) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து தசமகேந்திரமேறிய சுகபாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் ராகுவிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை வாரத்தில் மரணமென்பர்,

கும்பலக்கினம் 4-ல் சனி. 12-ல் சூ-பு-சு-குரு.

(18) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்த்தனித்து ரவி புதன் சுக்கிரன் மூவருடன்கூடி விரயத்தில் நீச்சமடைந்த பிரகஸ்பதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால்ஜாதகன் நாற்பத்தைந்துவயதில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 4-ல் சனி-ரா. 10-ல் செ. 12-ல் குரு.

(19) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன் கூடி ஸ்வக்ஷேத்திர கர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் நீச்சகுரு ஒன்பதாம் பார்வையுமிருக்குமானால் ஜாதகன் இருபத்திரண்டுவயதில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சூ-செ. 4-ல் சனி. 8-ல் ச.

(20) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுர்தானமேறிய ஆறுமாதிபை திருதிய சப்தம கர்மாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அசுவ்வாகனமுள்ளவன் ஐம்பத்திரண்டுவரையில் தீர்க்கமென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

மூன்றாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ரோகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சுக பாக்கியாதிபனேறியிருந்தால் ஜாதகன் அற்பாயிசு பதினொருவயதில் மரணமாவனென்பர்.

கும்பலக்கினம் 2-ல் சூ-பு. 5-ல். சனி. 8-ல் குரு.

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்நோக்காமல் த்விதிய லாபாதிபதி ஆயுள்ஸ்தானமேறிரவி புதனிவர்களின் நேர்பார்வையை யடைந்திருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை உடனே மரணமென்பர்.

கும்பலக்கினம் -5ல் சனி.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவருமபாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் சனிதிசையில சகோதரவிவாகம் அதுமுதல் சகோதரங்கள்விர்த்திதிசைகடைசி ஜாதகன மரணமென்பர்.

கும்பலக்கினம் 4-ல் பு-சு. 5-ல் சனி. 11-ல் ச.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய் தனித்து லாபமேறிய ரோகாதிபதியால் நேரேநோக்கபபட்டு எட்டாமாதி சுக்கிரனுடன்கூடி சுகஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் எழுபதுவயதிற்குமேல் மரணமென்பர்.

கும்பலக்கினம் 5-ல் சனி-பு. 8-ல் சூ. 11-ல் குரு.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரபஞ்சம அஷ்டமாதிபதியுடன்கூடி தனலாபாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் எண்பதுவயதிற்குமேல் மரணமென்பர்.




(26) (ஆறுமிடம்)

ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடனகூடி விரையமேறியபஞ்சம அஷ்டமாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் செவ்வாயிருந்தால் ஜாதகன் ஐந்துவயதில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 6-ல் சனி 10-ல் குரு.

(27) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து சசமகேந்திரமேறிய தனலாபாதிபதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் ஐம்பத்தேழுவயதில் வாயுவுரோகத்தினால் சடுதிமரணம் சனிதிசை சகோதரகர்மம் கஷ்டம் றுணமுண்டென்பர்.

குப்பலக்கினம் 6-ல் சனி-செ.

(28) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி திருதியகர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமலிருந்தால் சனிதிசைஆதி முப்பத்திரண்டுவயதில் தாயும் பின்பு ஜாதகனு மரணமாவார்களென்பர்.

கும்பலக்கினம் 5-ல் பு-சூ 6-ல் சனி-சு

(29) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி சுகபாக்கியாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் எட்டாமாதிசப்தமகேந்திராதிபதியுடன் சேர்ந்து பஞ்சமஸ்தான மேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்தேழுவயதில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் பு. 6-ல் சனி-ரா.

(30) ஆறுமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன்சேர்ந்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி நீசனாய் த்விதியஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் அறுபத்தொருவயதில் மரணமாவனென்பர்.




(31) (ஏழாமிடம்)

ஏழாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் புதன் ரவிகூடி யிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை நான்குவயதில் மரணம் ஜெனனகாலம் தாய்க்குக் கஷ்டம் பின்பு பிதாவுக்கு ரோகமென்பர்.

கும்பலக்கினம் 7-ல் சனி-குரு.

(32) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி த்விதிய லாபாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானம்சுத்தமாயிருந்தால் இருபதில் சனிபுக்திகாலம் விவாகம் இருபத்தொன்றில் களத்திரம் ஜலத்தில்மரணம் ஜாதகன் நாற்பதுவயதிற்குமேல் மரணமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் ச 7-ல் சனி-குரு-சு-கே.

(33) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி குரு சுக்கிரன் கேது மூவருடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை ரோகாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால்ஜாதகன் எழுபத்துமூன்றுவயதில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 7-ல் சனி-பு-சூ.

(34) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி பஞ்சமசப்தம அஷ்டமாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பதிற்குமேல்மரணம் சனிதிசை சூரிய புக்தி களத்திரமரணம் விரையம் விவகாரமுண்டென்பர்.

கும்பலக்கினம் 7-ல் சனி-செ. 8-ல் ரா.

(35) ஏழாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி திருதிய கர்மாதிபதி யுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் ராகு யிருந்தால் ஜாதகன் அருபத்தொன்றில் சன்னுசயோகம்பெற்றுஎழுபத்துமூன் றில் மரணத்தை யடைவனென்பர்.




(36) (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி ஏகனுய்நின்று ஒருவரும்பாராமல் அஷ்டமாதிபதி குஜன் சுக்கிரன் ராகுவுடன் கூடி லாபஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்தெட்டுவயதில் வாத ரோகத்தினுல் மரணமென்பர்.

கும்பலக்கினம் 8-ல் சனி-ரா. 9-ல் குரு.

(37) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் அதற்கிரண்டாமிடத்தில் த்விதிய லாபாதிபதியி ருந்து திசையும்சேர்ந்தால் ஜாதகன் இருபத்துநான்குவயதில்மரண மாவனென்பர்.

கும்பலக்கினம் 6-ல் பு-சு. 8-ல் சனி.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி சுகபாக்கியாதி பதியுடன்கூடி ரோ கஸ்தான மேறியிருந்தால் சனிதிசைஆதி பிதுர்வர்க்ககர்மம் களத் திரவிரோதம் ஜன்னியால்கண்டம் புத்திரஜெனனமென்மர்.

கும்பலக்கினம் 5-ல் செ. 8-ல். சனி-கு-ச.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ரோக சப்தமாதி பதிகளுடன்கூடி பஞ்சமதிரிகோணமேறிய திருதிய கர்மாதிபதியா ல் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை சனிதிசையும் சேர் ந்தால் மூன்றும்நாள் மரணமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் செ. 8-ல் சனி-ரா. 12-ல் பு.

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ராகுவுடன் கூடி த்விதியஸ்தானமேறிய திருதிய கர்மாதிபதியால் நேரே நோக்கப்ப ட்டு எட்டாமாதி விரையமடைந்திருந்தால் ஜாதகன் முப்பத்தொன் பதுவரையில் தீர்க்கமென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி உச்சனாய் திருதிய கர்மாதிபதியுடன் கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமேறிய மோக்ஷகாரகனை பிரகஸ்பதியால் ஐந்தாம்பார்வை பார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஏழுமாதத்தில் மரணமென்பர்,

கும்பலக்கினம் 8-ல் செ-ரா. 9-ல் சனி. 12-ல் குரு.

(42) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் குஜன் ராகுகூடி விரையமடைந்த த்விதிய லாபாதிபதி திசையும்நேர்ந்தால் ஜாதகன் நான்கு வயதில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 3-ல் பு-சு-செ. 5-ல் குரு. 9-ல் சனி.

(43) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து பஞ்சமதிரிகோணமேறிய தனலாபாதிபதியால் நோக்கப்பட்டு எட்டாமாதி ரவிகுஜனுடன்கூடி திருதியஸ்தானமேறியிருந்தால் ஜாதகன் அருபத்துநான்குவயதில் அகிசாரபேதியால் மரணமென்பர்.

கும்பலக்கினம் 9-ல் சனி. 10-ல் பு-சு-குரு-செ.

(44) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி ரவி குஜன் குரு மூவருடன்கூடி சசமகேந்திரமேறி ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் சனிதிசையில் இரண்டுகண்டமுண்டென்பர்.

கும்பலக்கினத்தில் குரு 8-ல் செ 9-ல் சனி

(45) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து லக்கினகேந்திரம் பெற்ற தனலாபாதிபதியால் நோக்கப்பட்டு அஷ்டமஸ்தானத்தில் திருதிய கர்மாதிபதிபேறியிருந்தால் ஜாதகன் முப்பத்தெட்டிற்குமேல மரணமெனபர்.




(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதியசுகபாக்கிய கர்மாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் ஜாதகன இருபத்தொருவயதில்மரணம் அதாம்முதல் குடும்பத்தில் றுணமுண்டென்பர்.

கும்பலக்கினம் 10-ல் சனி-சூ-பு.

(47) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பஞ்சம சப்தம அஷ்டமாதிபதிகளுடன் கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால ஜாதகன் விவாகமில்லாமல் அருபதிற்குமேல் மரணமென்பர்.

கும்பலக்கினம் 8-ல் குரு-சு 10-ல் சனி.

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்தானத்தில் த்விதிய சுகபாக்கியலாபாதிபதிகள் கூடியிருந்தால் சனிதிசைமுதல் ஜாதகன் கஷ்டமடைந்து ஐம்பத்தேழுவயதில் மரணத்தை யடைவனென்பர்.

கும்பலக்கினம் 4-ல் ச. 10-ல் சனி.

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து சுகஸ்தானமேறிய ரோகாதிபதியால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் சனிதிசை புக்தியில் களத்திரமரணம் உத்தியோகஷ்டம் தொழில்பேதம் கலகம் கர்மமூலம் பொருள்சேதம் அக்கினிமூலம்கஷ்டம் அன்னகஷ்டம் மனவெருப்புண்டாகி ஜாதகன் மரணமென்பர்.

கும்பலக்கினம் 7-ல் செ-சூ-பு. 10-ல் சனி-ச.

(50) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரோகாதிபதியுடன்கூடி ரவிபுதனுடன் சேர்ந்து சப்தமகேந்திரமேறிய திருதியகர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபத்துமூன்று வயதில் மரணமென்மர்.




(51) (பதினோராமிடம்)

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து பஞ்சம திரிகோணமேறிய சப்தமகேந்திராதி பதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபது வயதிற்குமேல் மரணமென்பர்.

கும்பலக்கினம் 5-ல் சூ-ச. 11-ல் சனி-ரா.

(52) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ராகுவுடன் கூடி பஞ்சமஸ்தானமேறிய ரோகசப்தமாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பதுவயதில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 11-ல் சனி-சு-ரா.

(53) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி சுக்கிரன் ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் சுகபாக்கியாதிபதி திசையும் நேர்ந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை மாதமொன்றில் மரணமாவனென்பர்.

கும்பலக்கினம் 7-ல் செ. 11-ல் சனி

(54) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் சபதமகேந்திரமேறிய திருதிய கர்மாதிபதி திசையும்நேர்ந்தால் ஜாதகனுக்கு மூன்றுவயதிற்குள் நான்கு சர்மம் கடைசி ஜாதகனு மரணமென்பர்.

கும்பலக்கினம் 8-ல் சு. 9-ல் செ. 11-ல் சனி-கே.

(55) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி கேதுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சுக்கிரனிருந்து நவதிரிகோணமேறிய திருதிய கர்மாதிபதி திசையில்பிறந்தால் ஜாதகன் முப்பத்திரண்டு வரையில் தீர்க்கமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டா மிடத்தில் ஆயுள்காரகசனி ஸ்வக்ஷேத்திரனாய் திருதிய கர்மாதிபதியுடன்கூடி ரவி மதி புதன் மூவருடன்சேர்ந்து ஆயுள்ஸ்தானமேறியபிரகஸ்பதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபத்தாருவயதில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 2-ல் பு. 6-ல் ச. 12-ல் சனி.

(57) பனிரெண்டாமிடத்தில்ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஸ்வக்ஷேத்திர ரோகாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் எட்டாமாதி நீச்சம்பெற்றிருந்தால் ஜாதகன் ஐம்பத்திரண்டுவைதிற்குமேல் மரணமென்பர்.

கும்பலக்கினம் 8-ல் ரா. 12-ல் சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் அஷ்டமஸ்தானத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் முப்பதிற்குமேல் மரணம் சனிதிசையில் குடும்பத்தில் பிரிவு மனஸ்தாபம் உண்டாகி வேறுபடுமென்பர்.

கும்பலக்கினம் 12-ல் சனி பு குரு சு.

(59) பனிரெண்டாமிடத்கில் ஆயுள்காரகனாகிய சனி த்விதிய சுகபஞ்சம அஷ்டமபாக்கிய லாபாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமலிருந்தால ஜாதகன் தீர்க்கமில்லை பத்துநாளில் மரணமென்பர்.

கும்பலக்கினம் 8-ல் குரு சூ 12-ல் சனி.

(60) பனிரெண்டாமிடக்கில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஆயுள்ஸ்தானத்தில் சப்தமாதிபதியுடன்கூடயை தனலாபாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் முப்பதுவயதிற்குமேல் மரணம் கஷ்டஜீவனமென்பர்.

கும்பலக்கினம் சக்கரம் -12,

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

சப்தகாண்டங்களில் ஏழாம்பாகமாகிய

# சனிகாண்டம்.

மீனசனி ஆயுள்பலன்

மீன  லக்கினம்.



(1) உதையத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை த்விதியமேறிய ஜென்மகர்மாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் அருபதுவயதிற்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினத்தில் சனி-பு-சு.

(2) உதயத்தில் ஆயுள்காரகனாகிய சனி திருதியசுகசப்தமஅஷ்டமாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானமும் சுத்தமாயிருந்தால் சனிதிசை ஆதிஜாதகன் நீண்டரோகத்தினால் மரணமென்பர்.

மீனலக்கினத்தில் சனி-குரு 7-ல் சூ 8-ல் செ-சு-பு.

(3) உதயத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திர ஜென்மகர்மாதிபதியுடன்கூடி ரோகாதிபதிபால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் குஜன் புதன் சுக்கிரன் மூவர்சேர்ந்திருந்தால் ஜாதகனுக்கு இருபதுவயதிற்குள் பிதுராக்ஷிதமெல்லா மழிந்து ரணத்தினால் துன்பப்படுவனென்பர்.

மீனலக்கினத்தில் சனி. 12-ல் குரு.

(4) உதயத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தை விரையமேறிய ஜென்ம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் முப்பதுவயதிற்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினத்தில் சனி-குரு. 7-ல் சூ.

(5) உதயத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திர லக்கின தசமாதிபதியுடன்கூடி சப்தமகேந்திரமேறிய ரோகஸ்தானாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் இருபதுவயதிற்குள் சகோதரமெல்லா மரணமென்பர்.




(6) (இரண்டாமிடம்

இரண்டாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி நீசனாய் ஏகனாக தனித்து ஒருவரும் பாராமல் சப்தமகேந்திரத்தில் பஞ்சமதிரிகோணாதிபனேறியிருந்தால் ஜாதகன்முப்பத்தைந்துவயதில் மகோதர வியாதியால் மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 2-ல் சனி-கே. 7-ல் பு 8-ல் சூ-செ.

(7) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி கேதுவுடனகூடி ஆயுள்ஸ்தானமேறிய த்விதியரோகபாக்கியாதிப திகளால் நேரே நோக்கப்பட்டு சப்தமத்தில் பண்டிதனிருந்தால் ஏழுவயதில் சகோதரன் மரணமாவனென்பர்.

மீனலக்கினத்தில்-பு. 2-ல் சனி. 10-ல் குரு.

(8) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி எகனுய் தனித்து தசமகேந்திரமேறிய ஸ்வக்ஷேத்திர ஜெனம கர்மாதிபதியால் நோக்கப்பட்டு ஏழாமாதி லக்கினகேந்திர மேறியிருந்தால் ஜாதகன்ஐம்பத்திரண்டிறகுமேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 2-ல் சனி-கே. 8-ல் ரா 11-ல் செ.

(9) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி கேதுவுடன்கூடி லாமஸ்தானமேறிய தனபாக்கியாதி பதியால் நோக்கம்பட்டு எட்டாமிடத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் இருபத்திரண்டு வயதிற்கு மேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 2-ல் சனி சூ செ 5-ல் சு-ச.

(10) இரண்டாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி த்விதிய ரோக பாக்கியாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி ஸ்வ க்ஷேத்திர சந்திரனுடன்சேர்ந்து பஞ்சமஸ்தானமேறி யிருந்தால் ஜாதகனதீர்க்கமில்லே ஜெனித்தவுடனே மரணமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| ல | | சனி ரா | |
| | | | |
| | | | |
| | | | கு-பு |

(11) (மூன்ருமிடம்)

மூன்ருமிடத்தில் ஆயுள் காரகனுகிய சனி ராகுவுடன்கூடி ஒருவரும் பாராமல் ஆயுள்ஸ்தானம் சுத்தமாகி அதற்குப் பனிரெண்டாமிடத்தில் ரவி புதன சேர்ந்திருந்தால் ஜாதகன் இருபதுவயதிற்குள் மரணமென்பர்.

மீனலக்கினம் 3-ல் சனி ரா. 8-ல் சூ 9-ல் பு.

(12) மூன்ருமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ராகுவுடன் கூடி நவதிரிகோணமேறிய சுகசப்தமாதிபதியால் நேரே நோக்கப்பட்டு எட்டாமிடத்தில் சூரியனிருந்தால் சனிதிசை ஐம்பத்துமூன்று வயதில் ஜாதகன் மரணமென்பர்.

மீனலக்கினம் 3-ல் சனி. 8-ல் ரா

(13) மூன்ருமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி எகனுய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் ராகுயிருந்தால ஜாதகன் மத்திமாயிசு இருபது வயதிற்குமேல் மரணம சனி புக்தி தாய் மரணம் களத்திரரோகமென்பர்.

மீனலக்கினம் 3-ல் சனி-ச. 8-ல். செ. 9-ல் பு.

**(14)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி பஞ்சமாதிபதியுடன்கூடி நவதிரிகோணமேறிய சுகசப்தமாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் தனபாக்கியாதிபனேறியிருந்தால் ஜாதகன் நாற்பத்தொன்பதிற்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 3-ல் சனி-பு. 9-ல் குரு.

**(15)** மூன்றுமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி சுகசப்தமாதிபதியுடன்கூடி பாக்கியமேறிய ஜென்ம கர்மாதிபதியால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் எழுபதிற்குமேல் மரணமென்பர்.




**(16)** (நான்காமிடம்)

நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்த்தனித்து தசமகேந்திரமேறிய தன பஞ்சம பாக்கியாதிபதிகளால் நேரே நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன அருபத்தொன்பது வயதில் மரணமென்பர்.

மீனலக்கினம் 4-ல் சனி-பு-சூ-ச 7-ல் ரா.

**(17)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி சுகபஞ்சமரோகசப்தமாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஏழாமிடத்தில் ராகுயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லைஇரண்டுவயதில்மரணமாவனென்பர்

மீனலக்கினம் 4-ல் சனி. 7-ல் குரு.

**(18)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்த்தனித்து ஒருவரும்பாராமல் அதற்கு நான்காமிடத்தில் ஜென்ம கர்மாதிபதியிருந்து ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் பதினெட்டு மாதத்தில் வயிற்போக்கால் மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 4-ல் சனி. 8-ல் குரு-ச.

**(19)** நான்காமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து அதற்குப் பஞ்சமதிரிகோணத்தில் பஞ்சமாதிபதியுடன் கூடிய ஜென்ம கர்மாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை மூன்றுமாதத்தில் மரணமென்பர்.

மீனலக்கினம் 4-ல் சனி. 7-ல் ச-ரா.

(20) நான்காமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் அதற்கு நான்காமிடத்தில் சந்திரன் ராகுகூடி ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் இருபதுவயதிற்குமேல் மரணமென்பர்.




(21) (ஐந்தாமிடம்)

ஐந்தாமிடத்தில் ஆயுள் காரகனாகிய சனி ஏகனாய்தனித்து ஒருவரும் பாராமல் எட்டாமாதி லக்கினகேந்திரம் பெற்று ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன நாற்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 5-ல் சனி. 7-ல் ரா.

(22) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் சப்தமகேந்திரத்தில் ராகுயிருந்து ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் நாற்பத்தொன்பதுவயதில்மரணம் சனிபுக்தி பிதுர்மரணம் புத்திரநாசமென்பர்.

மீனலக்கினம் 5-ல் சனி-செ. 7-ல் சூ 10-ல் பு.

(23) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி த்விதிய பாக்கியாதிபதியுடன்கூடி லாபமேறிய சுகசப்தமாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் சூரியனிருந்தால் ஜாதகன் மத்திமாயிசு முப்பத்தொன்பதுவயதில் மரணமென்பர்.

மீனலக்கினம் 5-ல் சனி-பு-சு. 8-ல் செ.

(24) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி திருதிய சுகசப்தம அஷ்டமாதிபதிகளுடன்கூடி ஒருவரும்நோக்காமல் ஆயுள்ஸ்தானத்தில் த்விதிய பாக்கியாதிபதி ஏறியிருந்தால் ஜாதகன் நாற்பத்திரண்டு வயதில் ஆயுகமூல மரணமென்பர்.

மீனலக்கினம் 5-ல் சனி-ச. 8-ல் கே. 11-ல் செ.

(25) ஐந்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரபஞ்சமாதிபதியுடன்கூடி லாபமேறிய தனபாக்கியாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானத்தில் கேதுயிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை மூன்றுமாதத்தில் மரணமென்பர்.




(26) (ஆருமிடம்)

ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும் பாராமல் எட்டாமாதிஸ்வக்ஷேத்ரஜென்மகர்மாதிபதியுடன்கூடி லக்கினகேந்திரத்தில்உச்சம்பெற்றிருந்தால் ஜாதகன் அருபத்தெட்டுவயதிற்குமேல்மரணம் சனிதிசைவிவாகம் புத்திதாய்மரணம் அவிழ்தமூலப்ஜீவனமென்பர்

மீனலக்கினத்தில் செ. 6-ல் சனி-ரா.

(27) ஆருமிடத்தில ஆயுள்காரகனாகியசனி ராகுவுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தை லக்கினகேந்திரம்பெற்றத்விதிய பாக்கியாதிபதியால் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் எழுபத்தைந்து வயதுவரையில் தீர்க்கம் சனிதிசையில் இரண்டுகண்டமுண்டாம் நிவர்த்தியென்பர்.

மீனலக்கினம் 6-ல் சனி. 7-ல் பு.

(28) ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய்தனித்துஒருவரும்பாராமல் அதற்கிரண்டாமிடத்தில் சுகசப்தமாதிபதி ஸ்வக்ஷேத்திர வுச்சனாக வமைந்திருந்தால் சனிதிசை முற்பாகம் எழுவயதில் ஜாதகன் மரணமென்பர்.

மீனலக்கினம் 6-ல் சனி-சூ-பு-ச. 7-ல் சு.

(29) ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி சுகபஞ்சமரோக சப்தமாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி சப்தமகேந்திரத்தில் நீச்சம்பெற்றிருந்தால் அஷ்டமாதிபன்திசையில் தாய்மரணம் அன்னியதேசம் பிதாமரணம் கொடியபலனென்பர்.

மீனலக்கினம் 6-ல் சனி. 9-ல் ச-செ.

(30) ஆருமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவருமபாராமல் எட்டாமிடமும் சுத்தமாகி பிதுர்ஸ்தானத்தில் மதிகுஜன் கூடியிருந்தால் ஜாதகன் அருபதிற்குமேல் மரணம் சனிதிசை முற்பாகத்தில் பிதுர்மரணமென்பர்.




(31) (எழாமிடம்)

எழாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பஞ்சம திரிகோணாதிபதியுடன் கூடி லக்கின கேந்திரம் பெறற ஸ்வக்ஷேத்திர வுச்ச ஜென்ம திருதிய அஷ்டம கர்மாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமென்பர்,

மீனலக்கினம் 3-ல் ரா-ச. 7-ல் சனி-செ. 9-ல் சு-சூ-பு.

**(32)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி தனபாக்கியாதி பதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ரவிபுதனுடன்சேர்ந்து நவதிரிகோணமேறிய எட்டாமாதியை திருதியமேறிய சந்திரன் ராகுவால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் இரண்டுவயதில் சுவீகாரமாகி வைசூரியால் மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 7-ல் சனி-சு. 8-ல் ச-கே.

**(33)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி திருதியஅஷ்டமாதிபதியுடன்கூடி ஒருவரும்நோக்காமல் ஆயுள்ஸ்தானத்தில சந்திரன் கேதுசேர்ந்திருந்தால ஜாதகன் தீர்க்கமில்லை சனிபுக்திஆறுமாதத்தில் ஜாதகன்மரணமென்பர்.

மீனலக்கினம் 2-ல் குரு-ரா. 7-ல் சனி-ச.

**(34)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி பஞ்சம திரிகோணாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆரிஸ்ஸ்தானத்தை த்விதியமேறிய வியாழன் ராகுவிருவரால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் மூன்றுவயதில் மரணமென்பர்.

மீனலக்கினம் 7-ல் சனி. 8-ல் சூ-பு-ரா.

**(35)** ஏழாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமிடத்தில் ரவிபுதன்ராகு மூவர்கூடியிருந்தால் ஜாதகன் நாற்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| ல | | | |
| | | | |
| | | | |
| | | சனி கே | பு |

**(36)** (எட்டாமிடம்)

எட்டாமிடத்தில் ஆயுள்காரக னாகிய சனி உச்சனாய் கேதுவுடனகூடி ஒருவரும் பாராமல் அதற்குப்பனிரெண்டில் புதனிருந்தால் ஜாதகன் ஐம்பத்தொன்பதில் மரணம் சகோதரனும அடுத்து மரணமென்பர்.

மீனலக்கினத்தில் சூ-பு-சு. 8-ல் சனி.

**(37)** எட்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி சுகயோக சப்தமாதிபதிகளுடன் கூடி லக்கினகேந்திரமேறியிருந்தால் ஜாதகன் அறுபத்தாரு வயதில மரணம் சனிதிசை யாத்திரை களத்திரமரணமென்பர்.

மீனலக்கினம் 7-ல் ரா. 8-ல் சனி-சு.

(38) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ரோகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் சப்தமகேந்திரத்தில் ராகுயிருந்தால்ஜாதகன்தீர்க்கம் சனிதிசைகடைசி பிதா அன்னியதேசமரணம ஜாதகன் பிதா மாமன்வீட்டில் வளர்வனென்பர்.

மீனலக்கினம் 7-ல் சூ-சு. 8-ல் சனி-செ-பு.

(39) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி த்விதியசுகசப்தம பாக்கியாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி ரவியுடன்சேர்ந்து ஏழாமிடமேறியிருந்தால் சனிபுக்தி பிதாவுக்கு உத்தியோகம் ஜாதகன் வயதொன்றில் மரணமென்பர்.

மீனலக்கினம் 4-ல் பு-சூ. -ல் சனி. 12-ல் குரு

(40) எட்டாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து விரையமேறிய பிரகஸ்பதியால் பார்க்கப்பட்டு சுகஸ்தானத்தில் ரவி புதன் கூடியிருந்தால் சனிதிசை ஆதி பிதுர் மாதுர் கலகம் தாய்மரணம் அப்பால் ஜாதகன் மாமன்வீட்டில் வளர்வனென்பர்.




(41) (ஒன்பதாமிடம்)

ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்தனித்து ஒருவரும் பாராமல் எட்டாமாதிஜென்மகர்மாதிபதியுடன்கூடி சப்தமகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் சனிபுக்தி நாற்பத்திரண்டுவயதில் தனிமையாய் காட்டில் மரணமாவனென்பர்.

மீனலக்கினம் 6-ல் செ. 7-ல் குரு. 9-ல் சனி

(42) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி ஏகனுய்தனித்து ரோகஸ்தானமேறிய த்விதிய மாக்கியாதிபதியால் நோக்கப்பட்டு சப்தமத்தில் ஜென்ம கர்மாதிபதி ஏறியிருந்தால் ஜாதகன் முப்பது வயதிற்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 6-ல் செ. 9-ல் சனி-பு-குரு-சு.

(43) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி புதன்குருசுக்கிரன் மூவருடன்கூடி ரோகஸ்தானமேறிய தனபாக்கியாதி பதியால் நோக்கப்பட்டிருந்தால் சனிதிசை முற்பாகம் பதினேழுவயதில் ஜாதகன் மகோதரவியாதியால் மரணமென்பர்.

மீனலக்கினம் 7-ல் குரு. 9-ல் சனி-சு-செ.

(44) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி த்விதியதிருதிய அஷ்டமபாக்கியாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஏழாமிடத்தில் வியாழனிருந்தால் ஜாதகன்தீர்க்கமில்லை ஆறுமாதத்தில் மரணமென்பர்.

மீனலக்கினம் 5-ல் செ. 8-ல் குரு 9-ல் சனி-சு-சூ.

(45) ஒன்பதாமிடத்தில் ஆயுள்காரகனுகியசனி திருதிய ரோக அஷ்டமாதிபதிகளுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தான மேறிய பிரகஸ்பதியை நீச்சகுஜனுல் நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை வாரத்தில் மரணமென்பர்.

| | | | |
|---|---|---|---|
| ல | | | |
| | | | |
| | | | |
| சனி ச | | | சூ-பு சு |

(46) (பத்தாமிடம்)

பத்தாமிடத்தில் ஆயுள்காரக னுகிய சனி பஞ்சமாதிபதியுடன் கூடி ஒருவரும் நோக்காமல் எட்டாமாதி சூரியன் புதனுடன்சேர்ந்து சப்தமகேந்திர மேறியிருந்தால் ஜாதகன் முப்பதுயைதில்பரதேசியாவனென்பர்.

மீனலக்கினத்தில்-சு-சூ. 10-ல் சனி-குரு.

(47) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஸ்வக்ஷேத்திரஜென்ம கர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் எட்டாமாதி ரவியுடன்சேர்ந்து லக்கினகேந்திர மேறியிருந்தால் ஜாதகன அருபது வயதிற்குமேல் மரணமென்பர்.

மீன்லக்கினம் 4-ல் செ-சு. 10-ல் சனி.

(48) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய் தனித்து சதுர்த்தகேந்திரமேறிய தன திருதிய அஷ்டமபாக்கியாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டிருந்தால் இரட்டைபெண்ணுக ஜெனனம் ஒராண்டில் மரணமென்பர்.

மீனலக்கினம் 4-ல் சு. 10-ல் சனி.

(49) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனுகிய சனி ஏகனுய்நின்றுசுக கேந்திரமேறிய திருதிய அஷ்டமாதிபதியால் நேரேநோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானம் சுத்தமாயிருந்தால் ஜாதகன் அருப்துவயதில் மரணமென்பர்.

மீனலக்கினம் 4-ல் செ. 10-ல் சனி-ச.

(50) பத்தாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி பஞ்சம திரிகோணாதிபதியுடனகூடி த்விதிய பாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டு சனிதிசையும் நேர்ந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை மரணம்பின்பு தாயுமடுத்து மரணமென்பர்.




(51) (பதினோராமிடம்).

பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஸ்வக்ஷேத்திரனாய் ஏகனாக தனித்து ஒருவரும்பாராமல் சப்தம கேந்திரத்தில் பஞ்சமாதிபதி யேறியிருந்தால் ஜாதகன் ஐம்பத்தைந்து வயதிற்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 7-ல் சு-கே. 11-ல் சனி

(52) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதி கேதுவுடன்கூடி சப்தம கேந்திர மேறியிருந்தால் ஜாதகன் மத்திமாயிசு முப்பதுவயதிற்கு மேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 2-ல் குரு. 8-ல் சூ-ரா 11-ல் சனி.

(53) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தான மேறிய சூரியன் ராகுவை ஜென்மகர்மாதிபதியால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பத்தொருவயதில் ஜலரோகத்தினால் மரணமென்பர்.

மீனலக்கினத்தில் ச-குரு. 11-ல் சனி-சூ.

(54) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ரோகாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் சப்தமகேந்திரத்தை லக்கின மேறிய சந்திரன் வியாழனிருவரால் நேரேநோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் ஐம்பத்தைந்து வயதிற்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 7-ல் செ-ரா. 11-ல் சனி.

(55) பதினோராமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ஒருவரும்பாராமல் ஏழாமிடத்தில் செவ்வாய் ராகுகூடியிருந்தால் ஜாதகன் தீர்க்கமில்லை குஜன்புக்தியும் நேர்ந்தால் ஓராண்டில் மரணமென்பர்.




(56) (பனிரெண்டாமிடம்)

பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரக சனி ஸ்வக்ஷேத்திரனாய் மதி குஜன் ராகு மூவருடன்கூடி ஒருவருமபாராமல் எட்டாமாதி புதனுடன்சேர்ந்து சப்தம கேந்திரமேறியிருந்தால் ஜாதகன் இருபத்தைந்து வயதில் மரணமென்பர்.

மீனலக்கினம் 7-ல் சூ-சு-ரா. 12-ல் சனி.

(57) பனிரெண்டாமிடத்தில்ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து ஒருவரும்பாராமல் எட்டாமாதிரவி ராகுவுடன்கூடி சப்தமஸ்தான மேறியிருந்தால் ஜாதகனுக்கு ஐம்பத்திரண்டில் கண்டமுண்டாகி நிவர்த்தி ஐம்பத்தெட்டுக்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 2-ல் செ 4-ல் குரு. 8-ல் பு. 12-ல் சனி.

(58) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகியசனி ஏகனாய்தனித்து சுகஸ்தானமேறிய பிரகஸ்பதியால் நோக்கப்பட்டு ஆயுள்ஸ்தானமேறிய சுகசப்தமாதிபதியை அங்காரகனால் நேரேபார்க்கப்பட்டிருந்தால் ஜாதகன் அறுபதுவயதிற்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 6-ல் சூ-சு. 8-ல் குரு 12-ல் சனி.

(59) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஏகனாய் தனித்து ரோகஸ்தானமேறிய திருதியரோக அஷ்டமாதிபதிகளால் நேரேநோக்கப்பட்டு எட்டாமிடத்தில் வியாழனிருந்தால் ஜாதகன் தீர்க்கம் எழுபத்திரண்டிற்குமேல் மரணமென்பர்.

மீனலக்கினம் 2-ல்செ. 8-ல் சு. 12-ல் சனி-குரு.

(60) பனிரெண்டாமிடத்தில் ஆயுள்காரகனாகிய சனி ஜென்ம கர்மாதிபதியுடன்கூடி ஒருவரும்பாராமல் ஆயுள்ஸ்தானத்தில் சுக்கிரனிருந்து ஸ்வக்ஷேத்திர தனபாக்கியாதிபதியால் நேரே நோக்கப்பட்டிருந்தால் ஜாதகன் பூரணாயுள் தனவானாயும் பரோபகாரியாயுமிருப்பனென்பர்.

மீனலக்கினம் சக்கரம் -12,

முற்றிற்று.

சென்னை-600 008.